கழக வெளியீடு-உஎக

349

# சங்கநூற் கட்டுரைகள்

அல்லது

# பழந்தமிழர் நாகரிகம்

[முதற் புத்தகம்]


மறைத்திரு. மறைமலையடிகள் மாணவரும்
கழகத் தமிழ்ப் புலவருமான

**தி. சு. பாலசுந்தரன்**

(இளவழகனர்)

எழுதியவை.



திருநெல்வேலி, தென்னிந்திய
சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம் லிமிடெட்,
திருநெல்வேலி :: சென்னை.

விக்கிரம—கார்த்திகை.

[Copy-right]

*Published by*

THE SOUTH INDIA SAIVA SIDDHANTA WORKS
:: PUBLISHING SOCIETY, TINNEVELLY, LTD., ::
TIRUNELVELI, & MADRAS.
DECEMBER 1940.

The Jupiter Press, Madras.

# பதிப்புரை

மக்கள் வாழ்க்கை தெளிவும் நல்ல நாகரிகமும் உடைய தாக விளங்கவேண்டும்; எல்லாரும் நலமாகவும் வளமாக வும் வாழவேண்டும். இவை பழந் தமிழர்களான நம் முன் னோர்களின் கொள்கையும் நடையுமாகும். அரசியலோ, அரு ளியலோ; அறிவுரையோ, விரிவுரையோ எவையானாலும் இந் நன்மைக்கு உதவியாயிருப்பனவே மக்களுக்கு வேண்டுவன. சங்க நூல்கள் இங்ஙனம் எல்லா மக்களும் நலமாகவும் வள மாகவும் தெளிவாகவும் வாழவே வழி வகுக்கின்றன.

சங்க நூல்களில் எல்லாருடைய நிலைகளுக்குந் தக்கபடி கருத்துக்கள் அமைந்திருக்கின்றன. மிக எளிய உலக இன் பம் முதல் மிக உயர்ந்த மெய்யுணர்வு இன்பம் வரையில் அதன்கண் கருத்துக்கள் நுவலப்படுகின்றன. எல்லாப் பொருளும் இதன்பால் உள; இதன்கண் இல்லாத எப் பொருளும் இல்லை. கருத்துக்கள் எடுக்க எடுக்கக் குறை யாதனவுமாகும். இச் சங்க நூல்களின் பிழிவே பிறநூல் கள். சங்க நூல்களின் புலனெறி வழக்கம் இன்றுவரையில் நடைபெற்று வருகின்றது.

இவை பண்டைக்கால நூல்க ளானமையால், இப் போது அவற்றைப் படித்து அவற்றில் நிரம்பிக் கிடக் கும் அரும் பெருங் கருத்துக்களைத் தெரிந்துகொள்வதற்கு அந் நூல் நடையிற் சிறிது பயிற்சி வேண்டும். முன்னோர் பழகிய தமிழ் நமக்கு அமிழ்தம்; அதைக் கேட்க, பழக நமக்கு ஆர்வம் எழாமலில்லை. சிறிது பழகினால் அந் நூற் கடலுள் எவரும் எளிதாக நீந்தி இன்புறலாம்.

ஆயினும், இதுகாறும் அப் பயிற்சி பெறாத் நிலையி லுள்ள அன்பர்களுக்கும், அவற்றிலுள்ள கருத்துக்களைத் தெரிந்துகொள்வதற்கு வாயிலிருக்க வேண்டுவது கட்டாயமா யிருக்கிறது. பயிற்சி பெற்றவர்களுக்கும் மேன்மேல் தெளி வுக்கு இடம்வேண்டும். அதற்கு, இங்ஙனம் எல்லா நிலையி னருக்கும் பயன்படும்படி **மிக எளிய தெளிவான தமிழ் நடை யில்** தனித்தனியான தலைப்புக்களில் அக் கருத்துக்களைத் திரட்டிச் சில கட்டுரைகள் வெளியிடுவது பெரும் பயனாக இருக்குமென்று தோன்றுகிறது. **'சங்கநூற் கட்டுரைகள்** அல்லது **பழந்தமிழர் நாகரிகம்'** என்னும் இச் செந்தமிழ் உரைநடை நூல் அவ் வகையில் வெளிவருகின்ற முதல் நூலேயாம்.

இந் நூலில் இப்போது பத்துத் தலைப்புக்களிற் கட் டுரைகள் வெளிவந்திருக்கின்றன.

சங்க நூல் நலங்கள் பெருகப் பரவவேண்டு மென்று கருதியே, அந் நூல்களிலிருந்து நூறு இன்சுவைப் பாட்டுக் கள் திரட்டித் தெளிவான விளக்கங்களும் எழுதிச் **சங்க இலக்கிய இன்கவித் திரட்டு** என்று ஒரு நூலை அணுக்கத் தில் வெளியிட்டோம். அது பலராலும் போற்றிப் பாராட் டப்படுகின்றது. இப்போது அந் நூறு பாடல்களேயல் லாமற் பல இடங்களிலுமுள்ள கருத்துக்களை ஒருங்கு திரட் டித் தருவது நலமென்று கருதியே இந் நூலையும் வெளியிடு கின்றோம்.

**கீழ் வகுப்பு மாணவர்களும்** இந் நூலைப் படித்து எளி திற் கருத்துக்களைத் தெரிந்துகொள்ளும்படி அதற்கான முறையிற் பொருள்கள் சிக்கலின்றித் தெளிவுபடுத்தப்பட் டிருக்கின்றன.

கட்டுரைகளின் இடையிடையே மேற்கோள்களாக எடுத்துக் காட்டப்பட்டிருக்கும் பாட்டுக்களுக்கும், உரை நடையில் அருஞ் சொற்களென்று கருதக்கூடிய சில சொற்களுக்கும், சில அரிய செய்திகள் கருத்துக்கள் முதலியவற்றிற்கும் இந் நூலின் கடைசியில் உரைக் குறிப்புக்களும் விளக்கங்களும் தெளிவாக எழுதிச் சேர்க்கப்பட்டிருக்கின்றன.

இந் நூல்கள் போல்வன தமிழகத்தில் நிரம்பப் பரவ வேண்டும். சிறுவர்களும் இளைஞர்களும் மகளிரும் முதியோரும் ஆவலாகப் படித்துப் பயன்பெற வேண்டும். தமிழ் மக்களின் வாழ்க்கை நலம் தக்க நல்லுணர்ச்சிகளோடு மேன்மேலும் உயர்ந்தோங்கிப் பொலியவேண்டும்.

தமிழன்பர்களும் கல்லூரித் தலைவர்களும் தக்க ஆதரவுகள் காட்டுவார்களென்று பெரிதும் நம்புகின்றோம்.

**சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தார்.**

# பொருளடக்கம்


க. சங்க நூல் க

உ. நாடு கங

1. நாட்டின் பழைமை ... கங
2. நாட்டின் பெருமை ... கசு
3. நாட்டின் செழுமை ... உஅ

ங. அரசு ஙஉ

1. அரசியலின் முதன்மை ... ஙஉ
2. ஆட்சிமுறை ... ஙங
3. அரசனது கடமை ... ஙசு
4. போர்த்திறம் ... சஉ
5. வரிகள் ... சரு
6. நல்லவர் தொடர்பு ... சஅ

ச. வாழ்க்கை ரு0

1. இல்வாழ்க்கை ... ரு0
2. வருவாய் ... ருக
3. ஒற்றுமை ... ருஉ
4. கல்வி ... ருங
5. முயற்சி ... ருரு
6. உதவி ... ருஎ
7. உயிர்ப்பண்பு ... ருஅ
8. திருத்தம் ... சு0

ரு. தொழில் சுக

1. உழவு ... சுக
2. நெய்தல் ... சுச

3. அணிகள் ... சு௭
4. பல தொழில்கள் ... ௭க

சு. வாணிகம் ௭௪

1. கடல் வாணிகம் ... ௭அ
2. கடைத்தெருக்கள் ... அ௩
3. பெரும்போக்கு ... அ௫

௭. கலைகள் அசு

1. கலைஞர் நிலைகள் ... அ௭
2. கலைகளின் வகைகள் ... அகூ

அ. இசை கூ௩

1. இசைத்தமிழ் ... க00
2. ஆளத்தி ... க0௩
3. பண் ... க0௫
4. இசைக்கருவிகள் ... க0௭
5. இசைவாணர் ... கக0

கூ. நாடகம் ககஉ

1. நடிப்பின் பயன் ... கக௪
2. நாடகக் கலை ... ககசு
3. நாடக மாந்தர் ... கஉஉ

க0. கடவுள் கோள்கை கஉ௪

1. கடவுள் இருப்பு ... கஉ௫
2. மூன்று பொருள்கள் ... கஉக
3. கடவுள் இயல்பு ... க௩0
4. திருக்கோயில்கள் ... க௩௫

# சங்கநூற் கட்டுரைகள்

## க. சங்க நூல்

தமிழ்மொழி இனிமையானது என்று எல்லாரும் சொல்லுகிறார்கள். அதன் இனிமையை அறிந்தவர்கள், அதனை "இன் தமிழ்" என்று சொல்லக் கேட்கிறோம். தித்திக்கத் தித்திக்கத் திருவாசகத் தேன் பாடிய **மாணிக்கவாசகரும்** தமிழ்மொழியைத் "தீந் தமிழ்" என்று மகிழ்ந்து சொல்லுகிறார். இதனால் 'தமிழ்' என்னும் சொல்லுக்கே 'இனிமை' என்னும் பொருள் நாளடைவில் உண்டாயிற்று. 'தமிழ்' என்னும் பெயர்கூட இனிமையா யிருக்கிறதென்று ஒருவர் ஆராமையாகச் சொல்லி இன்புறுகிறார். "தமிழ் எனும் இனிய தீஞ்சொல்" என்பது அவர் திருமொழி. இப்படி மொழியும் இனிமை, பொருளும் இனிமை, பெயரும் இனிமையாக அது விளங்குகிறது.

தமிழ்மொழி இவ்வளவு இனிமையாக இருப்பதற்கு ஏதாவது காரணம் இருக்கவேண்டும். மாணிக்கவாசகர் ஒரு காரணம் தெரிவிக்கிறார். அறிஞர்கள் அடிக்கடி ஒன்றுகூடித் தமிழ்மொழியை இவ்வளவு இனிமைப்படுத்தி யிருக்கிறார்கள் என்பது அவர் கருத்து. சொற்களை அவர்கள் இனிக்குஞ் சொற்களாக உருவாக்கியிருக்கிறார்கள்; அச் சொற்கள் கொண்டு இனிக்குங் கருத்துக்களையே தேர்ந்தெடுத்து விளக்கியிருக்கிறார்கள். படிப்பவர்களுக்கு

இன்பம் உண்டாகும்படி பல அழகுகளோடும் எழுதி யிருக்கிறார்கள். இனிமையல்லாதவற்றை அவ்வப் போதும் களைந்திருக்கிறார்கள். இப்படி நெடுங்கால மாகச் செய்துவந்திருக்கிறார்கள்.

அறிஞர்கள் இங்ஙனங் 'கூடல்' கூடி ஆய்ந்து ஆய்ந்து அழகுபடுத்தி வந்ததனால், தமிழ்மொழி இவ்வளவு விளக்கமும் தித்திப்பும் உடையதாயிற்று. ஆதலால் **மாணிக்கவாசகப் பெருமான்,**

"கூடலின் ஆய்ந்த ஒண் தீந் தமிழ்"

என்று அருளிச்செய்து, கூடலில் ஆய்ந்ததைத் தமி ழின் இனிமைக்கு ஒரு காரணமாக எடுத்துச் சொல்லி மகிழ்கின்றார்.

புலவர்கள் கூட்டத்துக்குக் 'கூடல்' என்றும் ஒரு பெயருண்டு. அதனால், சங்கம் இருந்த மதுரைக்குக் 'கூடல்' என்பதே பெயராயிற்று. தேன்போன்ற தமிழை அங்கே ஆராய்ந்து வந்தமையால், அந்த இடம் 'மதுரை' என்னும் பெயருக்கும் உரியதா யிற்று. 'இனிமையான ஊர்' என்பது அதன் பொருள். 'தமிழ்த்தேன் உள்ள ஊர்' என்பது அதன் கருத்து. புலவர்க ளெல்லாரும் தேனீக்கள்போலப் பெருமைப் போடும் ஒற்றுமையோடும் விளங்கினார்கள். மதுரை யில் அவர்கள் கூடியிருந்த சங்கமண்டபம் தேன்கூடு போல எல்லாரும் விரும்பத் தக்கதாக உயர்ந்து திகழ்ந்தது. அந்த மண்டபத்தில் தொகுக்கப்பட்ட **சங்கத் தமிழும்** தேன்போலவே இனிப்பதாயிற்று.

அறிவிற் சிறந்தவர்கள் பலபேர் ஒன்றுகூடி ஆராய்வதே மொழிக்கு அழகு செய்யும். அப்படிச் செப்பஞ் செய்யாதபோது, எந்த மொழியும் இனி

மையாயிருக்க இடமில்லை. தமிழ்மொழி அங்ஙனம் ஒழுங்கு செய்யப்பட்டது. பல ஆயிரக்கணக்கான ஆண்டுகளாக ஊழி ஊழியாக இனிமை செய்யப் பட்டு வந்தது. அதனால், ஏராளமான பெரும் புலவர் களின் உள்ளங்களில் தோய்ந்து தோய்ந்து இம் மொழி அழகு ஏற்று ஒளிர்கின்றது.

தமிழ்மொழி இங்ஙனம் சங்கம் இருந்து வளர்ந் ததுபோல, உலகத்தில் வேறு எந்த மொழியும் இவ் வளவு பெரிய அளவில் சங்கம் மருவியதில்லை. ஆத லால், தமிழ்மொழி மட்டுமே 'சங்கத் தமிழ்' என்று பெயர் பெறுவதற்கு இடமாயிற்று. பிறமொழிகள் அங்ஙனம் பெயர் பெறவில்லை. 'சங்க ஆங்கிலம்' 'சங்க சீனம்' என்று யாரும் அவற்றைச் சொல்லுவ தில்லை.

தமிழ் நாட்டில் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன் சங்கம் நன்றாயிருந்தது. அந்தக் காலத்தில் விளங்கிய தமிழைத்தான் தமிழ் மொழியிலும் 'சங்கத் தமிழ்' என்று சொல்லுகிறார்கள். அப்போதும் அதற்கு முன்னும் இயற்றப்பட்ட நூல்களே 'சங்க நூல்கள்' என்று சொல்லப்படுகின்றன. அதன்பின், இந்த இரண்டாயிரம் ஆண்டுகளாக இன்னும் நல்ல சங்கம் தோன்றவில்லை. அதனால், பிற்காலத்தில் எழுந்த நூல்களை யாரும் 'சங்க நூல்கள்' என்று சொல்லுவதில்லை. ஆனால், இப் பிற்காலத்தில் எழுந்த அறிஞர்கள் மட்டும் முன் சங்கத் தமிழை மிகவும் விரும்பியிருக்கிறார்கள்.

பால், தெளிதேன், பாகு, பருப்பு என்னும் இந்த நான்கு பொருள்களும் கலந்து கிளறியெடுத்தால், அது மிகவும் தீஞ்சுவையாகவே இருக்கும். ஆனால், சங்கத்

**தமிழ்** என்பது அதைவிடத் தீஞ்சுவையானது என்று **ஔவைப் பிராட்டியாரே** கருதுகிறார். ஏனென்றால், அவர், மேற்சொன்ன நான்கு பொருள்களையும் கலந்து கொடுத்துவிட்டு, அதற்கு ஈடாக, அதைவிட இனிமையான 'சங்கத் தமிழைக்' கடவுளிடமிருந்து பெற விரும்புகிறார்.

"பாலும் தெளிதேனும் பாகும் பருப்பும்இவை
நாலும் கலந்துனக்கு நான்தருவேன்—கோலம்செய்
துங்கக் கரிமுகத்துத் தூமணியே நீஎனக்குச்
சங்கத் தமிழ்மூன்றும் தா."

என்று அவர் பாடிய **நல்வழிச்** செய்யுளால் அவர் விருப்பம் இன்னதென்பது தெளிவாகத் தெரிகின்றது. இதனால், **சங்கத் தமிழ்தான் தமிழ்மொழியிலேயே மிகவும் இனிமையானது** என்று ஐயமில்லாமல் தெரிந்து கொள்ளலாம்.

சங்க காலத்தில் தமிழ்மொழி மூன்று வகையாக இருந்தது. ஒன்று 'இயற்றமிழ்'; ஒன்று 'இசைத் தமிழ்'; மற்றொன்று 'நாடகத் தமிழ்'; இம்மூன்றையும் சேர்த்து 'முத்தமிழ்' என்றும் சொல்வார்கள். பொதுவாக மக்கள் பேசுவதும் எழுதுவதும் **இயற்றமிழ்**. அது செய்யுளில் வரும்போது,

"பிறவா யாக்கைப் பெரியோன் கோயிலும்
அறுமுகச் செவ்வேள் அணிதிகழ் கோயிலும்
வால்வளை மேனி வாலியோன் கோயிலும்
நீல மேனி நெடியோன் கோயிலும்."

என்று வரும்; உரைநடையில் வரும்போது,

"அதுகேட்டுக் கொங்கிளங்கோசர் தங்கள் நாட்டகத்து நங்கைக்கு விழவொடு சாந்தி செய்ய மழைத்தொழில் என்றும் மாறாதாயிற்று."

என்று வரும்.

இசை பாடும்போது அதற்கேற்ற ஒலிகளோடு கூடிய தமிழ், **இசைத்தமிழாகும்.**

"வன்சொல் யவனர் வளநாடு வன்பெருங்கல்
தென்குமரி ஆண்ட செருவில் கயல்புலியான்
மன்பதைகாக் கும்கோமான் மன்னன் திறம்பாடி
மின்செய் இடைநுடங்க ஆடாமோ ஊசல்"
விறல்வில் பொறிபாடி ஆடாமோ ஊசல்."

என்பது இசைத்தமிழ்ச் செய்யுள்.

"தானுமோர் குறிப்பினள்போல் கானல்வரிப் பாடற் பாணி, நிலத்தெய்வம் வியப்பெய்த நீணிலத்தோர் மனமகிழக், கலத்தொடு புணர்ந்தமைந்த கண்டத்தால் பாடத் தொடங்குமன்."

என்பது உரைநடையில் வரும் இசைத்தமிழ்.

இனி, இயல் இசை என்னும் இரண்டோடு நடிப்பும் சேருமாகுல், அந் நடிப்புக் கேற்ற மொழிகளோடு கூடிய தமிழ், **நாடகத்தமிழ்** எனப்படும். இது,

"கன்று குணிலாக் கனியுதிர்த்த மாயவன்
இன்றுநம் ஆனுள் வருமேல் அவன்வாயில்
கொன்றையந் தீங்குழல் கேளாமோ தோழீ."

எனச் செய்யுள் வடிவிலும்;

"ஆயர்பாடியில் எருமன்றத்து மாயவனுடன் தம்முன் ஆடிய வால சரிதை நாடகங்களில் வேல் நெடுங்கண் பிஞ்ஞையோடு ஆடிய குரவை ஆடுதும் யாம் என்றாள் கறவை கன்று துயர் நீங்குக எனவே."

என உரைநடை வடிவிலும் விளங்கும். இவ்விரண்டும் நடிப்புக்கு ஏற்றபடி அமைந்த தமிழோசையை உடையன.

இயல்பாக மக்கள் பேசிக்கொள்ளும் பேச்சுக்களைவிட, இசையோடு பாடுவதற்கு ஏற்ற மொழிகளும், குறிப்போடு நடிப்பதற்கு ஏற்ற தொடர்களும் எல்லார்க்கும் மிகுதியாக இன்பந் தரும். தமிழ் மொழியில் மட்டுந்தான் 'முத்தமிழ்' என்னும் இப் பாகுபாடு உண்டு. சங்க காலத்தில் இம் முத்தமிழின் வகைகள் நன்றாக விளங்கியிருந்தன. இதனால் சங்கத் தமிழ் பிற்காலத் தமிழைவிட மிகவும் இனிமை தருவதாக இருக்கின்றது. ஔவையார், 'சங்கத் தமிழ் தா' என்று பொதுவாகக் கேளாமல், 'சங்கத் தமிழ் மூன்றும் தா' என்று முத்தமிழையுங் கேட்டது இந்த இனிமையினாலேதான்.

இனி, பண்டைக் காலத்தில் விளங்கியிருந்த சங்கம், முதற்சங்கம் இடைச்சங்கம் கடைச்சங்கம் என்று மூன்று பிரிவாக நிகழ்ந்தது. ஒவ்வொரு சங்கமும் ஆயிரக்கணக்கான ஆண்டுகள் நடைபெற்றது. இந்த மூன்று சங்கத்திலும் முத்தமிழ் நூல்களும் உண்டு. ஒவ்வொரு தமிழுக்கும் இலக்கண நூல்களும் இருந்தன. சங்கநூல்கள் என்றால், அவை இம் மூன்று தமிழ்ச் சங்கங்களிலும் இருந்த மூன்று தமிழின் இலக்கண இலக்கிய நூல்கள் எல்லாவற்றையுமே குறிக்கும்.

ஆனால் அவ்வெல்லா நூல்களும் இப்போது இல்லை; இப்போது உள்ளவை, பெரும்பாலும் கடைச் சங்க நூல்களாகவே காணப்படுகின்றன. இடைச் சங்க காலத்தில் எழுந்த பாட்டுக்கள் சில இவற்றிற்

சேர்ந்திருக்கின்றன. சங்க கால இலக்கணங்களுள், '**தொல்காப்பியம்**' ஒன்றுதான் இப்போது முழு நூலாகக் கிடைக்கின்றது. அந்நூல் இயற்றமிழுக்கு இலக்கணம். கிடைத்திருக்கின்ற மற்றநூல்கள் இலக்கியங்கள். 'கலித்தொகை' முதலான சங்க நூல்களில் இசைநாடகத் தமிழ்கள் கலந்திருக்கின்றன.

கிடைத்த சங்கச் செய்யுள்களையும் நூல்களையும் சான்றோர்கள் மூன்றுபிரிவுகளில் தொகைப் படுத்தியிருக்கிறார்கள். ஒரு பிரிவு **பத்துப்பாட்டு**; மற்றொரு பிரிவு **எட்டுத் தொகை**; இன்னொரு பிரிவு **பதினெண்கீழ்க் கணக்கு**. 'பத்துப்பாட்டில்' பத்து நீளமான பாட்டுக்கள் தொகுக்கப்பட்டிருக்கின்றன. ஒவ்வொரு பாட்டும் ஒவ்வொரு நூலென்றே சொல்லப்படும். எட்டுத்தொகையில் எட்டுநூல்கள் அடங்கியிருக்கின்றன. ஒவ்வொரு நூலிலும் பலர் செய்த பாட்டுக்கள் தொகுக்கப்பட்டிருக்கின்றன. ஆதலால், அந்நூல் ஒவ்வொன்றும் தொகைநூல் எனப்பட்டது. அப்படி உள்ள எட்டு நூல்களைக் குறிப்பதே எட்டுத்தொகை என்பது. பதினெண் கீழ்க் கணக்கு என்னும் பிரிவில், பதினெட்டு நூல்கள் தொகுக்கப்பட்டிருக்கின்றன. பெரும்பாலும் இவை ஒவ்வொன்றும் ஒவ்வோர் ஆசிரியராற் செய்யப்பட்டது.

இவையல்லாமல், **சிலப்பதிகாரம்**, **மணிமேகலை** என்னும் இரண்டு அருமையான தமிழ்நூல்கள் கடைச்சங்க காலத்தின் கடைசியில் தோன்றின. அதனால், அவை, சங்க அறிஞர்கள் பார்வைக்கு எட்டவில்லை. என்றாலும், அந்நூல்கள் மிக மாட்சிமை வாய்ந்தவை. ஆதலால், அவற்றையும் 'சங்க நூல்' என்றே போற்றிக்கொள்ளவேண்டும். இந்த

இரண்டு நூல்களும், நிகழ்ச்சிகளைக் கூறும் கதைநூல்கள். ஆதலால் இவை காப்பிய நூல்கள் என்று சொல்லப்படுகின்றன. பல கருத்துக்களோடு கூடிய பெரிய கதைநூல்களாதலால் இவை 'பெருங் காப்பியங்கள்' என்றும் சொல்லப்படும். இவற்றுள் 'சிலப்பதிகாரம்' என்பது, இயல் இசை நாடகம் என்னும் மூன்று தமிழ்களாலும் இயற்றப்பட்டிருக்கிறது. ஆதலால், இதனை 'முத்தமிழ்க் காப்பியம்' என்றும் சொல்வதுண்டு.

இவையன்றி, '**இறையனாரகப்பொருள்**' என்றொரு நூலும் சங்க காலத்தில் தோன்றியிருக்கிறது.

இங்கே காட்டிய இந் நூல்களே, சங்கத் தமிழ் நூல்களாக இப்போது நமக்குக் கிடைத்திருப்பவை. இவற்றைக் கணக்கிட்டால், தொல்காப்பியம் **ஒன்று**; 'பத்துப்பாட்டு' என்னும் பிரிவில் அடங்கிய திருமுருகாற்றுப்படை, பொருநராற்றுப்படை, சிறுபாணாற்றுப்படை, பெரும்பாணாற்றுப்படை, முல்லைப் பாட்டு, மதுரைக்காஞ்சி, நெடுநல்வாடை, குறிஞ்சிப்பாட்டு, பட்டினப்பாலை, மலைபடுகடாம் என்னும் நூல்கள் **பத்து**; 'எட்டுத் தொகை'யிற் சேர்ந்த நற்றிணை, குறுந்தொகை, ஐங்குறுநூறு, பதிற்றுப்பத்து, பரிபாடல், கலித்தொகை, அகநானூறு, புறநானூறு என்னும் நூல்கள் **எட்டு**; 'பதினெண் கீழ்க் கணக்கு' என்பதில் தொகுக்கப்பட்ட நாலடியார், நான்மணிக்கடிகை, இனியவை நாற்பது, இன்னா நாற்பது, களவழி நாற்பது, கார் நாற்பது, ஐந்திணை யைம்பது, ஐந்திணை யெழுபது, திணைமொழி யைம்பது, திணைமாலை நூற்றைம்பது, திருக்குறள், திரிகடுகம், ஆசாரக் கோவை, பழமொழி, சிறுபஞ்சமூலம், முதுமொழிக்

காஞ்சி, ஏலாதி, கைந்நிலை என்னும் நூல்கள் **பதினெட்டு**; சிலப்பதிகாரம் மணிமேகலை என்னுங் காப்பியங்கள் **இரண்டு**; இறையனாரகப்பொருள் **ஒன்று** என மொத்தம் **நாற்பது நூல்**களாகும். இந் நாற்பது நூல்களையும் ஒருவர் **ஐந்து ஆண்டு**களில் முறையாகக் கற்றுத் தேர்ச்சி பெறலாம். அப்போது அவர், சங்கத் தமிழின் இனிமையைத் தாமே அறிந்து சுவைத்து இன்புறக்கூடும்.

ஆங்கில நாட்டில் **எலிசபெத்து** அரசியின் காலத்திலிருந்து ஆங்கில மக்கள் பலவகையான நன்முயற்சிகள் உடையவராய் மேலோங்கினர். போரிற் பிற நாடுகளை வென்றும், புதிய ஊர்களைக் கண்டுபிடித்தும், எங்கும் வாணிபத்தைப் பெருக்கிப் பெருவாரியாகப் பொருள்தேடியும் உயர்ந்த எண்ணங்களிலும் வீரத்திலும் ஆண்மையிலும் மேம்பட்டு விளங்கினர். அந் நாட்டில் எங்கும் மகிழ்ச்சி நிலவியது. அம் மகிழ்ச்சி அப்படியே பல கலைகளாக இலக்கியங்களாக வடிவெடுத்தது; உலகு புகழும் **சேக்குவியர்*** போன்ற பெரும் புலவர்மணிகளும் தோன்றினர். அவர்கள் வாயிலாக, மணங்கமழும் நூல்கள் பலப்பல மலர்ந்தன. மகிழ்ச்சியின் விளைவே இலக்கியங்கள். தமிழ் நாட்டில், சங்ககாலம் என்பது இங்ஙனம் இன்பத்தில் திளைத்திருந்த காலம்.

தமிழ் நாடு அப்போது நாகரிகத்தின் உச்சியில் திகழ்ந்தது. மக்கள், ஊக்கமும் முயற்சியும் பெருந்தன்மையும் உடையவர்களாய் விளங்கினர். அவர்களிடம் நன்றியறிவு முதலிய உயர்ந்த குணங்கள் நிலைபெற்றிருந்தன. நாவலந்தீவு என்று சொல்லப்

* Shakespeare.

படும் இந்தியா முழுமையும், கடல் கடந்த நாடுகளி லும் அவர்கள் செல்வாக்குடையவர்களாய் உயர்ந் தனர். எங்கும் வாணிகம் செழித்தது. பொன்னும் முத்தும் மணியும் ஏராளமான உணவுப் பொருள்க ளும் தமிழ்ச் செல்வர்களின் பண்டசாலைகளிற் கொழித்திருந்தன. மக்கள், உரிமையும், அரசும் உடையராயிருந்தனர். அரசன் குடிகளோடு ஒரு வனயிருந்து, கலந்த அன்போடு ஆட்சிசெலுத்தினன். நாடெங்கும் தமிழர்க்குத் திறைப் பொருள்கள் கிடைத்தன.

தமிழ்மக்கள் அக்காலத்திற் சிங்க ஏறுகள்போல் தங்நிகரற்று உலவினர். மாதர்கள் தெய்வவடிவங்க ளாக நிலவினர். இம் மகிழ்ச்சிக் கடலில் இளமேகங் கள்போலப் பல நன்மக்கள் திரள் திரளாய் எழுந்த னர். அறிவால் கருக்கொண்டனர். விரிந்த உள்ள மென்னும் பெரிய வானத்தில் உயர்ந்து காட்சியளித் தனர். பல தொழிலுமுடையராய்ப் பல கலை வல்லு நராய் மின்னினர். முத்தமிழ் மழையை ஏராளமாகப் பொழிந்தனர். சங்கநூல் வெள்ளங்கள் எங்கும் பெருக்கெடுத்தன. மக்கள் வாழ்வு மேலுமேலும் வளம் பெறுவதாயிற்று.

**திருவள்ளுவர்** போன்ற பெருந் தமிழர்கள் தோன்றி உலக அறிஞர்களாக விளங்கினர். 'நீதிக் களஞ்சியத்துக்குத் தமிழ்மொழியே சிறந்தது' என்று **கால்டுவெல்*** போன்ற பிறநாட்டு ஆசிரியர்களுங் கரு தும்படி, உலகத்துக்கே அறம் உரைக்கும் ஞானச் செல்வர்களாக அவர்கள் மேலோங்கினர். நக்கீரர் கல்வி, திருவள்ளுவர் அறிவு, கண்ணகி ஆற்றல்,

* Dr. Caldwell.

கோப்பெண்டின் உணர்ச்சி, பாரியின் கொடை, காரியின் வீரம், அதியனின் தன்னல இழப்பு, ஔவையின் பெருந்தன்மை, ஆந்தையார் சால்பு, நள்ளியின் அடக்கம், இளங்கோவடிகள் தவம், கபிலரின் செய்ந்நன்றி, சித்திரனார் தன்மதிப்பு, கரிகாலன் ஆட்சி, முதுகுடுமி வழிபாடு முதலிய எண்ணிறந்த நற்பண்புகள் சங்கத் தமிழிற் கலந்து சிறந்து, தமிழ்மக்கள் வாழ்க்கையைத் தெய்விக வாழ்க்கையாக ஒளிபெறச் செய்தன.

இங்ஙனம், சங்கநூல்கள் இன்பத்திற் செழித்து இன்பத்தின் மலர்ந்தன.

> குஞ்சி யழகும் கொடுந்தானைக் கோட்டழகும்
> மஞ்ச ளழகும் அழகல்ல ; நெஞ்சத்து
> நல்லம்யா மென்னும் நடுவு நிலைமையாற்
> கல்வி யழகே அழகு.

என்பதுபோலச் சொற்சுவை பொருட்சுவையுள்ள செழும்பாட்டுகள் ஏராளமாக எழுந்தன. நடையிலும் இவை எளிமையாகவே இருக்கின்றன. சில அருஞ்சொற்களும் அமைப்பு முறைகளும் அறிந்துகொண்டால், சங்க காலப் பாட்டுகள் எளிமையாகவே காணப்படும். இங்கே காட்டியிருக்குஞ் செய்யுளில், 'குஞ்சி' 'தானை' 'கோடு' என்னும் மூன்று சொற்களே சற்று அரிய சொற்கள்போலத் தோற்றுகின்றன. 'நாங்கள் நல்லவர்கள்' என்னுந் தொடர், 'நல்லம் யாம்' என்று இலக்கண வழு இல்லாமலும் இனிமையாகவும் அமைந்திருக்கின்றது. இப்படிச் சிலவற்றில் தெளிவிருந்தாற் போதும்! சங்கநூல்களை இன்பமாகப் படிக்கலாம்.

தமிழ் நாட்டில் கடற்கரை ஓரமாயுள்ள ஊர்கள் வளமானவை என்று ஒரு புலவர் நமக்குச் சொல்ல விரும்பினர். படிப்பவர்களுக்கு இன்பம் உண்டாகும் முறையில் அதை அவர் நகைச்சுவையோடு சொல்லுகிறர். 'கடற்கரையில் வலேஞர்களின் தெருக்கள் இருக்கின்றன. அங்கே குழந்தைகள் இங்கும் அங்கும் விளேயாடிக்கொண்டிருக்கின்றன. அப்போது அருகில் இருக்கும் குரங்குகள், மணலில் இறைந்து கிடக்கும் முத்துக்களேப் பொறுக்கிக் கிளிஞ்சலில் இட்டு அக் குழந்தைகளோடு கிலுகிலுப்பை விளேயாடுகின்றன' என்று தெரிவிக்கிறர். இதுபோல இனிக்கும் முறைகள் பல பாலொடு தேன் கலந்தாற்போல அப் பாடல்களிற் கலந்துள்ளன.

இங்ஙனம் இச் சங்க நூல்கள் சிந்திப்பரியன; சிந்திப்பவர்க்குச் சிறந்து செந்தேன் முந்திப் பொழிவன; இன்பம் விளேப்பன.

# உ. நாடு

நமது நாடு தமிழ் நாடு. தமிழ் நாடு என்று சொல்லும்பொழுதே நமக்கு நாவூறுகின்றது. அதன் அகலமும் பெருமையும் செழுமையும் நமது உள்ளத் திற் காட்சியளிக்கின்றன. ஆ! எவ்வளவு பழமையான நாடு இது! எவ்வளவு முன்னோர்கள் வாழ்ந்து எவ்வ ளவு அரிய பெரிய நாகரிகங்களை உலகமெல்லாம் பரப் பிய நாடு இது! எத்தனை அயல் நாட்டவரை அவ்வப் போதும் வரவேற்று, அவர்களுக்கு இடைவிடாமல் உணவு கொடுத்து, உடை கொடுத்து, நிழல் கொடுத் துக், கலை கொடுத்து, நாகரிகங் கொடுத்து அளவளாவி விருந்தோம்பிய வீடு இது! உலக முழுவதிலும் தமிழ் நாட்டின் ஒளி எத்தனை காலமாய்க் கொழுந்தோடிப் பொலிகின்றது! இம் மாட்சிமைகளை நினைக்கும் போதும் மதிக்கும்போதும் மனமெலாம் தித்திக்கின் றது! மதியெலாம் தித்திக்கின்றது!

## 1. நாட்டின் பழைமை

'தமிழ் நாடு' என்னும் தொடருக்குத் 'தமிழ் மொழி வழங்கும் நாடு' என்பது பொருள். தமிழ் மொழி இன்ன காலத்திலேதான் தோன்றியதென்று எளிதாக வரையறுத்துச் சொல்லக்கூடவில்லை. அம் மொழி அவ்வளவு பழமையானதாயிருக்கின்றது. உல கம் முழுவதிலும் இப்போது உள்ள எல்லா மொழி களும் தோன்றுவதற்கு முன்பே, இம் மொழி தோன்றி வழங்கி வந்திருக்கின்ற தென்று ஆராய்ச்சியாளர் முடிவு கட்டுகின்றனர்.

தமிழ்மொழி தோன்றுவதற்கு முன்பே, அதனைப் பேசக்கூடிய தமிழ் முன்னோரும் அவரிருந்த தமிழ் நாடும் தோன்றியிருக்கவேண்டும். ஆதலால், இன்னதென்று குறித்துக் கூற இயலாத மிகப் பழைய காலக் கணக்கை யுடையதாக இந் நாடு விளங்குகின்றது.

மொழிகளைக் கொண்டு நாடுகளுக்குப் பெயரமைப்பது முன்பு வழக்கமாக இருந்திருக்கிறது.

"தமிழ் கூறும் நல்லுலகம்"

என்று **தொல்காப்பியச்** சிறப்புப் பாயிரத்தில் வருவது இவ்வுண்மையை வலியுறுத்தும். மொழி வேறுபட்ட தேயங்கள் என்னும் கருத்தில்,

"மொழி பெயர் தேஎத்தர்"

என்று **குறுந்தொகையில்** வருகின்ற தொடர் கொண்டும், நாடுகள் மொழிகளின் வேறுபாடுகளுக்கேற்ப வேறு வேறு தேயங்களாகக் கருதப்பட்டன என்பதை அறிந்துகொள்ளலாம். ஆகவே, தமிழ் என்னும் பெயரிலிருந்தே 'தமிழ் மக்கள்' என்னும் பெயரும் 'தமிழ் நாடு' என்னும் பெயரும் தோன்றியிருக்கின்றன என்பது தெரிகின்றது.

இனி, இந் நாட்டு மக்கள் வழங்கிய மொழிக்குத் 'தமிழ்' என்னும் பெயர் முதலில் எப்படி வந்தது என்பதும் இங்கே சிறிது நினைவுகூர்வது நல்லது. 'தமி' என்னும் சொல்லுக்குத் 'தனிமை' என்பது பொருள். தமிழுக்குச் சிறப்பெழுத்தாக உள்ள 'ழ்' என்னும் ஓர் இடையின எழுத்தைத் 'தமி' என்பதனோடு சேர்த்துத் 'தமிழ்' என்று முன்னோர் வழங்கினரென்று தெரிகின்றது. 'வேறொரு மொழியிலிருந்து தோன்று

மல் தனித்துத் தோன்றிய'தென்பது அதற்குப் பொருள்.

மனிதப் பிறவி முதன்முதலாகத் தோன்றிய பின், பலகாலம் வரையில் மொழி தோன்றவில்லை. அதன் பின்பு, ஒரு மொழி தோன்றியிருக்க வேண்டும். முதன் முதலாகத் தோன்றிய மொழியாதலால், அந்த மொழி வேறொரு மொழியிலிருந்து தோன்றியிருக்க இடமில்லை. 'தனித்தே தோன்றியிருக்க வேண்டு மென்று தெரிகின்றது. பின்பு அதனை வழங்கிய மக்கள் பலவேறிடங்களுக்குஞ் செல்ல, அதிலிருந்து உலகமெங்கும் பலவேறு மொழியினங்கள் தோன்றிக் கிளைவாங்கி விரிந்தன என்பது தெளியப்படும். ஆதலால், பின்பு தோன்றிய மொழிகளோடு முதலில் தோன்றிய தாய்மொழியை நினைத்துப் பார்த்த அறிஞர்கள் அம் முதல் மொழியைத் 'தனித்துத் தோன்றியது' என்னுங் கருத்தில், 'தமிழ்' என்று வழங்கி மகிழ முற்பட்டனர்.

இந் நிலவுலகத்தில் மனிதப் பிறவி முதன்முதலாகத் தோன்றி ஏறக்குறைய ஐந்நூறாயிரம் ஆண்டுகளுக்குமேல் ஆயினவாம். ஆயினும் ஓர் ஐம்பதினாயிரம் ஆண்டுகளுக்கு முன்னேதான் மக்கள் ஓரளவு நாகரிக வளர்ச்சி அடைந்தனரென்று தெரிகின்றது. பழங்காலத்தைப் பற்றிய ஆராய்ச்சியாளர் இங்ஙனம் முடிபு கட்டுகின்றனர். அதன்பின், மக்கள், தம் கருத்துக்களைப் பேச்சுவாயிலாகச் சிறிது சிறிது புலப்படுத்தத் தெரிந்துகொண்ட காலம், ஏறக்குறைய முப்பத்தையாயிரம் ஆண்டுகளுக்குமுன் இருக்கலாமென்று அவர்கள் துணிகின்றனர். அதற்குமேல் அப் பேச்சொலிகள் மெல்ல மெல்லத் திருத்தம் பெற்று

ஒரு மொழியாக உருவாவதற்கும் பலகாலம் சென்றிருக்க வேண்டும். இடையில் அவ் வளர்ச்சிக்கு எத்தனை காலம் சென்று கழிந்ததோ தெரியவில்லை. ஆயினும், அக்காலம், சிறிது அறிவு வளர்ச்சியடைந்த காலமாதலால், நெடுங்காலம் சென்று கழிய இடமில்லை என்று துணியலாம்.

நமக்குப் பழைய தமிழ் நூல்களாக, இப்போது சிலவே கிடைத்திருக்கின்றன. கிடைத்த நூல்களை மட்டும் வைத்துக் கணக்கிட்டாலும் ஏறக்குறையப் பத்தாயிரம் ஆண்டுகளுக்கு முன்னிருந்தே தமிழ் மொழி திருத்தமாக வழங்கிவந்திருக்கின்றதென்று தெரிந்துகொள்ளலாம்.

அத்தகைய பழம் பெருந் தமிழ்நாட்டைப் பற்றி அறிந்துகொள்ள முற்படும்போதெல்லாம் ஆ, நமக்கு எவ்வளவு உணர்ச்சியும் எழுச்சியும் இன்பமும் உண்டாகின்றன! பழமைக்குப் பழமையாயும் புதுமைக்குப் புதுமையாயும் உள்ள நாடன்றோ இது! பழமையை அறிந்து புதுமையோடு அளவளாவி வாழும் நாகரிக வாழ்வே நாம் விரும்பும் வாழ்வு!

## 2. நாட்டின் பெருமை

தமிழ் நாட்டின் பெருமைக்கு இந்நாட்டில் வழங்கும் தமிழ் மொழி ஒன்றுமே போதும்.

தமிழ்நாட்டு மக்கள் தமிழ் மொழியை நன்றாக அறிந்து சுவைத்து இன்புற்றிருக்கிறார்கள். நாளடைவில் அவர்கள் தமிழ் என்னுஞ் சொல்லைச் சில நல்ல பொருள்களில் வழங்கியிருப்பதே அதற்கு அடையாளமாகும்.

"தமிழ் தழீஇய சாயலவர்"

என்று வரும் **சிந்தாமணியில்**, 'தமிழ்' என்னுஞ் சொல் 'இனிமை' யென்னும் பொருளில் வழங்கியிருக்கின்றது.

"தமிழ் மண்டிலம் ஐந்தும் தத்துவமாமே"

என்னும் **திருமூலர் திருமந்திரத்**தில் அச் சொல் 'தூய்மை' என்னுங் கருத்தில் வந்திருக்கின்றது. தனிமை, தூய்மை, இனிமை என்னும் இப் பொருள் வழக்குகள் எவ்வளவு சிறந்தனவா யிருக்கின்றன! இவைகொண்டு, தமிழ்மொழி தனித்த பெருமை யுடையது; தூய்மையுடையது; இனிமையுடையது என்றெல்லாம் தெரிந்துகொள்ளலாமல்லவா! அப் படியானல், இது தோன்றி உருவாவதற்கும், வழங்கு வதற்கும், நிலைத்திருப்பதற்கும் இடமாகிய இந் நாடு எவ்வளவு பெருமையுடையதா யிருக்கவேண்டும்!

தமிழ்மொழிக்குத் 'திராவிடம்' என்ற பெயர் பிற்காலத்தில் வந்தது. இந் நாட்டுப் பிறமொழி யாளர் தமிழை அங்ஙனங் கூறினர். இற்றைக்கு இரண்டாயிரத்து முந்நூறு ஆண்டுகளுக்குமுன் இருந்த **ஓரோடட்டசு*** முதலிய பழைய கிரேக்க ஆசிரியர், இந்நாட்டைப்பற்றிக் கூறியபோது 'தமிழ்' என்னுஞ் சொல்லையே வழங்கியிருக்கின்றனர். இற்றைக்கு ஐயாயிரத்து ஐந்நூறு ஆண்டுகட்குமுன் இருந்தவராகக் கருதப்படுகின்ற ஆசிரியர் தொல் காப்பியனுரே, 'தமிழ்' என்னுஞ் சொல்லை வழங்கி யிருக்கின்ருரெனின் வேறு கூறுவானேன்?

---

* Herodatus.

பண்டைக் காலத்தில் தமிழ் நாடு மிகவும் பரந் திருந்தது. இப்போது குமரிமுனைக்குத் தெற்கேயுள்ள தென்கடலில், முன்னே பெரும் பரப்பான நிலப்பகுதி இருந்ததென்று அறிஞர்கள் ஆராய்ந்து துணிந்திருக் கிறார்கள். இப்போது நமது நாட்டின் மேற்கேயுள்ள மேற்குத் தொடர்ச்சி மலை அந்தப் பழைய நிலப்பகுதி யில் நீண்டு தொடர்ந்திருந்த தென்றும், அங்கே அம் மலைக்குக் 'குமரிமலை' என்று பெயர் வழங்கியிருந்த தென்றும் தெரிகின்றது. அந் நிலத்தின் வடக்கிலும் தெற்கிலும் **குமரியாறு**, **பஃறுளியாறு** என்று இரண்டு வளமான ஆறுகள் ஓடி அந் நிலப்பகுதிகளைச் செழுமை செய்தன. இவற்றின் நீர்மலிவால், ஏழ் தெங்க நாடு, ஏழ் மதுரை நாடு, ஏழ் முன்பாலை நாடு, ஏழ் பின்பாலை நாடு, ஏழ்குன்ற நாடு, ஏழ் குணகாரை நாடு, ஏழ் குறும்பனை நாடு என **நாற்பத்தொன்பது நாடுகளும்** பிறவும் செழுமை வாய்ந்து திகழ்ந்திருந் தன. இக் குறிப்புக்களெல்லாம் **புறநானூறு**, **சிலப் பதிகாரம்** முதலிய நூல்களிலும் உரைகளிலும் காணப் படுகின்றன.

அந் நிலப்பகுதியின் முழுப் பரப்பை ஆராய்ந்த அறிஞர்கள், அது தென்னமெரிக்கா தொடங்கி ஆப்பி ரிக்கா இந்தியா என்னும் நாடுகளோடு இணைந்து ஆத்திரேலியா வரையில் விரிந்திருந்த தென்றுஞ் சொல்லுகிறார்கள். இப்போது இமயமலை இருக்கு மிடம் முன்பு கடலாக இருந்த தென்றுங் கூறப்படு கின்றது. பின்பு, தெற்கே இருந்த அப் பெரிய நிலப் பகுதி பல கடல்கோள்களால் பல வகையாக நீருள் அமிழ்ந்துபோயிற்று எனவும், வடக்கே இமயமலை யிடங்கள் மேலே எழுந்தன எனவுங் கூறுகின்றனர்.

இதனால், தெற்கேயிருந்த மக்கள் இமயமலை யிடங்களிலும் பரவினர். அக்காலங்களில் நிகழ்ந்த கடல் கோள்களில் மிகப் பெரிய கடல் கோள்கள் நான்கு என்று கூறப்படுகின்றன. அவை நிகழ்ந்தபின், அப்போது இந் நாட்டின் எல்லைகள், வடக்கே இமயமலையும், தெற்கே பஃறுளி யாற்றிற்குந் தென்பால் இருந்த நிலத்தின் கோடியும், கிழக்கும் மேற்கும் கடலுமாயிருந்தன. நான்கு பெரிய கடல் கோள்கள் நிகழ்ந்தமையால், தமிழர் வாழும் இடம் இவ்வளவாயிற்று.

தெற்கே பஃறுளியாற்றிற்குந் தென்பால், விரிந்த நிலப்பகுதியிருந்த தென்பது, **சிலப்பதிகார உரையில் அடியார்க்கு நல்லார்** கூறுகின்ற உரைத்தொடர்களிலிருந்து தெரிகின்றது. அவர்,

> "கவியரங்கேறினர் எழுவர் பாண்டியருள் ஒருவன் சயமாகீர்த்தியனாகிய நிலந்தருதிருவிற் பாண்டியன் தொல் காப்பியம் புலப்படுத்து இரீஇயினன். **அக்காலத்து அவர் நாட்டுத்** தென்பாலி முகத்திற்கு **வடவெல்லையாகிய பஃறுளி** யென்னும் ஆற்றிற்கும்..."

என்று கூறிச் செல்வர். 'வட எல்லையாகிய பஃறுளி யாறு' என்றமையால், அந்த ஆற்றுக்குத் தெற்கே ஆட்சி செய்வதற்குரிய வளம் அமைந்த நாடு இருந்தமை பெறப்படும். இதனால் இதன் தென் கோடி தொட்டு வடக்கே இமயமலை வரையில் அப்போது தமிழகமாயிருந்ததென்று கொள்ளப்படும். ஆனால், புதியதாக எழுந்த இமயமலை யிடங்களில் அப்போது தமிழரசர்கள் இன்னும் தமது அரசியலை நிறுவவில்லை.

இனி, அவ் வடநாடு சென்ற தமிழ் முன்னோர் அவ்விடமே நிலைபெற்றனர். அதனால் மொழிவழக்கு களும் வேறுபட்டு நாளடைவில் வேறு வேறு மொழி களாக மாறின. தென்னமெரிக்கா, ஆப்பிரிக்கா, ஆத் திரேலியா என்னும் இடங்களிலும் இப் பேரூழி களாற் சிதர்ந்துபோன மக்கள், முன்னமேயே இடம் தொலைவு என்னுங் காரணத்தால் வேறுபட்ட மொழி வழக்குகளை, மேலும் பல வேறுபாடுகட்கு இடமா கும்படி வெவ்வேறு மொழிகளாக வழங்கிவந்தனர். இமயமலைக்கு வடக்கே எழுந்த நிலப் பகுதிகளிலும் மக்கள் நாளடைவிற் பிரிந்து சென்று, அங்கிருந்து இப்போது ஐரோப்பாக் கண்டமாக இருக்கும் வட மேற்கு முனைகளிலும் பரவி, அங்கங்கும் நிலைபெற்று, அதனால் திரிந்து திரிந்து கிளை வாங்கி மாறிய பல புதிய புதிய மொழிகளுக்கு உரியவராயினர். இங்ஙன மெல்லாம் இந்துமாக் கடலின் மக்களினமும் அவர் மொழியும் வரவர உலகமெங்கும் கிளைவாங்கிச் சென் றன. "யாதும் ஊரே யாவரும் கேளிர்" என்னும் தமிழ்க் கொள்கைக்கு இந் நிகழ்ச்சிகள் முற்றும் பொருத்தமாயிருக்கின்றன!

மேற்காட்டிய நான்கு கடல் கோள்களுக்கும் பின்னர்க், கடைசியாக நிகழ்ந்த பெரிய கடல்கோள், இற்றைக்கு ஒன்பதினாயிரம் ஆண்டுகளுக்கு முன் நிகழ்ந்ததென்று கூறுகின்றனர். இக் கடல் கோளும் அருமையான பெரிய நிலப் பகுதியை விழுங்கியது; பஃறுளியாற்றுக்குந் தென்பால் இருந்த நிலப் பகுதி யின் கோடிமுதல், பஃறுளியாறும், அது வளமாகத் தோன்றி ஒழுகுவதற்குக் காரணமாயிருந்த பல அடுக் குகளையுடைய குமரிமலைத் தொடர்களும், அந்த ஆற்

றுக்கு வடக்கே இருந்த ஏழ்தெங்க நாடு ஏழ்பனை நாடு முதலிய நாற்பத்தொன்பது வளநாடுகளும் பிறவும் கடலில் மறைந்துபோயின. இந் நிகழ்ச்சி எல்லாருள்ளத்தையும் மிகவும் உருக்கிவிட்டது. பற்றற்ற தூய உள்ளம் வாய்ந்த, பின்வந்த பெருந்துறவோரான **இளங்கோவடிகளும்,** இவ்வளவு செய்த அக் கடலைக் "கொடுங் கடல்" என்று கூற மனம் வந்ததென்றால், அது மற்றவர்கள் உள்ளத்தை எவ்வளவு உருக்கியிருக்கும்! உரையாசிரியர் அடியார்க்குநல்லாரும் ஆசிரியர் இளங்கோவடிகளின் உள்ளம் தெரிந்து, 'கொடுங் கடல்' என்பதற்கு, "இவ்வளவெல்லாந் தந்த கடல்" என்று அவ் வுருகிய உணர்ச்சியோடு உரை எழுதியிருக்கின்றார். 'கொடுங் கடல்' என்பதற்குக் 'கொடிய கடல்' என்று அவர் எழுதியிருந்தால் இவ்வளவு உயர்ந்த உணர்ச்சிநிறைவை அது காட்டாது. ஆசிரியரது உள்ளமறிந்து அவ் வுணர்ச்சியில் ஊறி அதன் வயமாகி, அந் நிலையிற் சிந்தும் உரைத்திறம் இன்னதென்பது, இதனால் நன்கு தெரிகின்றது. உரைக்கு வளம் என்பது இதுவன்றோ!

இங்ஙனம் இக் கடல் பாண்டிநாட்டின் வளமான தென்பகுதிகளை அமிழ்த்திவிட்டமையால், அத் தமிழ் மன்னன், தன் குமரிமலைக்கும் பஃறுளியாற்றுக்கும் அவற்றால் வளம்பெற்ற பல வள நாடுகளுக்கும் ஈடாக, வடக்கே இமயமலையையும் கங்கையாற்றையும் அவற்றால் வளங்கொழித்த அவ் வடநாடுகளையுங் கொண்டு அங்கே தனது ஆட்சியை நிறுவித் தென் திசையிலிருந்து ஆண்டு வந்தான். இக் கடல்கோளுக்கு முன்னமேயே தமிழ் மக்கள் அவ்விடங்களிற் பரவி யிருந்தனர். இவ்வூழிக்குப் பின், அவர்

கள் தமிழ் அரசியலும் பெற்று வாழ்க்கைச் சிறப்பு கள் பல அடையலாயினர். ஆனால் அத் தமிழ்மக்கள் நாளடைவில், வேறுபட்ட பல மொழியினராய் மாறி நின்றனர். இங்ஙனமாக இவ் வைந்தாங் கடல் கோளால் நிகழ்ந்த இந் நிகழ்ச்சிகள்,

"பஃறுளி யாற்றுடன் பன்மலை யடுக்கத்துக்
குமரிக் கோடும் கொடுங்கடல் கொள்ள
வடதிசைக் கங்கையும் இமயமும் கொண்டு
தென்திசை யாண்ட தென்னவன் வாழி"

என்று **ஆசிரியர் இளங்கோவடிகளாற் சிலப்பதிகாரத்தில்** மிகத் தெளிவாகவே கூறப்படுகின்றன. இக் கடல் கோளுக்குப் பின், தமிழ்நாட்டின் எல்லைகள் வடக்கே இமயமலையும் தெற்கே **குமரியாறும்** மேற்கும் கிழக்கும் கடல்களுமாக அமைந்தன. இவ் வெல்லைகளையே,

"தென்குமரி வடபெருங்கல்
குணகுட கடலாவெல்லை"

என்று பழந்தமிழ்ப் பாட்டுகள் குறிக்கின்றன. இவ் வெல்லையைக் குறிக்கும் பாட்டுகள், பழைய தமிழ் நூல்களில் பலவாகக் காணப்படுகின்றன.

ஒரு காலத்தில் இப்படி வடக்கே பனிமலை தொட்டுத் தெற்கே தென்குமரி ஆறு வரையில் தமிழகமாயிருந்த இந்நாடு, பின்பும் வர வர இடம் சுருங்குவதாயிற்று. இமயமலைக்கு வடக்கே இருந்த மக்களில் சிலர், இந் நாட்டினுள் நுழைந்து இமயமலை யிடங்களில் இருந்த தமிழர்களோடு கலந்து, அவ்விடங்களில் நிலைபெற்றனர். மெல்ல மெல்ல அவர்களுடைய மொழிகளும் தமிழ்மொழியோடு கலந்தன. முன்னமேயே தமிழ்மொழி வழக்குகள் அங்கங்கே

வேறுபட்டிருந்தமையால், இப் பிறமொழிகளும் வந்து கலந்தபோது, அவை பற்பல புதியமொழிகள் தோன்றுவதற்கு இடமாயின. இப்படி இந் நாட்டின் வட பகுதி பிறமொழிப் பகுதிகளாக மாறிவிட்டன. அப்போது வடக்கே **விந்தயமலையிலிருந்து** தெற்கே தென் குமரியாறு வரையில் தமிழ்மொழி வழங்கி வந்தது. விந்தயமலைக்கு வடக்கே 'வடநாடு' என்றும், அதற்குத் தெற்கே 'தென்னாடு' என்றும் ஒரு பிரிவு தோன்று வதற்கும் அப்போது இடமாயிற்று.

அதன்பின்னும், தமிழ்மக்கள் தமது தமிழ்மொழியில் பிறமொழிகளை மிகுதியாகக் கலக்க இடந்தந்து வந்தனர். அதனால் **திருவேங்கட மலைக்கு** வடக்கே இருந்த தமிழர்களும் பிற மொழியாளர்களாய் மாறி விட்டனர். அப்போது தமிழின் வடக்கெல்லை விந்தய மலையிலிருந்து வரவரக் குறைந்துகொண்டே வந்தது. ஒரு காலத்தில் தமிழின் வடவெல்லை **கிருட்டிண ஆறு** வரையில் இருந்ததென்றுந் தெரிகின்றது. இவ் வுண்மை சிற்பநூலிற் காணப்படுகின்றதென்று தாம் கேள்விப்படுவதாக **ஆசிரியர் உ. வே. சாமிநாதையர்** அவர்கள் குறிப்பிடுகிறார்கள்.

அதன்பின் சில காலங்களில் அவ் வெல்லையுங் குறைந்துதான் தமிழ்நாட்டுக்குத் **திருவேங்கடம்** வட வெல்லையாயிற்று. அப்போது இந் நாட்டின் எல்லைகள், வடக்கே திருவேங்கடமும் தெற்கே குமரியாறு மாக ஆயின. இற்றைக்கு ஐயாயிரத்து ஐந்நூறு ஆண்டுகட்குமுன் இருந்த எல்லைகள் இவை. **தொல் காப்பியத்தின் சிறப்புப் பாயிரத்தில்,**

"வடவேங்கடம் தென்குமரி ஆயிடைத்
தமிழ்கூறும் நல்லுலகம்"

என்று குறிப்பிடப்படுவது இந் நிலப்பகுதியே யாகும். இதன்கண், தென்குமரி என்று வருவது தென்குமரி ஆறு. இங்ஙனம் தொல்காப்பிய உரையிற் (நூற்பா, கூசகூ) **பேராசிரியர்** குறிக்கின்றார்.

இவ்வாறு தெற்கே குமரியாறு எல்லையாகக் கூறப்படுதலின், அந்த ஆறு அப்போது அழியாமல் உருவோடு இருந்திருக்கவேண்டும் என்று தெரிகின்றது. அப்படியிருப்பதற்கு, அந்த ஆற்றிற்குத் தெற்கே சிறிது நிலப் பகுதியும் அமைந்திருக்கவேண்டும். ஆகவே, ஐந்தாவது பெரிய கடல்கோள், இக் குமரியாற்றின் தெற்கிற் சிறிது நிலப்பகுதியை விடுத்து, அதற்குத் தெற்கே இருந்த பெரும் பாகங்களையே தன்னுள் அமிழ்த்திக்கொண்டதென்று துணிந்து கொள்ளப்படும். ஆயினும், அவ் விடுபட்ட நிலப்பகுதி சிறிதளவாகவே இருந்திருக்க வேண்டும். அது பெரிதாக இருந்திருக்குமானால், குமரியாறு தெற்கெல்லையாகக் கூறப்பட்டிராது. அப் பெரிய நிலப் பகுதியின் தென்கோடியே தெற்கெல்லையாகக் கூறப்பட்டிருக்கும். ஆதலால், அந் நிலவெல்லை சிறிதெனவே கொள்ளப்படும்.

இவ்வாறிருந்த இத் தமிழகம், அதன்பின் நிகழ்ந்த ஒரு சிறு கடல்கோளால், தெற்குப் பக்கமும் இடஞ் சுருங்குவதாயிற்று. அப்போது குமரியாறும், அதற்குத் தெற்கே இருந்த சிறு நிலப்பகுதியும் கடலில் மறைந்துபோயின. அதிலிருந்து, இந்நாட்டின் தென்முனை, குமரிக்கடல் எனப்படுகின்றது. குமரியாற்றின் வடகரை வரையில் கடல் வந்து நின்றமையின், இ நனங் குமரிக்கடல் எனப்படுவதாயிற்று. இக் கருத்தினாலேயே **சிலப்பதிகாரத்தில்** 'தொடியோள் பௌ

வம்' என்னுந் தொடரால் இந் நிகழ்ச்சி குறிப்பிடப் படுகின்றது. இத் தொடருக்குக் 'குமரிக் கடல்' என் பதே பொருள்.

அப்போது பாண்டியன், தான் இழந்துபோன அச் சிறிய நிலப் பகுதிக்கு ஈடாகச் சோழநாட்டெல்லை யிற் சிறிதும், சேர நாட்டு நிலம் சிறிதும் பெற்று அர சாண்டானென்று தெரிகின்றது.

> "அங்ஙனமாகிய நிலக்குறைக்குச் சோழநாட் டெல்லை யிலே **முத்தூர்க் கூற்றமும்** சேரமானாட்டுக் **குண்டூர்க் கூற்றமும்** என்னுமிவற்றை ...... ஆண்ட தென்னவன்"

என்று **அடியார்க்கு நல்லார்** கூறுவது இவ்வுண்மை யை நினைவு கூட்டுகின்றது. 'கூற்றம்' என்பது இப்போது 'தாலுக்கா' என்று சொல்லும் சிறு நிலப் பகுதியைப் போன்றது. இழந்த நாட்டிற்காகத் தென் னவன் இரண்டு கூற்றங்களைப் பெற்று ஆண்டா னென்று கூறுதலின், தென்குமரியாற்றின் தென்கரை யில் அப்போது இருந்த நிலப்பகுதி இவ்வளவுதான் இருந்திருக்கு மென்பது ஒருவாறு தெரிகின்றது.

இங்ஙனம் அச் சிறு நிலப்பகுதியுங் கடலில் அமிழ்ந்து குமரியாறும் மறைந்து போனமையின், அதுமுதல் தமிழ்நாட்டின் எல்லையைக் குறிப்பவர்கள், வடக்கே வேங்கடத்தையும் தெற்கே குமரி முனையை யும் கிழக்கிலும் மேற்கிலுங் கடலையுமே குறிப்பது வழக்கமாயிற்று! பிற்கால நூலான **நன்னூலின் சிறப்புப் பாயிரத்**தில்,

> "குணகடல் குமரி குடகம் வேங்கடம்
> எனும்நான் கெல்லையின் இருந்தமிழ்"

என்று இவ் வெல்லைகளே குறிக்கப்படுகின்றன. இப்படிப் பல்லாயிரம் ஆண்டுகளாகவே இந் நாடு இயற்கையினாலும் செயற்கையினாலும் தனது எல்லை குறைந்துகொண்டே வந்திருக்கிறது.

இனி, இக் காலத்திலோவென்றால், வடவேங்கடத் துக்கு இப்பாலும் பிற மொழிகள் வேரூன்றி யிருக் கின்றன. சென்னைக்கு வடக்கே பெரும்பாலுந் **தெலுங்கு மொழி** வழங்குகின்றது. வட மேற்கே **கன்னடம், துளுவம்** முதலிய மொழிகள் வழங்குகின் றன. இந் நாட்டின் மேற்குக் கரையோரம் முழுமை யும், **மலையாள மொழி** வழங்கும் தனி நாடாக மாறி யிருக்கின்றது. எஞ்சிய இடங்களிலும் அயல் மொழி யாளர் அங்கங்கும் பரவி யிருக்கின்றனர். சென்ற இரண்டு மூன்று நூற்றாண்டுகளாக **ஆங்கில மொழி** வழங்குவோர் அங்கங்கும் வந்து தங்கியிருக்கின்றனர். இப்போது ஒரு பத்துப் பதினைந்து ஆண்டுகளாக **இந்தி மொழியாளரும்** இங்கே தமது மொழியைப் பரவ வைக்கின்றனர்.

தமிழ் மக்கள் மட்டும் தம் மொழியினிடத்தும் தம் நாட்டினிடத்தும் தம் முன்னோர்களிடத்தும் அன் பும் கடமையும் செய்ந்நன்றி யுணர்வும் உடையவர்க ளானால், இந் நாட்டில் யாவர் வந்து எங்ஙனந் தங்கி னுங் குறையில்லை. கடல்கோள் முதலிய இயற்கை நிகழ்ச்சிகளால் நாடுகள் குறைந்துபோவதை யாருந் தடுப்பதற்கில்லை. ஆனால், மக்கள், தம் முன்னோரிடத் தும், தம் நாட்டினிடத்தும், தம் மொழியினிடத்தும் அன்பு குன்றி ஊக்கங் கெட்டுப் பிறமொழி ஆட்சிக்கு இடங்கொடுத்து, நாடிழந்து நலமிழந்து போகுஞ் செயற்கைத் தடைகளையேனும் நீக்கிக்கொள்ள

வேண்டுமன்றோ? உலகத்தில் அவரவருந் தத்தம் நாட்டளவிலிருந்து நலம் பெறுவதன்றோ எல்லாரும் நலமாக இருப்பதற்கு வழியாகும்? உலகத்தில் ஒரு சாரார் தேவைக்குமேல் வளமுடையவராயிருக்க, மற்றொரு சாரார் நாடும் நலமுமிழந்து மிக்க வறியராய் உழல்வது நன்றாமோ?

இயற்கை நிகழ்ச்சிகளால் அமிழ்ந்துபோன நிலப் பகுதிகள் போக, எஞ்சியிருக்கும் இயற்கை எல்லைப் படி **இக் காலத்தில் தமிழ் நாடாக இருக்கவேண்டுவது** இப்போதைய '**இந்தியாவே**' யாகும். வடக்கே இமய மலையும் தெற்கே குமரிக் கடலும் மேற்குங் கிழக்குங் கடல்களுமே இதன் எல்லைகள்.

இற்றைக்குப் பத்தாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே இவ்விந்திய நாடு முழுமையும் தமிழ் மக்கள் வாழ்ந்து விளங்கின ரென்பதற்கு, வர வர நல்ல சான்றுகளெல்லாம் கிடைத்துவருகின்றன. சில ஆண்டுகளுக்கு முன் இந்தியாவின் வட மேற்குப் பகுதியில் சிந்து ஆற்றை அடுத்துள்ள '**ஆரப்பா**', '**மோகஞ்சோதாரா**' முதலிய இடங்களில், நிலங்களை அகழ்ந்து கண்ட பொருள்கள் கொண்டு, அங்கே மிகப் பழைய காலத்திற், சிறந்த தமிழ் நாகரிகம் பரவியிருந்ததென்று ஆராய்ச்சியாளர் துணிந்துவருகின்றனர். இப்படியே **பெலுசித்தானத்தில்** 'நல்' என்னும் ஊரிற் கண்ட பொருள்களிலிருந்தும் இவ் வுண்மை தெளியப்பட்டு வருகின்றது.

ஆதலால், தமிழ்நாடு மிகவும் பழமையான தென்பதும், அப்போது அது மிகப் பெரிய நிலப் பரப்புடையதாக விரிந்திருந்த தென்பதும், பண்டு தொட்டே சிறந்த நாகரிக முடையதாகத் திகழ்ந்

திருந்த தென்பதும், பிறவும் இங்கெடுத்துக் காட்டிய உரைகளால் ஒருவாறு புலப்படக்கூடும். தமிழ்மொழியைத் தாய்மொழியாக உடைய தமிழ்மக்கள், இச் சிறப்புக்களை யெல்லாம் நினைந்து ஏற்ற நன்முயற்சிகளுடையவராய் இக்கால நிலைகட்கு ஏற்ப ஒழுகி, மேன்மேலும் நல்ல நிலைமைகளில் உயர்ந்து விளங்க வேண்டுவது கடமையாகும்.

## 3. நாட்டின் செழுமை

சங்க காலத்தில் வடக்கே இமயமலையிலிருந்து தெற்கே குமரி முனைவரையில் தமிழர் ஆட்சி நிலை பெற்றிருந்தது. '**கரிகாலன்**' என்னும் **சோழனும்**, '**நெடுஞ் செழியன்**' என்னும் **பாண்டியனும்** '**செங் குட்டுவன்**' என்னும் **சேரனும்** வடவிமயம் வரையில் தம் ஆட்சியைச் செலுத்தினர் என்பது பட்டினப் பாலை, சிலப்பதிகாரம் முதலிய நூல்களிலிருந்து தெரிகின்றது; அதனால் வாணிகம் முதலியனவும் அக் காலத்திற் செழித்திருந்தன. தமிழ்நாடு மிகவும் வளமுடையதாகத் திகழ்ந்திருந்தது.

தமிழரசர்களிற் சேர சோழ பாண்டியர்கள் முடியுடைய பேரரசர்களாகத் திகழ்ந்தார்கள். இவரன்றிக் குறுநில மன்னர்களும் பலர் இருந்தனர்.

சேரசோழ பாண்டியர்களிற் பாண்டியன் கடல் வளத்திற் சிறந்தவன்; சேரன் மலைவளத்திற் சிறந்தவன்; சோழன் நிலவளத்திற் சிறந்தவன். இம் மூவருள்ளும் பாண்டியனே பழமையானவன். குமரிநாடு இருந்தபோது அவன் மிகவும் வளமுடையவனாயிருந்தான். பின்பும், அவன் தனது நாட்டிற்குக் கிழக்கு தெற்கு என்னும் இருபக்கங்களிற் கடல் சூழ்ந்தவனா

தலால், அவன் கடல் வளத்திற் சிறந்து விளங்கினன். கடல்வளமாவன முத்து, பவளம், சங்கு, உப்பு முதலி யவை. சேரன் மலைநாடு உடையவனுதலால் அவ னுக்கு மலைவளங்கள் மிகுந்திருந்தன. அவை: தக்கோ லம், இலவங்கம், கருப்பூரம், சந்தனம், மிளகு முதலி யவை. சோழன் காவிரி நாடு உடையவனுதலால் அவனுக்கு நிலவளம் சிறந்திருந்தது. நெல் முதலிய தானியவகைகளும் கறிவகைகளும் போல்வன நில வளங்களாகும். இவற்றுல் எங்கும் வாணிகமும், செல் வமும், பிற எல்லா நலங்களுங் கொழித்திருந்தன.

மேலும் இந்தியா முழுமையும் அப்போது தமி ழரசு ஓங்கி யிருந்தமையால், இவ்வரசர்களுக்குப் பலப் பல திறைப் பொருள்களும் பிறவும் வளமாகக் கிடைத்து வந்தன. **சிலப்பதிகாரத்**தில் இத் திறைப் பொருள்கள் சிலவற்றைப்பற்றி,

“ இமையவர் உறையும் சிமையப் பிடர்த்தலைக்
கொடுவரி ஒற்றிக் கொள்கையிற் பெயர்வோற்கு
மாநீர் வேலி வச்சிர நன்னுட்டுக்
கோன்இறை கொடுத்த கொற்றப் பந்தரும்,
மகதநன் னுட்டு வாள்வாய் வேந்தன்
பகைப்புறத்துக் கொடுத்த பட்டிமண் டபமும்,
அவந்தி வேந்தன் உவந்தனன் கொடுத்த
நிவந்தோங்கு மரபின் தோரண வாயிலும்,
பொன்னினும் மணியினும் புனைந்தன வாயினும்
நுண்வினைக் கம்மியர் காணு மரபின
துயர்நீங்கு சிறப்பினவர் தொல்லோர் உதவிக்கு
மயன்விதித்துக் கொடுத்த மரபின இவைதாம் ”

என்று ஆசிரியர் **இளங்கோவடிகள்** சிறப்பாக எடுத்துக் காட்டுகின்ருர்.

சங்கநூலிற் **காவிரி, வைகை** முதலிய ஆறுகளின் வளங்களும், **தொல்லி, பறம்பு** முதலிய மலைகளின் வளங்களும், **கொற்கை, தொண்டி** முதலிய கடற்றுறைகளின் வளங்களும் பலபடியாக விளக்கப்பட்டிருக்கின்றன. இவையல்லாமலும் **மதுரை, காவிரிப்பூம் பட்டினம், வஞ்சி** முதலிய பெரிய நகரங்கள் பலவற்றின் செழுமைகளும் பழைய நூல்களிலிருந்து தெரிந்துகொள்ளலாம். **மணிமேகலையில்**, நகர்வளம்பற்றி வருகின்ற

"தாமரை குவளை கழுநீ ராம்பல்
பூமிசைப் பரந்து பொறிவண் டார்ப்ப
இந்திர தனுவென இலங்ககழ் உடுத்து
வந்தெறி பொறிகள் வகைமாண் புடைய
கடிமதி லோங்கிய இடைநிலை வரைப்பின்
பசுமிளை பரந்து பல்தொழில் நிறைந்த
வெள்ளிக் குன்றம் உள்கிழித் தன்ன
நெடுநிலை தோறும் நிலாச்சுதை மலரும்
கொடிமிடை வாயில்"

என்னும் வரிகள்போல்வன இங்கே நினைவுகூர்தற்குரியன. **மலைபடுகடாம்** போன்ற நூல்களிலிருந்து, காடுகள் குன்றுகள் வெளிகள் முதலியவற்றின் வளங்களும் நலங்களும் நன்கு விளக்கமாகின்றன. இங்ஙனமெல்லாம் இத் தமிழ்நாடு பல வகைகளிலும் அக்காலத்தில் வளம் மிகுந்து செழித்திருந்தது.

நாட்டின் மொழி, நாட்டின் பெருமை, நாட்டின் வளம் என்பவற்றால் இங்ஙனம் மாட்சிமை சிறந்த இத் தமிழ்நாட்டைத் தமிழ் மக்கள் மேன்மேலும் உயர்வாக்கிக்கொண்டு நல்வாழ்வில் ஓங்கி மிளிரவேண்டும். தமிழ்மொழியைப்போல இவ்வளவு அழகிய மொழியும், இந் நாட்டின் பெருமையைப்போல இவ்

வளவு பழமையான விரிந்த பெருமையும், இந் நாட்டின் வளத்தைப்போலக் கடல் மலை ஆறுகளின் இயற்கையமைப்பும், தட்பவெப்ப நிலையும் வேறிடங்களில் அமையவில்லை. இந்தியாவின் மாட்சி உலகமெங்கும் பாராட்டப்படுகின்றது. பழமையும் பெருமையும் செழுமையும் ஒருங்கே வாய்ந்த நம் பழந் தமிழ்நாடு நம்மனோர்க்குப் பிறவியுரிமைச் சொத்தாயிருப்பது எவ்வளவு நல்ல வாய்ப்பு !

நாற்புறமும் நீலக்கடல் சூழ்ந்து நடுவில் ஒரு தீவாயிருக்கும் **இங்கிலாந்து** தேயத்தை அந் நாட்டினிற் பிறந்து உலக ஒளியாக வயங்கிய **சேக்குவீயர்** என்னும் புல்வர்பெருமான், 'நீலத்திரைகளின் நடுவில் மின்னும் ஒரு மாணிக்க மணி'யென்று மகிழ்ந்து கூறினார். நமது வளத்தோட்டமாகிய இந் நன்னாட்டில் அவர் தோன்றியிருந்தால், ஆ, இதனை எவ்வளவு நன்றாகக் கூறி மகிழ்ந்திருப்பார் !

சங்கநூலிற் **காவிரி, வைகை** முதலிய ஆறுகளின் வளங்களும், **கொல்லி, பறம்பு** முதலிய மலைகளின் வளங் களும், **கொற்கை, தொண்டி** முதலிய கடற்றுறைகளின் வளங்களும் பலபடியாக விளக்கப்பட்டிருக்கின்றன. இவையல்லாமலும் **மதுரை, காவிரிப்பூம் பட்டினம், வஞ்சி** முதலிய பெரிய நகரங்கள் பலவற்றின் செழுமை களும் பழைய நூல்களிலிருந்து தெரிந்துகொள்ள லாம். **மணிமேகலையில்**, நகர்வளம்பற்றி வருகின்ற

"தாமரை குவளை கழுநீ ராம்பல்
பூமிசைப் பரந்து பொறிவண் டார்ப்ப
இந்திர தனுவென இலங்ககழ் உடுத்து
வந்தெறி பொறிகள் வகைமாண் புடைய
கடிமதி லோங்கிய இடைநிலை வரைப்பின்
பசுமிளை பரந்து பல்தொழில் நிறைந்த
வெள்ளிக் குன்றம் உள்கிழித் தன்ன
நெடுநிலை தோறும் நிலாச்சுதை மலரும்
கொடிமிடை வாயில்"

என்னும் வரிகள்போல்வன இங்கே நினைவுகூர்தற் குரியன. **மலைபடுகடாம்** போன்ற நூல்களிலிருந்து, காடுகள் குன்றுகள் வெளிகள் முதலியவற்றின் வளங் களும் நலங்களும் நன்கு விளக்கமாகின்றன. இங்ஙன மெல்லாம் இத் தமிழ்நாடு பல வகைகளிலும் அக் காலத்தில் வளம் மிகுந்து செழித்திருந்தது.

நாட்டின் மொழி, நாட்டின் பெருமை, நாட்டின் வளம் என்பவற்றால் இங்ஙனம் மாட்சிமை சிறந்த இத் தமிழ்நாட்டைத் தமிழ் மக்கள் மேன்மேலும் உயர்வாக்கிக்கொண்டு நல்வாழ்வில் ஓங்கி மிளிரவேண் டும். தமிழ்மொழியைப்போல இவ்வளவு அழகிய மொழியும், இந் நாட்டின் பெருமையைப்போல இவ்

வளவு பழமையான விரிந்த பெருமையும், இந் நாட்டின் வளத்தைப்போலக் கடல் மலை ஆறுகளின் இயற்கையமைப்பும், தட்பவெப்ப நிலையும் வேறிடங்களில் அமையவில்லை. இந்தியாவின் மாட்சி உலகமெங்கும் பாராட்டப்படுகின்றது. பழமையும் பெருமையும் செழுமையும் ஒருங்கே வாய்ந்த நம் பழந் தமிழ்நாடு நம்மனோர்க்குப் பிறவியுரிமைச் சொத்தாயிருப்பது எவ்வளவு நல்ல வாய்ப்பு !

நாற்புறமும் நீலக்கடல் சூழ்ந்து நடுவில் ஒரு தீவாயிருக்கும் **இங்கிலாந்து** தேயத்தை அந் நாட்டினிற் பிறந்து உலக ஒளியாக வயங்கிய **சேக்குவீயர்** என்னும் புல்வர்பெருமான், 'நீலத்திரைகளின் நடுவில் மின்னும் ஒரு மாணிக்க மணி'யென்று மகிழ்ந்து கூறினார். நமது வளத்தோட்டமாகிய இந் நன்னாட்டில் அவர் தோன்றியிருந்தால், ஆ, இதனை எவ்வளவு நன்றாகக் கூறி மகிழ்ந்திருப்பார் !

———

# ந. அரசு

## 1. அரசியலின் முதன்மை

நாட்டின் நல்வாழ்வுக்கு அரசாட்சி இன்றியமையாதது. அரசனில்லாத நாடு முற்காலத்தில் உயிரற்ற உடம்புபோலக் கருதப்பட்டது.

> "மன்னன் உயிர்த்தே மலர்தலை யுலகம்"

என்று இக்கருத்துப் **புறநானூற்றில்** வருகின்றது. நாட்டின் வளத்தை மேன்மேலும் பெருக்கவும்; குடிமக்கள் வாழ்க்கைக்குக் கட்டாயமான கல்வி, தொழில், நலனோம்பல் முதலிய பொது நலங்களிற் கருத்தூன்றவும்; பகைவர் கள்வர் முதலியவர்களால் மக்கள் அலைவு கொள்ளாதபடி பாதுகாக்கவும் இன்னும் இவைபோன்ற பல காரியங்கள் செய்யவும் ஒரு நாட்டுக்கு அரசாட்சி கட்டாயமாயிருக்கின்றது.

இதனாலேயே ஆட்சியை 'நிழல்' என்று சொல்லும் வழக்கம் ஏற்பட்டது. 'குடை நிழல்' என்பதும் இது. "வேந்தன் கவிகைக்கீழ்த் தங்கும் உலகு" என்பர் **திருவள்ளுவர்**. சங்க காலத்திலிருந்த தலையாலங் கானத்துச் செரு வென்ற நெடுஞ் செழியன் என்னும் ஓர் அரசன், 'தான் இன்ன காரியத்தை நிறைவேற்றாமற் போனால், என் குடிமக்கள் வேறு தங்குமிடனின்றி அலமருக' என்று வஞ்சினங் கூற நேர்ந்த ஒரு காலத்தில், 'நிழல்' என்னும் சொல்லை நன்றாகப் பயன்படுத்துகின்றான்.

> "என்நிழல் வாழ்நர் செல்நிழல் காணாது
> கொடியன்எம் இறையெனக் கண்ணீர் பரப்பிக்
> குடிபழி தூற்றுங் கோலேன் ஆகுக"

என்பது அவன் வஞ்சின மொழி. இது **புறநானூற்** றிற் காணப்படுகின்றது.

## 2. ஆட்சி முறை

இந் நன்மொழிகளை உற்று நோக்கும்போது, குடிகளின் நலத்திற் சங்ககால அரசர்கள் எவ்வளவு கருத்தூன்றி நின்றார்களென்பது நன்கு விளக்கமாகின்றது. 'குடிகளுக்காகவே அரசாட்சி' என்பது அவர்கள் கருத்து. கோனாட்சியாக இருந்தாலும் அது குடியாட்சியாகவே அக் காலத்தில் விளங்கியிருந்தது. குடிகளின் கருத்தறிந்து அதற்கு இசைவாகவே அவர்கள் நடந்து வந்தனர். அக் காலத்தில் ஆட்சி நடத்துவதற்கு இரண்டு பேரவைகள் அவர்களுக்குத் துணையாயிருந்தன. அவை **ஐம்பெருங்குழு, எண்பேராயம்** என்பவை. இந்த அவையத்தாருள் **மாசனம்** என்பவரும் ஒரு வகையார். அவர்கள் குடிமக்களின் சார்பாளராவர். அரசனுக்குக் குடிமக்களின் சார்பான கருத்துக்களை அவர்கள் தெரிவிப்பார்கள். அரசன் அவர்கள் கருத்தறிந்து ஆட்சி நடத்துவான். அக்கால அரசர்கள், தம்மையுங் குடிமக்களுள் ஒருவராகவே கருதிக், கலந்த மனப்பான்மையுடன் அரசாண்டு வந்தனர்.

ஆட்சிமுறைகள் அக் காலத்தில் எவ்வளவோ திறமையாகவும் நாகரிகமாகவும் நடைபெற்று வந்தன. 'ஐம்பெருங் குழு', 'எண்பேராயம்' என்னும் இந்த அரசவைப் பாகுபாடே அதற்குப் போதுமான சான்றாகும். அமைச்சர், படைத்தலைவர், காவல் தலைவர், தூதுவர், ஒற்றர் முதலியோ ரெல்லாரும் இப் பாகுபாட்டிற் சேர்ந்தவரே.

ஆசிரியர் திருவள்ளுவர் **அமைச்சு, நாடு, அரண், பொருள், படை, நட்பு** என்னும் ஆறுவகைகளை ஆட்சிக்

குரிய உறுப்புக்களாக எடுத்தோதுகின்றூர். அரசிய லில் என்னென்ன வெல்லாம் ஊன்றிக் கருதினர் என்பதை இதனுல் தெரிந்துகொள்ளலாம்.

பழைய அரசியலில் **அறங்கூறு அவையம்** என்பதும் தனியே இருந்தது. யாரேனும் தமக்குள் மாறுபட்டு வழக்குரைத்து வந்தால் அவர்களுக்கு இந்த அவையம் அறநிலை திரியாமல் அன்போடும் திறமையோடும் தீர்ப்புக் கூறும். இந்த அவையத்தில் தக்க சான்றோர்களையே தீர்ப்புக் கூறுவோராக அரசன் அமைப்பான். இதனை அவன் ஒரு முதன்மையான பணியாகக் கருதிவந்தான் என்பது,

> "அறநிலை திரியா அன்பின் அவையத்துத்
> திறனில் ஒருவனை நாட்டி மெலிகோல்
> செய்தே னுகுக."

என்று ஓர் அரசன் சூளுரை கூறுவதிலிருந்து தெரிகின்றது.

### 3. அரசனது கடமை

நாட்டை மேன்மேலும் வளம்படுத்துவதென்பது, அரசர்களின் முதன்மையான கடமைகளுள் ஒன்று. நாட்டின் வளத்துக்கு நீர்ப்பாசன வசதிகளை உண்டுபண்ணுவது கட்டாயமாகும். **காந்தன்** என்னும் பழைய சோழ மன்னன் முதன் முதலிற் காவிரியாற்றைச் சற்று அகலமாக வெட்டி வளம்படுத்தினுன் என்பதற்கான குறிப்பு **மணிமேகலை** என்னும் நூலின் பதிகத்திற் காணப்படுகின்றது. பின்பு **கரிகால்வளவன்** காவிரிக்குக் கரைகட்டி நீர்வளத்தை மேலும் பெருக்கினுன். அதனுல் இருகரை நிலங்களும்

மிகவும் வளம்பெற்றன. விளையுள் மிகுதியா யிருக்கின்றது. நீர்நிலைகளைப் பெருக்கிக் குடிமக்களின் வேளாண்மைக்கு நல்ல வசதிகள் செய்து கொடுப்பது அரசனுக்குக் கடமை என்பதை

" நிலன்நெளி மருங்கின் நீர்நிலை பெருகத்
தட்டோ ரம்ம இவண்தட் டோரே
தள்ளா தோர்இவண் தள்ளா தோரே"

என்னும் **புறநானூற்ற**டிகள் மிகவும் உறுதியாக எடுத்துக் காட்டுகின்றன. 'நிலம் எங்கெங்கே சற்றுப் பள்ளமாயிருக்கின்றதோ அங்கங்கே நீர்நிலைகள் அமையும்படி கரைகள் கோலித் தளைசெய்த அரசர்களே இந் நிலவுலகத்தில் தம் பெயரை நிலைநிறுத்தித் தளைசெய்தோராவர்; அங்ஙனம் நீர்நிலைகளுக்குத் தளைசெய்யாதவர் இங்கே தம் புகழையுந் தளைசெய்யாதவரேயாவர்' என்பது இவ் வடிகளின் பொருள். சேர சோழ பாண்டியர்களுள் சோழமன்னனே வயல்வளம் மிகுதியாக உடையவன். ஆதலால், நீர்நிலைகளைப் பெருக்கிப் பாசனவசதிகள் ஏற்படுத்துவதில் சோழ அரசர்கள் மிகவுங் கருத்துடையவர்களாக இருந்திருக்கிறார்கள்.

**கல்வி, தொழில், நலவேம்பல்** முதலிய கருத்துக்களிலும் அரசன் தக்கபடி கருத்தூன்றிவரவேண்டும். அரசாட்சிக்குக் கல்வி இன்றியமையாதது என்னுங் கருத்தால் **ஆசிரியர் திருவள்ளுவர்** தமது திருக்குறளில், கல்வி கேள்விகளைப்பற்றிய அதிகாரங்களை அரசியலில் அமைத்து விளக்கியிருக்கின்றார். அரசர்கள் கல்விப் பொருளை நன்கு மதித்து அதனைத் தம் நாடு முழுமையும் பரவச் செய்வதில், சிறப்பாக ஊக்கங் கொண்டிருந்தனர். குடிமக்க ளெல்லாரும் அறிவுடை

யவர்களாக இருக்கவேண்டு மென்பது அவர்கள் கருத்து. உலகத்தில் வாழ்வதும் அவ் வாழ்வுக்கு ஆதாரமாக ஆட்சி நடத்துவது மெல்லாம், கொடிய அறியாமை யிருளி லிருந்து நீங்கி இன்புறுவதற் காகவே என்பதை அவர்கள் நன்கு உணர்ந்து, எங் குங் கல்வியைப் பரவச்செய்திருக்கிறார்கள்.

பண்டைக் காலத்துப் **பாண்டிய அரசர்கள்** பரம் பரை பரம்பரையாகவே தமிழ்ச் சங்கங்கள் அமைத் துக் கல்வியை ஓம்பிவந்தார்கள். நாடெங்கு மிருந்த சிறந்த அறிஞர்களை வருவித்துப், பல தலையான புதுப்பொருள்கள் ஆராய்ந்து அரிய பெரிய நூல்களை யெல்லாம் இயற்றி வழங்கும்படி செய்வித்தார்கள். மதுரையில் நடைபெற்று வந்த தமிழ்ச் சங்கம் இத் தகையதேயாம். பல்லாயிரக் கணக்கான ஆண்டுக ளாக அங்கே இங்ஙனம் நல்ல கல்வி முயற்சிகள் நடை பெற்று வந்தன. பலகலைப் புலவர்களையும் நன்கு மதித்து அவர்களுக்கு வேண்டிய வசதிகளை அரசர்கள் கருத்தாகச் செய்து வந்தார்கள். அவர்களுக்குப் **பொற் காசுகளே** யல்லாமல் **நாடுகள்** முதலியனவும் வழங்கிச் சிறப்பித்தார்கள்.

சங்க நூல்களில், **பதிற்றுப்பத்து** என்பதும் ஒன்று. கல்வி யறிவிற் சிறந்த பெரு மக்களைச் **சேர அரசர்** களும் அக் காலத்தில் எவ்வளவு மிகுதியாக ஆதரித்து வந்தன ரென்பதற்கு அந் நூலில் நல்ல சான்றுகளெல் லாம் காணப்படுகின்றன. ஓர் அரசன் ஓர் அறிஞர்க்கு **ஐந்நூறு ஊர்கள்** வழங்கியிருக்கிறான்; தனது **நாட்டு வருவாயில் ஒரு பகுதியை** முப்பத்தெட்டு ஆண்டுகள் வரையில் அடையலாமென்று ஓர் உரிமையையும் வழங்கினான்.

அரசர்கள் கலை யறிஞர்களுக்குப் பலவகையான பொருள்களை வழங்கியிருக்கிறார்கள். ஒருவன் தனது **அரசியல் பாகத்தையே** வழங்கிவிடுகிறான். ஒருவன், சில சொத்துக்களிலிருந்து வரும் வரும்படியை ஆண்டு தோறும் அடைந்துவரும்படி **வாழ்நாட் பரிசாக** வழங்கு கிறான். தன் **புதல்வனையேகூடப்** புலவருக்கு வழங்கி விடுகிறான். அரசர்களுக்குக் கல்வி வகையில் அள வில்லாத நன் மதிப்பும் தம்மை மறந்த மகிழ்ச்சியும் இருந்தன.

ஓர் அரசன் ஒரு புலவரோடு பேசி அளவளாவிக் கொண்டே ஒரு மலையின்மேல் ஏறினான். இயற்கைக் காட்சிகள் நாலா பக்கமும் இன்பந் தந்தன. புலவர் பெருமானது ஆழ்ந்த கல்வி யறிவிலும் உயர்ந்த பெருந்தன்மையிலும் அரசனது உள்ளம் படிந்து தன்னை மறந்தது. அவர் நல்ல முறையில் நெடுங்காலம் வாழவேண்டுமென்று அவன் நினைத்தான். அறிஞர் களுக்கு உதவாத செல்வம் வேறு எதற்காக இருக்க வேண்டும் என்றுங் கருதினான். குணத்தோடு நிறை வடைந்த அவரது பெருங் கல்வி நாடெங்கும் பரவ வேண்டுமென்பது அவன் எண்ணமாயிற்று. உடனே அம் மலைமேலிருந்தபடியே, **நாலா பக்கமும் தன் கண் ணுக்குத் தெரிந்த நிலப் பகுதி முழுமையும்** அப் புல வர் பெருமானுக்கு வழங்கிவிட்டான். அந் நிலப் பரப்பில் எத்தனையோ ஊர்கள் இருந்திருக்கக்கூடும். **கபிலர்** என்னும் புலவர் பெருமானே இவ் வருமைப் பரிசிலைப் பெற்றவர்.

இப் பெரியார் இதற்கு முன் எத்தனையோ ஊர் களைப் பரிசில் பெற்றிருக்கிறார். ஓர் அரசனது வெற் றியை ஓர் அறிஞர் பாராட்டுகின்றபோது, ‘அவன்

பகைவர்கள் அவனுக்குத் தோற்றுப் போர்க்களத்தில் எறிந்துவிட்டுச் சென்ற **வேல்கள்,** கபிலர் பரிசிலாகப் பெற்ற **ஊர்களைவிடப்** பலவாக இருந்தன' என்று நயமாகக் கூறி வியப்படைகின்றார்.

"ஒன்றைப் பூட்கைச் சென்னியர் பெருமான்
இட்ட வெள்வேல்.........நல்லிசைக்
கபிலன் பெற்ற ஊரினும் பலவே"

என்பது அவர் சொல். கபிலரது கல்வியை அரசர்கள் எவ்வளவு மிகுதியாக ஆதரித்து வந்தன ரென்பதை இதிலிருந்து நன்றாகத் தெரிந்துகொள்ளலாமன்றோ!

இன்னும், ஓரரசன் ஒரு புலவருக்குத் **தன் அரசிருக்கையையே** அளித்துவிட்டான். அப் பரிசிலைப் பெற்றவர் ஒரு வேளாளச் செம்மல். அரசத் திருவோடு கல்வித் திருவும் உடைய அவர் அரசாண்டால், நாட்டில் கல்வி நன்றாகப் பரவ இடமுண்டாகுமன்றோ! ஆனால் அப் பெரியார், அரசாட்சியையே பரிசிலாகப் பெறுவதை விரும்பவில்லை; அரசனது பேரன்புக்கு உவந்து, அவனுக்கே அதனைத் திருப்பிக் கொடுத்து, அவன் நட்புக்காக அவ்வரசில் தாம் அமைச்சராக இருந்து விளங்கினர். கல்வித் துறையில் அக்கால அரசர்களுக்கு இருந்த ஊக்கமும் அன்புந்தாம் என்ன!)

(ஓரரசன் ஒரு புலவருக்கு ஒரு **பொன் கட்டியை** நிறுத்து வழங்கினன். அப் பரிசில் பெற்றவர் பெண் புலவர். பெண் மக்களிற் கல்வி நலம் இல்லாதவர்களெல்லாம் நகைகள் அணிந்துகொள்கின்றனர்; கல்வி நலமுடைய இவ்வம்மையார்க் கன்றோ அணிகலன்கள் அழகு செய்யும் என்று அவன் உள்ளம் நினைத்தது.

உடனே 'கலன் அணிக' என்று இப் பரிசிலை அவன் வழங்கினான்.

இங்ஙனம் பாண்டிய சேர மன்னர்களேயன்றிச் **சோழ அரசர்களும்** தமது நாட்டிற் கல்விக்கு நல்ல ஆதரவு தந்துவந்திருக்கிறார்கள். **பட்டினப் பாலை** என்னும் ஓர் அரிய செய்யுளை இயற்றியதற்காக அதன் ஆசிரியர்க்குக் **கரிகால் வளவன்** என்னுஞ் சோழன் **பதினாறு நூறாயிரம் பொன்** பரிசளித்திருக்கிறான்.

இனி, இம் முடியுடைப் பெருமன்னர்களே யல்லாமல், குறுநில மன்னர்கள், வள்ளல்கள், நாட்டுப் பெருமக்கள் முதலியோரும் கல்வியைப் பெருவாரியாக ஆதரித்து நிற்பதில் ஒரே முனைப்புடையவரா யிருந்திருக்கின்றனர். **கபிலர், பாரியின்** உயிர் நண்பராய் அவன் அவைக்களத்துப் புலவராய் விளங்கியிருந்து, அவன் தனது செல்வப் பொருளை முற்றுஞ் சிந்தியது போலவே இவருந் தமது கல்விப் பொருளை நிரம்பச் சிந்தி யிருக்கின்றனர். இவர் சிந்திய செந்தமிழ்ச் சிதர்கள், சங்கத் தமிழ் நூல்களில் அங்கங்குங் காணப் படுகின்றன. 'கபிலரது பாட்டு' என்று வழங்கிவரும் வழக்கும் இதற்கு ஓர் ஆதரவாகும். **குமணவள்ளல், பெருஞ்சித்திரனார்** என்னும் புலவர் பிரானது குடும்பத்துக்கே பேராதரவா யிருந்தான். சிறந்த தமிழ் மூதாட்டியாரான **ஔவையாரின்** அரும்பெருங் கல்வித்திறம் எங்கும் பரவுவதற்கு **அதியமான்** நட்பு ஒரு பெருங் காரணமா யிருந்தது.

இவ்வகைகளால், சங்க காலத்தில் கல்வி நல்ல ஆதரவு பெற்று மேலோங்கி யிருந்தது. நாட்டிற் பெரும்பான்மையான மக்கள் கல்வி யறிவு உடையவராய் விளங்கினர். மேலும், அரசர்கள் தமது அரசவை

யில் கல்வி வல்லவர்களையே சேர்த்துக் காரியம் நடத்தி வந்தனர். கல்விக்குமுன் எத்தகைய வேறு பாட்டையும் அரசர்கள் கருதுவதில்லை. அரசவையிற் கல்வியே முதன்மைபெற்று நின்றது.

> "ஒருகுடிப் பிறந்த பல்லோ ருள்ளும்
> மூத்தோன் வருக என்னாது அவருள்
> **அறிவுடையோன் ஆறு அரசும் செல்லும்"**

என்று பாண்டியன் ஆரியப்படை கடந்த நெடுஞ் செழியன் என்னும் பேரரசரே, தம்போன்ற அரசர்கள், அறிஞர்களின் அறிவுரை வழியே விரும்பிச் செல்லும் உண்மையை வெளியிட்டிருக்கின்றார்.

இந்தக் காலத்திலும் நம்மனோர் சிறிது தமிழ்க் கல்வி உடையவர்களாக விளங்குகின்றார்க ளென்றால், அதற்குப் பண்டைத் தமிழரசர், கல்வியைப் பரவச் செய்து அரசாண்ட ஆட்சி முறையும் ஒரு காரணமாகும் என்பதிற் சிறிதுந் தடையில்லை. அத்தமிழரசுகள் இல்லையேல், நம் கைகளிற் பத்துப்பாட்டு எட்டுத்தொகை போன்ற உயர்ந்த தமிழ் நூல்களெல்லாம் தங்குவதற்கு வாயிலுண்டோ!

இனிச், சங்க கால அரசியல் வேறு பல கலைப் பிரிவுகள் தொழில்கள் முதலியவற்றைப் பெருக்குவதிலும் கருத்தூன்றி நின்றது. கரிகாற் பெருவளவன் காலத்தில் **மாதவி** யென்னும் நடிகை தனது நாடகக் கலையைப் புலப்படுத்திப் பரிசு பெற்றாள். **ஆயிரத்தெண் கழஞ்சு பொன்** ஒரு நாள் ஆடலுக்குப் பரிசாகத் தரப்பட்டது. பாணர், கூத்தர், விறலியர் முதலிய இசை நாடகக் கலைஞரும் அரசர்களாற் பெரிதும் ஆதரிக்கப்பட்டு வந்தனர். இவர்களுக்குப் **பொன்னாற்**

**செய்த தாமரைப் பூக்கள்** முதலியனவும் பரிசளிப்ப துண்டு. இது **புறநானூறு, பெரும்பாணாற்றுப்படை** முதலிய நூல்களால் தெரிகின்றது. இனி, அரசர்களும் நாட்டிலுள்ள பெருமக்களும் இப் பாணர் முதலியோரைத் தம் குடும்பக் கலைஞராக இருத்தி அவர் கலைகளை ஆதரித்து வந்திருக்கின்றனர். இவையல்லாமலும், இசைக்கும் நாடகத்துக்குமென்று தனித்தனிக் கழகங்கள் தமிழ்ச்சங்கத்தில் இணைக்கப்பட்டுப் பாண்டிய அரசர்களின் ஆதரவுபெற்று விளங்கியிருந்தன.

தமிழ் நாட்டிற் பலவகையான **தொழில்களை** அரசர்கள் எங்கும் பெருக்கி உதவினர். நுட்பமுந் திட்பமும் வாய்ந்த நல்ல தொழில்களெல்லாம் அரசியல் ஆதரவின்றி நாட்டில் நடைபெறுவதற்கு வழியில்லை. தமிழ் நாட்டுத் தொழிலாளரே யல்லாமல் பிறநாட்டுத் தொழிலாளரையும் இங்கு வருவித்துத் தொழிற் சிறப்பைப் பல படியாகப் பெருக்குதலில் அப்போது ஊக்கம் பெருகி யிருந்தது. **மகதநாட்டு வினைஞரும், மராட்ட நாட்டுக் கம்மரும்,** அவந்தி **நாட்டுக் கொல்ல**ரும், **யவன நாட்டுத் தச்சரும், தண்டமிழ் வினைஞ**ரோடு கூடிப் பலவகைத் தொழில்களும் செய்வதற்குத் தமிழ் அரசியல் இடங்கொடுத்தது. **மணிமேகலை** என்னும் நூலில் இத் தொழிலாளர் பலருங் கூறப்படுகின்றனர். பகை நாட்டின்மேற் படையெடுத்துச் சென்ற படைகள் தாம் தங்குவதற்காக அந் நாட்டின் காட்டிற் பாசறை அமைத்தபோது, **யவனத் தொழிலாள**ரால் **புலிச் சங்கிலியும் நிறப்படா**மும் இட்டு அரசனுக்காக உயர்வான **படாம்வீடு** அமைக்கப்பட்ட செய்தி பத்துப் பாட்டுள் ஒன்றான **முல்லைப்பாட்டிற்** சிறப்பாகக் குறிக்கப்படுகின்றது.

இனி, நாட்டு மக்களின் **நலப் பாதுகாப்பிலும்** அரசர்களுக்கு அக் காலத்தில் மிக்க நினைவு உண்டு. நகரங்களின் அமைப்பே இதற்குப் போதிய சான்ருகும். தெருக்கள் நீளமாகவும் அகலமாகவும் விளங்கின.

"ஆறுகிடந் தன்ன அகல்நெடுந் தெரு"

என்று ஒரு பழைய தமிழ்த் தொடர் வருகின்றது. தெருக்களின்மேல் அழுக்குநீர் ஓடி யார்க்கும் நோய் முதலிய தீங்குகள் உண்டாகாதபடி, அத் தெருக்களின் அடியிற் கால்கள் அகழ்ந்து அதன் வழியே அந்நீரைப் போக்கி வந்தனர். கண்ணுக்குத் தெரியாதபடி இங்ஙனம் மறைத்துப் போக்கினமையால் அக் கால்களுக்குக் 'கரந்து படை' என்று முன்பு பெயரிருந்தது. இப் பெயர் **சிலப்பதிகாரத்தில்** வருகின்றது. தெருக்கள் முதலியவற்றின் தூய்மையில் அக்கால அரசியலார்க்குக் கருத்திருந்தமை இதனுற் பெறப்படும்.

நகரங்களில் அங்கங்கும் பூங்காக்களும் எந்திர வாவிகள் முதலியனவும் அமைக்கப்பட்டன. காற்று, தூய்மை, காட்சி, ஏனைப் புலன் நுகர்வுகள், மன அமைதி முதலிய பலவகையான நலன்களையும் இவை மக்களுக்கு உண்டாக்கிவந்தன.

## 4. போர்த்திறம்

இனிப், பகைவர் முதலியோரால் நாடு நலியாதபடி தமிழரசர்கள் மிக விழிப்பாகப் பாதுகாத்து வந்தன ரென்பதும் அறிந்துகொள்ளவேண்டும்.

அரசர்கள் நல்ல வீரர்களா யிருந்தனர். வீரக் குடிகளையும் செழுமையாகப் பாதுகாத்து வந்தனர். இருதிறத்தாரும் போர்த்திறமையில் நல்ல பயிற்சி

பெற்றிருந்தனர். நால்வகைப் படைகளும் செம்மையான நிலைமையில் இருந்தன. அவர்கள் கையாண்ட போர்க்கருவிகளும் பலப்பல வகையானவை.

நகரத்தின் வெளியிலிருந்து கோட்டையின் உள்ளிடம் வரையிற் காவல்கள் அமைக்கப்பட்டிருந்தன. காடு, மலை, வெளி, நீர்நிலை முதலியன வெல்லாம் இயற்கை அரணமாகத், தக்கபடி பயன்படுத்திக் கொள்ளப்பட்டன. இவையல்லாமற் செயற்கையாக அமைந்த பல பாதுகாப்புக் கோட்டைகளும் உண்டு. அவை, உயரமும் அகலமும் திண்மையும் அணுகுவதற்கு அருமையும் உள்ளவையாக அமைத்து வைக்கப்பட்டன. கோட்டைகள் மலைகளின்மேலும் அமைக்கப்படுவதுண்டு. சங்க காலத்திலிருந்த **ஓரி** மன்னனது மலைக்கோட்டையின் அடையாளங்கள் இப்போதும் சேலம் பக்கத்திலுள்ள **நாமக்கல் மலை**யின்மேற் காணப்படுகின்றன என்பர். தரையிற் கட்டப்பட்ட கோட்டைகளும் மலைகளைப்போல உயரமாயிருந்தன. அவற்றைச் சுற்றி ஆழமும் அகலமும் வாய்ந்த அகழிகளும் உண்டு. கோட்டைச் சுவர்களின் உச்சியில், பகைவர்களைத் தாக்குதற்கேற்ற பல வகையான பொறிகள் அமைக்கப்பட்டிருந்தன. ஒவ்வொரு பொறியும் ஒவ்வொரு வடிவமாக இருக்கும். பலவேறு வகையான படைகள் அவற்றிலிருந்து பகைவர்கள்மேல் விடப்படும். இவைபோன்ற குறிப்புக்களெல்லாம் சிலப்பதிகாரம், புறநானூறு முதலிய நூல்களில் விளக்கமாக வருகின்றன.

போருக்குரிய இவ்வளவு தகுதிகளோடு அரசர்கள் பெருமிதமுள்ளவர்களா யிருந்தாலும், அறநெறிக்கு மாறாக எதுவும் செய்யலாகா தென்னுங் கொள்கை

அவர்கள் உள்ளத்தில் வலுப்பெற்றிருந்தது. நிலை யான வெற்றி படைகளால் உண்டாவதன்று; அற வழிகளாலேயே உண்டாகுமென்பது அவர்கள் கருத்து. ஓர் அறிஞர்,

" கடுஞ்சினத்த கொல்களிறும் கதழ்பரிய கலிமாவும்
நெடுங்கொடிய நிமிர்தேரும் நெஞ்சுடைய புகல்மறவரும்
நான்குடன் மாண்ட தாயினும், மாண்ட
**அறநெறி முதற்றே அரசன் கொற்றம்** "

என்று ஓர் அரசனுக்கு அறிவுரை கூறுவதிலிருந்து இது தெரிகின்றது.

வேற்றரசர்கள் தம்மைப் பகைத்தாலும் கூடிய வரையில் அவர்களை நட்பாக்கிக்கொள்ளவே அவர்கள் முயல்வார்கள். **அதியன்** என்னும் மன்னன், இக் கருத்துடன் முன்பு **தொண்டைமானிடம் ஔவையாரைத்** தூது அனுப்பிய செய்தி **புறநானூற்றில்** வருகின்றது.

கட்டாயம் நேர்ந்தால் அவர்கள் போர் புரிவார் கள். அப்படிப் போர் துவங்கினாலும், அறநெறி பிற ழாமலே எதுவும் செய்வார்கள். தாம் போர் நிகழ்த்த வேண்டி யிருப்பதைப் பகைப்புலத்திலிருப்பவர்க ளுக்கு, முன்பாகவே தெரிவிப்பர். நல்லவர்கள் பெண் கள் முதலியோர் பாதுகாப்பான இடங்கட்குச் சென்று விடலாம் என்றும் அறிவிப்பர். இச் செய்தியைத் தாமே அறிந்து நீங்கமாட்டாத ஆன் முதலிய எளிய உயிர்களை இவர்களே தம் வீரரை அனுப்பி ஓட்டிக் கொண்டு வரச் செய்வர். அப்புறம் போர் தொடுப் பர். பகைவர்களின் ஒற்றர்கள் தமது நாட்டிலும் மறைந்து வாழ்வார்களாதலால், அவர்களுக்கும் இச் செய்தி எட்டும்படி தம் நாட்டிலும் பறையறைவிப்ப

துண்டு. இக் குறிப்புச் **சிலப்பதிகாரத்திற்** காணப் படுகின்றது.

இங்ஙனமெல்லாம் அறநெறி பிறழாத பண்டைக் காலத்து அரசியலின் மாட்சி எவ்வளவு இனிய தொன்றாக இருக்கின்றது!

## 5. வரிகள்

இனி, அக்கால அரசியலுக்கு வருவாய் முறைகளும் நன்றாயிருந்தன. அவற்றுள் மூன்று சிறப்பாகக் குறிக்கலாம். ஒன்று, குடிமக்களிடத்திலிருந்து வரும் **வரி**; மற்றொன்று, வாணிபப் பொருள்களுக்குரிய **சுங்கம்**. இன்னொன்று சிற்றரசர்களிடமிருந்து கிடைக்கும் **திறை**.

குடிமக்களிடத்தில் **வரி** வாங்கும் முறைகளைப் பற்றிய அரிய பாட்டு ஒன்று புறநானூற்றில் வருகின்றது. அது **பிசிராந்தையார்** என்னும் பெரியார் அருளிச்செய்தது. அதுவொன்றேகூட முற்கால அரசியலின் மாட்சிமையை அறிந்துகொள்வதற்குப் போதும். 'அரசன் அறிவுள்ளவனாக இருக்க வேண்டும்; அவன் புதிய புதிய வழிகளால் குடி மக்களுக்கு வாழ்க்கைச் செழிப்பை உண்டாக்க வேண்டும். அதனால், குடி மக்கள், நிறைந்த வாழ்க்கையுடையராய் வருவாய் பெருகித், தாமே அரசனைத் தேடி வந்து தமது வரிப்பணத்தை எளிதாக விரும்பிக் கொடுக்கும்படி அமையவேண்டும். அந் நிலையிலும் அவர்கள் மொத்தமாக அன்றி, அதனைப் பகுதி பகுதியாகக் கொடுக்கவும் இடமிருக்க வேண்டும்.' என்னும் அருமையான கருத்துக்கள் அப் பாட்டிற் காணப்படுகின்றன.

வாணிபச் **சுங்கம்** பண்டைக் காலத்திற் செழிப்பாக இருந்தது. 'சுங்கம்' என்பதை 'உல்கு' என்றும் சொல்லுவதுண்டு. கடல் வாணிபத்துக்குரிய ஏற்றுமதி இறக்குமதிப் பொருள்களில் இது மிகுதியாகக் கிடைக்கும். கரிகாற்பெருவளவனுக்கு அவனது கடற்றுறை யிடமாகிய காவிரிப்பூம் பட்டினத்தில் இச் சுங்கம் செழிப்பாகக் கிடைத்து வந்தது. இவ்வுண்மை **பட்டினப்பாலை**யில் நன்ருக் விளக்கப்பட்டிருக்கிறது. சுங்கம் வாங்குமிடம் 'சுங்கச் சாலை' எனப்படும். சூரியனுடைய குதிரைகளுக்கு நாள் முழுதும் ஓய்வில்லாததுபோலக், கரிகால் வளவனது சுங்கச் சாலையில் வேலை செய்வோருக்கு நாள் முழுதும் ஓய்வே இராதாம். ஏற்றுமதி இறக்குமதிப் பண்டங்கள் அவ்வளவு மிகுதி. 'குதிரைகள் தமது ஓய்வில்லாத ஓட்டத்தால் எந்நேரமும் சூரியனது தேரை இழுத்துக்கொண் டிருப்பதுபோல, சுங்கக் காவலரும் தமது ஓய்வில்லாத சுங்கத் தொகுப்பால் எந்நாளும் கரிகாலனது ஆட்சித் தேரை நடத்திக்கொண் டிருக்கின்றனர்' என்று ஒரு நயமும் தோன்றும்படி **பட்டினப்பாலை யாசிரியர்** இவ்வுவமையை அமைத்து,

"நல்லிறைவன் பொருள்காக்கும்
தொல்லிசைத் தொழின்மாக்கள்
காய்சினத்த கதிர்ச்செல்வன்
தேர்பூண்ட மாஅபோல
வைகல்தொறும் அசைவின்றி
உல்குசெய"

என்று இதனை அழகாகக் கூறியிருக்கின்ருர். ஓர் அரசியலை நடத்தத் தகுந்த அளவு ஒரு முதன்மையான

வருவாயாக இச் சுங்கப்பொருள் கிடைத்து வந்த தென்பது இதன் கருத்தாக இருக்கின்றது.

இனி, உள் நாட்டு வாணிகங்களிலும் இச் சுங்கம் ஓரளவு கிடைக்கக்கூடுமென்று தெரிகின்றது. உள் நாட்டு வணிகர்கள் பலர் ஒன்றுகூடித் திரள் திரளாகச் செல்லுவதும் உண்டு. இப்படிச் செல்லுவதே பெரும்பாலாக நடைபெறும். இக் கூட்டத்துக்கு 'வாணிகச் சாத்து' என்பது பெயர். இச் சாத்துகள் செல்லும் வழிகளிலும் சுங்கச் சாலைகள் உண்டு. வாணிகச் சாத்துகள் திரள் திரளாக வரும்போது அவரவரும் எடுத்துச் செல்லும் வணிகப் பொருளுக்கு ஏற்றபடி சுங்கம் திரட்டப்படும். இதைப்பற்றிய குறிப்புக்கள்

"..........சாத்தொடு வழங்கும்
உல்குடைப் பெருவழி......"

என்று **பெரும்பாணாற்றுப்படை**யில் வருகின்றது.

பண்டைக் காலத்தில் இந்தியா முழுமையும் தமிழரசு ஓங்கி யிருந்தமையால், அவர்களுக்குத் **திறைப் பொருள்**களுக்கும் குறைவில்லை. திறைகள் காசுகளாகவே இருக்கவேண்டு மென்னும் முறைமை அப்போது இருந்ததாகத் தெரியவில்லை. அவரவர்க்கும் என்னென்ன பொருள்கள் எளிதிற் கிடைக்குமோ, அப் பொருள்களையே அவர்கள் திறையாகச் செலுத்தலாம். சேரன் செங்குட்டுவன் மலைவளங் காணத் தன் தேவி வேண்மாளுடன் சென்றிருந்த போது, குறிஞ்சி நிலத்து மக்கள் தமக்குக் கிடைத்த மலைப் பண்டங்களுடன் வந்து அரசனைக் கண்டார்கள். ஆசிரியர் இளங்கோவடிகள் இவ்வியல்பினைக் கூறுகின்றபோது,

"திறைசுமந்து நிற்கும் தெவ்வர் போல
யானைவெண் கோடும் அகிலின் குப்பையும்
மான்மயிர்க் கவரியும் மதுவின் குடங்களும்
சந்தனக் குறையும் சிந்துரக் கட்டியும்"

என்று கூறிச் செல்கிறார். இதனால் திறைகளும் இங்ஙனமெல்லாம் பண்டங்களாகக் கொண்டுவரப்படுமென்றுந் தெரிகின்றது. **மலைபடுகடாம்** என்பதில்,

"வாரி கொள்ளா வரைமருள் வேழம்"

என்று வருகின்ற இடத்தில் 'வேழம்' என்பதற்கு உரையாசிரியர் **நச்சினார்க்கினியர்**,

"பகைவர் திறை தந்த யானைகளை"

என்று தெளிவாகவே எழுதியிருக்கிறார். **யானைகளையே** திறைப்பொருள்களாகச் செலுத்திய உண்மை இதிலிருந்து தெரிகின்றது. மேலும், கரிகால் வளவன் வடநாடு முழுமையும் வென்று இமயத்தில் தன் அடையாளம் பொறித்துத் திரும்பியபோது, வச்சிர நாட்டு அரசன் சிறந்த **முத்துப் பந்தரும்**, மகதநாட்டு மன்னன் **பட்டிமண்டபமும்**, அவந்தி வேந்தன் **தோரணவாயிலும்** திறையாகச் செலுத்தினரென்பது சிலப்பதிகாரத்திற் கூறப்படுகின்றது.

## 6. நல்லவர் தொடர்பு

சங்க காலத்து அரசியலின் இவ்வளவு மாட்சிமைக்கு இன்னொரு முதன்மையான காரணம், அவர்கள் எப்போதும் **நல்லவர்களிடையே இருந்து** ஆட்சி செய்தமையே யாகும். பத்துப்பாட்டைச் சேர்ந்த **மலைபடுகடாம்** என்னும் நூலில், அரசனுக்குத் துணையாக அவன் பக்கலிற் சூழ்ந்திருக்கும் சான்றோர்களின்

நல்லியல்புகள்பற்றி ஓர் அழகான குறிப்புக் காட்டப்பட்டிருக்கின்றது. அரசனைப் பார்ப்பதற்கு வருகிறவர்களிற் சிலர் தமது கருத்தைத் திறமையாகச் சொல்லத் தெரியாதவர்களாய்த் திகைத்து நிற்பதும் உண்டு. அப்போது அரசனுக்கு அருகிலிருக்கும் அவன் துணைவர்கள் அங்ஙனம் திகைப்பவர்கள்மேல் அன்புகூர்ந்து, அவர்கள் கருதிவந்த செய்தியைத் தெரிந்துகொண்டு, தாமே அரசனிடம் வல்லமையாக விளக்கிச் சொல்லி அவர்கள் வந்த காரியத்தை நிறைவேற்றி வைத்து அனுப்புவார்களாம். இம் மேன்மை,

> "நல்லோர் குழீஇய நாநவில் அவையத்து
> வல்லா ராயினும் புறம்மறைத்துச் சென்றோரைச்
> சொல்லிக் காட்டிச் சோர்வின்றி விளக்கி
> நல்கிதின் விளக்கும்அவன் சுற்றத் தொழுக்கமும்"

என்று அந்நூலிற் குறிக்கப்படுகின்றது.

சங்க காலத்து அரசியல் இங்ஙனமெல்லாம் மக்களுக்குப் பல வகையிலும் நன்மை செய்து வந்தது.

---

# ச. வாழ்க்கை

பண்டைக் காலத்து மக்கள் வாழ்க்கை அறிவதற்கும் ஆராய்வதற்கும் மிக்க இன்பந் தருவது. சங்க காலத்தில் நம் முன்னோர்கள் எப்படி எப்படி வாழ்ந்தார்கள்? என்ன என்ன நன்மைகள் அவர்களிடம் சிறந்திருந்தன? இக்காலத்தில் வாழ்கின்ற நாம் அவர்கள் வாழ்க்கைமுறைகளிலிருந்து தெரிந்து கொள்ளக்கூடிய திருத்தங்கள் என்னென்னவோ? என்று அறிந்து கொள்வதற்கு நமது மனம் எவ்வளவோ வேட்கை கொள்ளுகிறது. பழைய தமிழ் நூல்களை ஆராயும்போது இவை மிகவும் விளக்கமாகவே புலனாகின்றன.

## 1. இல்வாழ்க்கை

அக்காலத்து மக்கள் இல்வாழ்க்கையைப் பெரிதும் விரும்பியிருந்தார்கள். உண்பதற்கும், ஒழுங்காக வாழ்வதற்கும், ஒருவரோடொருவர் அன்பினால் அளவளாவி மகிழ்வதற்கும், பிற உயிர்களுக்கு விருந்தோம்பி நன்மைகள் செய்வதற்கும், தாமும் எக்காலமும் ஆதரவோடிருப்பதற்கும் இல்வாழ்க்கையே வசதியானதென்பது அவர்கள் கருத்து. வாழ்க்கையில் முயற்சி செய்பவர்களுள் இவர்களையே திருவள்ளுவர்,

"முயல்வாரு ளெல்லாந் தலை"

என்று சிறப்பித்தார். யாரோடும் இனிமையாகப் பேசுதல், நடுவு நிலைமையாக இருத்தல், இயன்றவரையிற் பிறர்க்கு உதவிசெய்தல், பிறர் செய்த

உதவியை எக்காரணங் கொண்டும் என்றும் மறவா திருத்தல் முதலிய நல்லியல்புகளெல்லாம் அவர்களுடைய சிறந்த கொள்கைகளாகவும் பழக்கங்களாகவும் இருந்தன.

## 2. வருவாய்

இல்வாழ்க்கையில் வாழ்வார்க்குப் பொருள்தேடுவது ஒரு கடமையாக இருக்கிறது. அதற்காக அவர்கள் பற்பல தொழில்வகைகளை மேற்கொண்டிருந்தார்கள். உழவு, வாணிகம், நெசவு முதலியவை அத் தொழில் வகைகளிற் சில. தமிழ் மக்கள் இந் நாட்டுக்கே உரிய பழங்குடியைச் சேர்ந்தவர்கள். இங்கே மலைகளும் காடுகளும் கடற்கரைகளும் வளமாக இருக்கின்றன. வெறு வெளிகளும் உண்டு. அங்கங்கும் இருந்த மக்கள் அவ்வவ்விடங்களுக்குத் தக்க தொழில் முறைமைகளை உன்னிப்பார்த்துத் தெரிந்துகொண்டார்கள். மலைப்பக்கங்களிலிருப்பவர்கள் தேனெடுப்பது, தினைவிதைப்பது, கிழங்ககழ்வது முதலிய தொழில்களையும்; காட்டு நிலங்களிலிருப்பவர்கள் நிரைமேய்ப்பது, பால் கடைவது, வரகு விளைப்பது முதலியதொழில்களையும்; வயலிடங்களிலிருப்பவர்கள் உழவுசெய்வது, நகரமைப்பது, ஆட்சிபுரிவது முதலிய தொழில்களையும்; கடற்கரைகளிலிருப்பவர்கள் முத்துக் குளிப்பது, உப்பு விளைப்பது, மரக்கலத்திலேறி அலைகடலிற் சென்று வாணிகஞ் செய்வது முதலிய தொழில்களையும் செய்து பொருள்தேடி வந்தார்கள். அறிவு முதிர முதிர இன்னும் எத்தனையோ வகையான தொழில்களை உணர்ந்து வளம் மிகுந்து வாழ்ந்தனர்.

## 3. ஒற்றுமை

இவர்கள் இப்படிப் பற்பல இடங்களிலும் பற்பல தொழில்களை உடையவர்களாயிருந்தாலும், எல்லாரும் ஒரு தாய் வயிற்றிற் பிறந்ததுபோலவே ஒருவருக்கொருவர் சிறிதும் வேறுபாடில்லாமல் உயர்ந்த அன்பு வாழ்க்கையில் விளங்கியிருந்தனர். 'எல்லாரும் இந் நாட்டு மக்கள்; எல்லார்க்கும் ஒரு தமிழ் மொழி உரியது; எல்லா ஊர்களும் ஓர் ஊர் போன்றனவே' என்னும் ஒற்றுமை எண்ணம் அவர்களிடம் மேலோங்கியிருந்தது.

"யாதும் ஊரே யாவருங் கேளிர்"

என்பது அவர்கள் தீர்மானமான கொள்கை.

எல்லாரும் ஒன்ருக அமர்ந்து உணவு கொள்வார்கள். தமக்குள், கலந்த உறவோடு திருமணம் செய்து கொள்வதும் உண்டு. தமிழ் மக்க ளெல்லாரும் ஒருவருக்கொருவர் உறவினராகவே யிருந்தனர். இதனுல் அவர்களுக்கு எல்லாருடைய உதவிகளும் கிடைக்க இடமிருந்தது. நிலையான தொழில் வகைகளாலும், கலையாத உறவின் முறைகளாலும் கவலை சிறிதுமின்றி மனவொற்றுமையாய் அவர்கள் மகிழ்ந்து வாழ்ந்திருந்தமை, அவர்களது களங்கமற்ற அழகிய உள்ளத்தை எடுத்துக் காட்டுகின்றது. தம்மோடு பழகியவர்கள் தமக்கு நஞ்சு ஊட்டினும், தம்மவர்கள் என்னுங் கண்ணோட்டத்தால் அதனை மறுமல் உண்டு, மேலும் அவர்களோடு பழகும் நோக்கமுடையவர்களாக அக் காலப் பெரியோர்கள் வாழ்ந்திருந்தார்களாம்.

" முந்தை இருந்து நட்டோர் கொடுப்பின்
நஞ்சும் உண்பர் நனிநா கரிகர் "

என்று **நற்றிணையில்** இவ்வுண்மை குறிக்கப்படுகின்றது. இம் மேன்மையை அறியும்போது நமக்கு உள்ளம் மிக உருகுகின்றது. இத்தகைய **கலந்த மனப்பான்மையையே** அவர்கள் **நாகரிகம்** என்றுங் கருதினுர்களென்ருல், அவர்கள் உள்ளமாட்சிமைதான் எவ்வளவு பெரியது! தம்மைப்போன்ற மக்களிடத்தில் **உயிர்நேயம்** என்பது இல்லாதவரை 'நாகரிகர்' என்று சொல்வதற்கு வழியில்லையன்ருே! ஆனுல், சங்க கால முன்னுேர்களோ, அவ்வகையில் நனி நாகரிகராய் விளங்கியிருந்தனர்!

## 4. கல்வி

அறிவு வளர்ச்சிக்கும், அதனுல் தொழில் செய்து பொருள்தேடுவதற்கும், பிற நன்மைகளுக்கும் உதவியாகும்படி அவர்கள் கல்வியறிவைக் கருத்தாகப் பெருக்கி வந்திருக்கிருர்கள். 'அறிவுடையவர்களே எல்லாம் உடையவர்கள்; அறிவு இல்லாதவர்கள் என்ன உடையவர்களா யிருந்தாலும் எதுவும் இல்லாதவர்களே' என்பதும் அவர்கள் கருத்து. அத்தகைய அறிவைத், தக்க கல்விப் பயிற்சியினுல் அடையலாம் என்று அவர்கள் வழி தெரிந்திருந்தார்கள். **திருவள்ளுவர்,**

" ......மாந்தர்க்குக்
கற்றனைத்து ஊறும் அறிவு "

என்று கூறுவது கொண்டு இது தெளியப்படும். இதனுல், கல்வியை அவர்கள் எங்கும் நல்லபடி வளர்த்து வர நேர்ந்தது.

கற்றவர்கள் எந்த வேற்றுமையுங் கருதாமல், மதிக்கப்பட்டு வந்தனர். இதைப்பற்றிப்,

“பிறப்புஓர் அன்ன உடன்வயிற் றுள்ளும்
சிறப்பின் பாலால் தாயும் மனந்திரியும்;
ஒருகுடிப் பிறந்த பல்லோ ருள்ளும்
மூத்தோன் வருக என்னாது அவருள்
அறிவுடையோன் ஆறு அரசும் செல்லும்;
வேற்றுமை தெரிந்த நாற்பா லுள்ளும்
கீழ்ப்பால் ஒருவன் கற்பின்
மேற்பால் ஒருவனும் அவன்கண் படுமே.”

என்று **புறநானூற்றி**ல் வருகின்ற ஓர் அருமையான பாட்டு இங்கு நினைவுகூர்தற்குரியது. அரசர்கள்கூட எத்தகைய வேறுபாடுங் கருதாமல் கற்றவர்களைத் தமக்கு ஆசிரியராகக் கருதி அவர்கள் வாய்மொழி கேட்டு அவர்கள் தெரிவிக்கும் வழியில் தவறாமலும் அன்பாகவும் நடந்துவந்த உண்மையும் இதிலிருந்து விளங்குகின்றது. அக் கால மக்கள் இவ்வளவு அருமையாகக் கல்வியைப் போற்றி வந்தமையினாலே தான், அவர்கள் வாழ்க்கை அறிவொளி மிகுந்து, மற்ற நாடுகளுக்கும் இந் நாட்டின் வழி வழி மக்களுக்கும் நல்ல எடுத்துக்காட்டாகத் துலங்குகின்றது.

அக் காலத்தை விட இக் காலத்திற் கல்வியும் அறிவும் மிகுதி என்று சொல்வதற்கில்லை. ஏனென்றால், அக் காலத்திலிருந்த மேன்மையான அன்பு வாய்ந்த பழக்க வழக்கங்கள் இக்காலத்தில் இல்லை. கற்றவர்களிடம் எத்தகைய வேறுபாடுங் கருதாமல் அவர்கள் கல்விநலமொன்றே கருதி மதிப்பது, இக் காலத்தில் அருமையாக இருக்கிறது. நம்மைப்போற்

பிறந்த மக்களில், சிலரைத் தாழ்ந்தவரென்றும் சிலரை உயர்ந்தவரென்றும் பிறப்பளவாக வேற்றுமை பாராட்டுவது இப்போது நடைபெறுகின்றது! ஆனால், அக்காலத்திலோ, 'பிறப்பு எல்லா உயிர்க்கும் ஒக்கும்; சிறப்புத்தான் அவரவருஞ் செய்கின்ற அருஞ் செயல்களுக்கு ஏற்றபடி வெவ்வேறு வகையாகக் கருதப்படும்' என்னும் பெருந்தன்மையான சிறந்த கொள்கை விளங்கியிருந்தது. பல நற்கருத்துக்களை இங்ஙனம் அவர்கள் தம் வாழ்க்கையிற் கடைப்பிடித்து ஒழுகினமையால், கல்வி யறிவின் மாட்சிமைக்குச் சங்க காலம் சிறந்த சான்றாகத் திகழ்கின்றது.

கல்வியினால் அறிவை விளக்குதலும், தொழில்களினால் பொருளைப் பெருக்குதலும், இல்வாழ்க்கையினால் அனைவர்க்கும் உதவியா யிருத்தலும், கலந்த மனப்பான்மையினால் எவரிடத்திலும் வேறுபாடில்லாமல் நாகரிகராய் உலவுதலும் நம் முன்னோர்களின் சிறப்புக்கு நல்ல அடையாளங்களா யிருக்கின்றன. அக் கருத்துக்களை இப்போதுங் கடைப்பிடித்து ஒழுகினால், இக் காலத்திலும் வாழ்க்கை மாட்சிமைப்படுவதற்கு வழியுண்டு.

## 5. முயற்சி

ஒவ்வொருவரும் ஏதேனும் ஒரு தொழில் செய்தே பொருள் தேடுவது என்னுங் கொள்கை அப்போது வேரூன்றி யிருந்தது. அதனால், 'இரத்தல்' என்பதை அம் மக்கள் மிகவும் இழிவாகக் கருதினர். இரவாமலிருக்கும் நிலையைப்,

"பிறன்கடைச் செலாஅச் செல்வம்"

என்று கூறி மகிழ்ந்தனர். ஆக்களுக்கு நீர் வேண்டு மென்று இரப்பதும் இழிவாகக் கருதப்பட்டது. தானே முயன்று நீர் தேடி அதற்குத் தர வேண்டு மென்பது கருத்து.

இதனால், தன் முயற்சியினால் வருகின்ற பொருளையே ஒருவன் செலவு செய்வதற்கு உரியவன் என்னும் மேன்மையான கொள்கையை அவர்கள் கடைப் பிடித்து வந்திருக்கிறார்கள் என்று தெரிகிறது.

"உள்ளது சிதைப்போர் உளரெனப் படாஅர்"

என்பது குறுந்தொகை. பிறர் பொருளுக்கு அவர்கள் விரும்புகிறவர்கள் அல்லர் என்பதும் இதிலிருந்து தெரிந்துகொள்ளலாம்.

வயலில் தன் வளையின் பக்கத்திலேயே விளைந்து விழுந்து கிடக்கும் நெற் பயிரை ஓர் எலி கறித்துத் தன் வளைக்குள் சேர்த்துக்கொள்வதுபோன்ற **எளிய முயற்சியையுடைய மக்களை** முன்னோர் பெரிதும் அரு வருத்தனர். தான் செல்லும் விசையினால் தனது இடப்பக்கத்தில் வீழ்ந்து கிடக்கும் பன்றியைச் சிறிதுங் கண்ணெடுத்துப் பாராமல் மறுநாள் ஒரு பெரிய யானையோடு போரிட்டு அதனை வலப் பக்கத்தில் வீழ்த்தி அதனையே உணவாகக் கொள்கின்ற **ஒரு புலியைப்போன்ற பெரு முயற்சியையுடைய மக்களையே** அவர்கள் மதித்துப் பாராட்டினர். இப்படிப் **புறநானூற்றிற்** கூறப்படுகின்றது. ஆதலால், தாம் பெரிது முயன்று தேடும் பொருளையே அவர்கள் தமக்குரியதாகக் கருதுவ ரென்பதும், தமது செயலால் வருவதே யாயினும் எளிய முயற்சியில் வருவதை அவர்கள்

அவ்வளவு மேன்மையாக மதியா ரென்பதும் நன்கு விளங்கும்.

அத்தகைய அரும்பெரும் வாழ்க்கை வீரர்கள் ஒரு முயற்சியுமில்லாமல், பிச்சை யெடுத்து உண்ணும் இழி தொழிலை எள்ளெத்தனையாயினும் விரும்புவ ரென்று நினைத்தல் கூடுமோ? ஏதொரு முயற்சியும் செய்வதற்கு இயலாத உறுப்பறைகள், பிணியாளர் முதலியோர் பிறரிடம் பொருள் எதிர்பார்ப்பது ஒருவாறு பொருந்தும். இன்னின்னவர் ஆதரவு பெறுவதற்கு உரியவர் என்று கூற நேரும் இடங்களில்,

> "சிறப்பில் சிதடும், உறுப்பில் பிண்டமும்,
> கூனும், குறளும், ஊமும், செவிடும்,
> மாவும், மருளும் உளப்பட வாழ்நர்"

என்று **புறநானூறும்,**

> "காணார், கேளார், கால்முடப் பட்டோர்,
> பேணு மாக்கள், பேசார், பிணித்தோர்,
> படிவ நோன்பியர், பசிநோய் உற்றோர்,
> மடிநல் கூர்ந்த மாக்கள் யாவரும்"

என்று **மணிமேகலையும்** இவ்வுறுப்பறைகள் முதலியோரையே எடுத்துக்காட்டுகின்றன.

## 6. உதவி

மேலே காட்டிய மணிமேகலை யடிகளில், நோன்பு நோற்பவர், பசித்தவர், வறுமையாளர் முதலியவரும் ஆதரவு பெறுதற்குரியர் என்பது கூறப்பட்டிருக்கிறது. இத்தகையோரையும் இன்னும் இவர்போன்றோரையுங் கண்டால், பண்டைத் தமிழ் மக்கள் வேண்டிய உதவி செய்தலிலும் பின்வாங்கினவரல்லர். ஈகையில் இவர்கள் மிகவும் மேம்பட்டவர்கள். ஈதலையே

அறமென்று கருதியவர்கள். பயன் கருதாமல் ஈதல் வேண்டும் என்பதிலும் உறுதியுடையவர்கள். ஈதலை ஒரு வாணிகம்போல வைத்துக்கொள்ளக் கூடாதென்பது அவர்கள் கருத்து. மறுமையிலேனும் உதவும் என்று எதிர்பார்ப்பதுகூட அவர்களுக்கு இல்லை. பிறர் மனமகிழ்ச்சி ஒன்றே அவர்கள் குறிக்கோள். அம் மகிழ்ச்சி முகத்திற் காணும் வரையில் இவர்களுக்கு அமைதி யுண்டாகாது. அவ்வளவு உயர்ந்த குறிக்கோளுடனும் தூய உள்ளத்துடனும் ஈதலறத்தை நம் முன்னோர் செவ்வையாகச் செய்து வந்தனர். ஒருவருக்கு ஒன்று கொடுக்க நேராதபோது, உடலை விட்டு, உயிர் பிரிவதுபோலக் கருதினர். ஒரோவொருகால் அதனினும் மிகுதியான இடராகவும் கருதினர்.

"சாதலின் இன்னாத தில்லை இனிததூஉம்
ஈதல் இயையாக் கடை"

என்பது அவர்கள் முடிபு. இத்தகைய நல்லெண்ணம் இருந்தமையினாலேதான் பொருள் கிடைக்கும்போதெல்லாம் பயன் மரம் உள்ளூர்ப் பழுத்ததுபோல, அவர்கள் செல்வம் உலகுக்குப் பயன்பட்டு வந்தது. அதனால், மக்கள் இனமே அப்போது நல்ல முறைமையில் விளங்கியது.

## 7. உயிர்ப் பண்பு

மக்கட் பிறவி விலங்குப் பிறவிக்கும் மேலானது. மக்கட் பிறவி ஆறுவது அறிவு உடையது. அது மன அறிவு. தகுதி இன்னது தகாதது இன்னது என்று தெரிந்து அறிவு வாழ்க்கையிற் சிறப்பதற்கு ஏதுவானது. பண்டைத் தமிழ் மக்கள் தமது மனிதப் பிற

விக்குரிய நினைவும் சொற் செயல்களும் உடையவரா யிருந்தனர். அதற்கான நன்முறைமைகளை அவர்கள் தமது வாழ்க்கை முறையில் வகுத்துக்கொண்டனர்; அவற்றை எந்நிலையினும் கடைப்பிடித்து நின்றனர்; ஏனையோருங் கடைப்பிடித்து ஒழுக உதவினர். இங்ஙனம் மக்களுக்குரிய உயிரறிவையும் உயிர்க் குணங்களையும் வளர்ப்பதே அவர்கள் நோக்கமா யிருந்தது.

**ஔவையார்** அதியமான் நெடுமானஞ்சியைப் பற்றிக் கூறுகின்ற கருத்துரை யொன்று மிகவுங் கவர்ச்சியாக இருக்கின்றது. தீக்கடை கோல் தீப்பற்றுதற் குரியது. அப்படி யிருந்தும், அதனை வீட்டின் இறப்பிற் செருகிவிடும் வழக்கம் உண்டு. வீட்டுக்கு அதனால் இடரில்லை. அதுபோல, அதியமான், தீயைப்போன்ற பெருவீர முடையவனாயினும் அதனை உள்ளடக்கிக் கொண்டு தன் குடிகளோடு ஒருவனாய்க் கலந்து தன் ஆற்றல் தெரியாதபடி தண்மையாக இருப்பானாம்; ஆயினும், தீக்கடைகோலைக் கடைந்தால் தீ வெளிப் படுவதுபோல இவனையும் பகைவர்கள் சினப்பித்தால், இவனது பெரு வீரம் வெளியே வீறுமாம்.

"......நெடுமா னஞ்சி
இல்இறைச் செரீஇய ஞெலிகோல் போலத்
தோன்ரு திருக்கவும் வல்லன்; மற்றதன்
கான்றுபடு கனையெரி போலத்
தோன்றவும் வல்லன்தான் தோன்றுங் காலே."

என்று வரும் அடிகள் இக் கருத்தை அறிவிக்கின்றன. ஆதலால், சங்க காலச் சான்ஞேர், மக்கட் பிறவிக் குரிய உயிர்க்குணங்கள் உடையவராய், அவற்றைத்

தகுதி யறிந்து பயன்படுத்திக்கொண்டு நன்முறையில் வாழ்ந்து வந்தனரென்று தெரிகின்றது.

## 8. திருத்தம்

மேலும் அப் பெரு மக்கள், எக்காலமும் தம்மை நல்லோராகத் திருத்திக்கொண்டு போவதிற் கருத்துடையவர்கள். நாட்டில் நல்லவர்கள் மிகுந்திருக்க வேண்டு மென்பதே அவர்கள் கருத்து. உலகம் எத்தகையதா யிருந்தாலும் தாம் நல்லவரா யிருந்தால் எல்லாம் நல்லவையாயிருக்கு மென்பது அவர்கள் முடிபு. வாழ்க்கை முன்னேற்றத்துக்கு இதைவிடத் திருத்தமான வழி வேறு இல்லை. 'உலகம் நாடாகவாவது இருக்கட்டும்; காடாகவாவது இருக்கட்டும்; எங்கே நல்லவர்க ளிருக்கின்றார்களோ அங்கே அதுவும் நல்லதாக இருக்கும்' என்னுங் கருத்துக்கள் **புறநானூற்**றில் ஒரு பாட்டிற் காணப்படுகின்றன.

> "நாடா கொன்றோ காடா கொன்றோ
> அவலா கொன்றோ மிசையா கொன்றோ
> எவ்வழி நல்லவ ராடவர்
> அவ்வழி நல்லை வாழி நிலனே."

என்பது அப் பாடல். எவ்வளவு கண்ணியமான கருத்தாக, இது திகழ்கின்றது.

பண்டைத் தமிழ் மக்கள் உயர்ந்த குறிக்கோள்களுடன், எக்காலத்திலும் உலகத்துக்கு எடுத்துக் காட்டான முறையில், நனி நாகரிகராக வாழ்ந்து விளங்கின ரென்பது இவ்வாற்றால் நன்கு தெளியப்படும்.

# ரு. தொழில்

தொழில் வளர்ச்சிக்குக் கலையுணர்ச்சி அடிப்படையானது. பண்டைத் தமிழகம் கலைபரந்த தமிழகமா யிருந்தது. 'கலைகள்' என்னுங் கட்டுரையில் இதைப் பற்றிய விளக்கங்கள் சில வந்திருக்கின்றன. கலையுணர்வி லிருந்து நாட்டில் பல தொழில்கள் உருவாயின. அதனால் தமிழகத்தில் முன்பு தொழில் வளரும் நிலையங்கள் தோன்றி விளங்கியிருந்தன வென்று தெரிகின்றது. பழைய நூல்களில் தொழில் வளர்ச்சியைப்பற்றிய சான்றுகள் நிறையக் கிடைக்கின்றன.

## 1. உழவு

என்றும் அழியாத பெரிய தொழில் உலகத்தில் **உழவு** தொழில் ஒன்றே யாகும். இத் தொழி லில்லாமல் உலகத்தில் வேறு எத் தொழி லிருந்தும் பயனில்லை. உழவு தொழிலுக்கு அடுத்த நிலையில் வைத்து மதித்தற்குரியது **நெய்தல்** தொழில். இவ்விரண்டு பெரிய தொழில்களும் முதல் முதல் தமிழ் நாட்டிலேயே உண்டாயின என்று அறிஞர்கள் ஆராய்ந்து சொல்லுகிறார்கள்.

'உழவர்கள் வைத்திருக்கும் உணவே உணவு; அதுவே பிறர்க்கு அறஞ்செய்வதற்கு உரியது' என்னுங் கருத்து நம் முன்னோர்களிடத்தில் உறுதி பெற்றிருந்தது.

"பகடு நடந்தகூழ் பல்லாரோ டுண்க"

என்று **நாலடியாரில்** வருகின்ற தொடர் இதனை அறிவுறுத்தும். **திருவள்ளுவர்** உழவுதொழிலைமட்டும் சிறப்

பானதென்று மதித்துத் தமது **திருக்குறளில்** தனியே ஓர் அதிகாரம் வகுத்திருக்கின்றார். அதில், "உழவே தலை" என்று அவர் தீர்மானித்துச் சொல்லுவது நல்ல சான்றாக உதவும். "சுழன்றும் ஏர்ப் பின்னது உலகம்; அதனால்—உழவே தலை" என்று அதற்குக் காரணமுங் காட்டுகிறார்.

**ஏழைகளுக்கு உணவு அளிக்க** உழவு தொழில் உதவுகிறது. **மன்னர்களுக்கு அரசு நடத்தவும்** அது வரிப்பொருள் வழங்குகின்றது. இங்ஙனம் நாட்டுக்கு அது முதன்மையா யிருக்கின்றது. இக் கருத்தை,

"இரப்போர் சுற்றமும் புரப்போர் கொற்றமும்
உழவிடை விளைப்போர்."

என்று **சிலப்பதிகாரம்** உணர்த்தும். அரச மரபிற் பிறந்து தவக்காட்சி சிறந்த **ஆசிரியர் இளங்கோவடிகளே** உழவு தொழிலை இங்ஙனம் மதித்துரைத்தால் அத் தொழிலின் மேன்மைக்கு வேறு சான்று ஒன்றும் வேண்டுமோ!

நாட்டுக்குச் செல்வத்தை உண்டாக்கும் வாணிபப் பொருள்களில், உழவினால் உண்டாகும் விளை பொருள்களே முதன்மையானவை. காவிரிப்பூம்பட்டினத்துப் பண்டசாலை முற்றங்களில் முன்பு இவ்விளை பொருள் பொதிந்த மூட்டைகள் மலைபோல அடுக்கி வைக்கப்பட்டிருந்தன என்று **பட்டினப்பாலை** கூறுகின்றது. அதனால், ஏராளமான செல்வம் வாணிபத்தால் அப்போது செழித்தது.

உழவு தொழிலை நம் முன்னோர் மிகவும் செவ்வையான முறையில் அறிந்திருந்தனர். இதற்குத் திருக்குறள் அதிகாரம் ஒன்றே போதுமான சான்றாகும்.

நிலத்தைப் புழுதியுண்டாக உழுது அதனை நன்றாக உலர்த்தி எருப் பதமாக்கும் செய்திகள் முதலியன அதன்கண் நன்றாக எடுத்துக்காட்டப்படுகின்றன.

தமிழ்நாட்டில் உழவு தொழிலே பெருவாரியாக நடைபெறுகின்ற தொழில் என்பதைத் தமிழ் நூல்களின் பொதுப்போக்குகொண்டே தெரிந்துகொள்ளலாம். ஏனென்றால், அதைப்பற்றிய குறிப்புக்கள் இல்லாத நூலைத் தமிழில் காண்பது அரிது. எங்கேனும் உவமையாகவாவது அவை வந்திருக்கும்.

உழவு செய்வோரில், அரசருக்கு நிகரான பெருஞ் செல்வர்களும் நமது நாட்டில் விளங்கியிருந்தார்கள். அவர்களுக்கு 'அரசு', 'வேள்' என்னும் பட்டங்களும் வழங்கப்படுவதுண்டு. **தொல்காப்பியப் பொருளதிகார உரையில்** இவ் வுண்மை குறிக்கப்பட்டிருக்கின்றது.

வறுமையில்லாம லிருப்பதற்கு உழவு தொழிலே தகுந்ததென்பது முன்னோர் கருத்து. உணவு இல்லையே என்று மனந் தளர்ந்து வாடுகின்றவனைப் பார்த்து நிலம் என்னும் நல்லாள் நகைக்கிறாள் என்று அவர்கள் கருதினார்கள். உழவு செய்தால் வகை வகையான உணவுப் பொருள் தருவதற்கு நிலம் காத்துக்கொண்டிருக்க, ஒருவன் தனக்கு உணவு இல்லையே என்று ஏங்கிக் கிடப்பது முறையாகாதன்றோ?

> "இலமென்று அசைஇ இருப்பாரைக் காணின்
> நிலமென்னும் நல்லாள் நகும்"

என்பது சங்கச் சான்றோரின் முடிபு. இத்தகைய மனப்பான்மையுடைய முன்னைத் தமிழர்களுக்கு உலகத்தில் என்ன குறைதான் இருந்திருக்க முடியும்!

கழனிகளுக்குச் 'செய்' என்றும், 'பண்ணை' என்றும் பெயர்கள் அமைத்திருப்பதைப் பார்த்தால், ஒருவன் செய்யவேண்டியதும் பண்ணவேண்டியதும் உழவு தொழிலே என்று அக்காலத்தவர் கருதியிருந்தன ரென்பது வெளிப்படுமன்றோ!

## 2. நெய்தல்

சங்க நூல்களில், தமிழ் நாட்டில் வழங்கிவந்த ஆடை வகைகளைப் பற்றி உயர்வான குறிப்புக்கள் வந்திருக்கின்றன. முற்காலத்திற் பருத்தியினால் மட்டுமன்றிப் பட்டினாலும் ஆடைகள் நெய்யப்பட்டன. எலி மயிர், ஆட்டு மயிர் முதலியவற்றாலும் நல்ல கம்பளங்கள் முதலியன நம் முன்னோர்களால் நெய்யப்பட்டு வந்தன.

> "நூலினும் மயிரினும் நுழைநூற் பட்டினும்
> பால்வகை தெரியாப் பன்னூ றடுக்கத்து
> நறுமடி செறிந்த ஆடை யறுவை"

என்னும் **சிலப்பதிகார** அடிகள் கொண்டு இவ்வுண்மைகளை அறிந்துகொள்ளலாம்.

ஆடைகளில் நிறநிறமான ஆடைகளும் நெய்வதுண்டு. **பட்டினப்பாலை, மதுரைக்காஞ்சி** முதலான நூல்களிலும் இக்குறிப்புக் காணப்படும். ஆடைகளிற் பூத்தொழில் செய்யும் வழக்கமும் அப்போது இருந்து வந்தது. இவ்வுண்மைகள் இரண்டும்

> "நீலக் கச்சைப் பூவா ராடை"

என்னும் **புறநானூற்று** வரியிலேயே ஒருங்கு காணப்படுகின்றன.

"கொட்டைக் கரைய பட்டுடை"

என்று **பொருநராற்றுப் படையில்** வருகின்ற தொடரினால், பட்டுடைகளிற் கொட்டைக் கரைகள் போன்றவை அழகுபெற அமைக்கப்பட்ட உண்மையும் விளக்கமாகும்.

ஆடைகள் பலவேறு வகையாக நெய்யப்பட்டமையால் அவற்றின் வகைகள் பலவாயின. சிலப்பதிகார உரையில் 'துகில்' முதலாகப் 'பணிப் பொத்தி' யென்பது ஈறாக **முப்பத்தாறு வகையான** ஆடைகள் எடுத்துக்காட்டப்படுகின்றன.

பழைய தமிழ்நூல்களில், பாம்பின் சட்டை, மூங்கிலில் உரித்த மெல்லிய தோல், புகை, பால்நுரை முதலியன ஆடைகளுக்கு உவமையாக உரைக்கப் படுவதுண்டு. தெளிந்த வெண்ணிறமான அருவிநீர் வீழ்ச்சியும் உரைக்கப்படும்.

"அவிர்துகில் புரையும் அவ்வெள் ளருவி"

என்னுங் **குறிஞ்சிப்பாட்டுப்** போல்வன நினைவுகூர்தற்குரியன. இதனால் நமது நாட்டில் மிக மெல்லிய ஆடைகளும் நெய்யப்பட்டு வந்தமை விளங்குகின்றது. இழை ஓடியவழி இன்னது என்று பார்வைக்கு அகப்படாதபடி அவ்வளவு மெல்லியவையாக ஆடைகள் நெய்யப்பட்டன என்னும் அழகிய குறிப்பு ஒன்று **பொருநராற்றுப் படையிற்** கூறப்படுகின்றது.

அக்காலத்திலிருந்த பெண்கள் பருத்தியிலிருந்து இவ்வளவு நுட்பமாக நூலை நூற்றிருக்கின்றனர். சிலர் இதுவே தொழிலாக இருந்திருத்தலால் அவர்கள்

'பருத்திப் பெண்டு' என்றே அழைக்கப்பட்டிருக்கின்றனர்.

"பருத்திப் பெண்டின் பனுவ லன்ன"

என்பது **புறநானூறு**. கணவனை இழந்த பெண்களுக்கு இந்தத் தொழில் நல்ல பொழுதுபோக்கு; சிறந்த ஆறுதலையும் அளிக்கும்; ஊதியமுந் தரும்.

"ஆளில் பெண்டிர், தாளின் செய்த
நுணங்குநுண் பனுவல்"

என்பது **நற்றிணை**.

ஆடைக்குத் தமிழில் 'அறுவை' என்னும் பெயரும் சங்கத் தமிழில் வருகின்றது.

"நோக்குநுழை கல்லா நுண்மைய பூக்கனிந்து
அரவுரி யன்ன அறுவை"

என்னும் **பொருநராற்றுப் படையில்**, மிகவும் உயர்வகையான ஆடையும் இப் பெயரினால் வழங்கிவந்திருக்கிறது. நெய்கின்ற தறிகளிலிருந்து ஆடைகள் தனித் தனியாக அறுக்கப்படுவதனால், அவைகளுக்கு அறுவை யென்னும் பெயர் உண்டாயிற்று. தறிகள் வைத்து நெய்யுந் தொழில் தமிழ் நாட்டில் முன்பு இல்லாவிட்டால் இப் பெயர் உண்டாயிராது. இதனால் ஆடை நெய்வோருக்கும் 'அறுவையர்' என்னும் பெயர் வழங்குவதாயிற்று. பல நிறமான மெல்லிய இழைகளைக் கொண்டு நுண்ணிய வேலைப்பாடுகளோடு தறிநெய்வோர் முன்பு தமிழகத்தில் மிகுதியாக இருந்திருக்கின்றனர். நகரங்களில் இவர்கள்மட்டும் வதிகின்ற வளமான தெருக்களும் உண்டு. **மணிமேகலையில்** வஞ்சிமா நகரத்தின் சிறப்புக்களைக் கூறுமிடத்

தில், அச் சிறப்புக்களுள் இக் கைத்திறம் வாய்ந்த ஆடை நெய்வோரது தெருவும்,

> "கண்ணுழை கல்லா நுண்நூல் கைவினை
> வண்ண அறுவையர் வளந்திகழ் மறுகும்"

என்று எடுத்துக் காட்டப்படுகிறது. தொழில்களுக்கு உரிய தமிழ்ப் பெயர்களை மட்டும் ஆராய்ந்தாலும், இன்ன இன்ன தொழில் நமது நாட்டில் இன் இன்ன காலத்திலேயே இருந்தன என்று தெரிந்து கொள்ளலாம்.

நமது நாடு பண்டைக்காலத்தில் இத் தொழில் வகையில் இவ்வளவு சிறப்பை அடைந்திருந்தும், உயர்ந்த நுண்ணிய ஆடை வகைகளுக்கு இப்போது அது வேறு நாடுகளை எதிர்பார்த்துக்கொண்டிருக்கும் நிலை எப்படியிருக்கிறது! சென்ற இரண்டு நூற்றாண்டு களுக்கு முன்வரையிற்கூடப், பிறநாடுகள் சிறந்த ஆடைகளுக்கு நமது நாட்டையே எதிர்பார்த்துக் கொண்டிருந்ததாகத் தெரிகின்றது. உள்ள தொழில் களையும் இங்ஙனம் இழந்து தவிப்பதுதானா நாகரிக மென்பது!

## 3. அணிகள்

சங்க காலத்தில் மகளிர், தொழில் திறம் அமைந்த அணிகளும் அணிந்து வந்தனர். ஆடவர்க்கும் அக் காலத்தில் கழல், தொடி முதலிய அணிகலன்கள் உண்டு. நகைகளைப்பற்றி வருகின்ற சில சொற்களை ஆராய்ந்தால் அவற்றின் மாட்சிமையும் வகைகளும் விளக்கமாகின்றன. அச் சொற்களுள், 'இழை' என்பது ஒன்று; 'கலன்' என்பது ஒன்று. பொன்

வேருகவும் மணிகள் வேருகவும் எளிதிற் பிரிந்து சிதருதபடி இணைப்பாக இழைக்கப்பட்ட அணிகலன் களை 'இழை' என்பது உணர்த்தும். 'கலன்' என்பது மணிக்கற்களால் ஆனது என்னும் பொருளுடையது. இதனுல் பொற்கொல்லரின் தொழில்வகைகள் முன்பு இருந்து வந்த நிலைமை இன்னவென்பது புலப்படக் கூடும்.

பொற்கொல்லர்கள் மாணிக்கம், நீலம், வயிரம் முதலிய மணிகளைப்பற்றிய இலக்கணங்களை நன்ருகத் தெரிந்திருந்தார்கள். இவற்றைப்பற்றி அக்காலத் தில் தனிநூல்களும் இருந்தன. சிலப்பதிகாரத்திலும் அதன் உரையிலும் இவற்றைப்பற்றிய விளக்கங்கள் வருகின்றன. அணிகலன்களின் வகைகளும் அந் நூலிற் காணப்படும்.

மகளிர், கால் முதல் தலைவரையில் அணிந்து கொள்ளும் அணிகலன்களின் வகைகள் **சிலப்பதி காரத்தில்** கடலாடு காதையில் விளக்கமாகத் தரப்பட் டிருக்கின்றன. சில பெயர்களை இங்கே குறிக்கலாம். பரியகம், நூபுரம், படகம், சதங்கை, காற்சரி முதலி யவை காலில்மட்டும் அணிந்துகொள்ளும் அணிகலன் கள். கைகளில் அணிந்துகொள்ளும் வளையல்களைப் பற்றிமட்டுங் கூறுமிடத்தில், பொன்வளை, சித்திர வளை, மணிவளை, சங்கவளை, பவழவளை முதலாகப் பல வளையல்கள் சொல்லப்படுகின்றன. இப்படியே ஒவ் வொரு வகையிலும் பல வகையான அணிகலன்கள் அவ்வரிசையில் வந்திருக்கின்றன. கழுத்தில் அணிந்து கொள்ளும் அணிகலன்களாக வீரசங்கிலி, நேர்ஞ் சங்கிலி, ஞாண், சவடி, சரப்பளி, முத்தாரம் முதலியன கூறப்படும். தலைக்கோலங்களாகவருவனதெய்வவுத்தி,

வலம்புரி,பூரப்பாளை, தென்பல்லி, வடபல்லிஎன்பவை. ஒரு மாது அணிந்துகொள்ளக்கூடிய மொத்த அணிகலன்களில் இதுவரையிற் சொன்னவை காற்பங்கு கூடத் தேரு; பிற அணிகலன்களும் அக் காதையிற் காட்டப்படுகின்றன.

**திருமுருகாற்றுப்படை** முதலிய நூல்களிலும் சில அணிகலன்களைப் பற்றிய குறிப்புக்களைக் காணலாம். முருகன் திருமுடிமேல் அணிந்துகொள்ளும் மணிமுடியைப்பற்றிக் கூறுமிடத்தில்,

> "ஐவே றுருவிற் செய்வினை முற்றிய
> முடியொடு விளங்கிய முரண்மிகு திருமணி
> மின்னுறழ் இமைப்பிற் சென்னிப் பொற்ப"

என்று அதன்கண் சில வரிகள் வருகின்றன. தாமம், முகுடம், பதுமம், கிம்புரி, கோடகம் என்னும் ஐந்து வகைத் தோற்றம் தோன்றும்படி, நிறம் மாறுபட்ட பல மணிகளை இழைத்து மின்னலைப்போல ஒளிவிட்டு விளங்கும்படி நல்ல தொழில் திறமையுடன் அத் திருமுடி அமைக்கப்பட்ட செய்தி இவ்வரிகளில் குறிக்கப்பட்டிருக்கின்றது. பொற்கொல்லரது தொழில் எவ்வளவு வளமாக அக் காலத்தில் நடைபெற்றுவந்ததென்பதற்கு இது நல்ல அடையாளமாகும்.

அணிகலன்களுக்குள் வேந்தரது மணிமுடி யென்பதே தலையான அணிகலனாக விளங்கியது. அதனைச் செய்து முடிப்பதே பொற் கொல்லரது சிறந்த தொழில் திறமாகவும் அக்காலத்தில் மதிக்கப்பட்டது. கண்ணகியின் காற்சிலம்பை விற்கும்பொருட்டு மதுரைக்குச் சென்ற கோவலன், அங்கே பொற்கொல்லர் தலைவனிடம் அதனைக் காட்டி, 'நீ இதனை விலை மதிப்

பிட வல்லையோ' என்று கேட்க, அதற்கு அக் கொல்லர்தலைவன்,

"அடியேன் அறியே னாயினும், **வேந்தர்**
**முடிமுதற்** கலன்கள் சமைப்பேன்"

என்று விடை சொல்லுவதிலிருந்து இவ்வுண்மை தெரிகின்றது.

சிலப்பதிகாரத்திற் கூறப்படுகின்ற கொல்லர் தலைவன், தன் பின்னால் நூறுபேர் கொல்லர் பின் தொடர்ந்துவர, அரச வரிசையாகிய சட்டையணிந்து தலைமை தோன்றச் சென்றனன் என்று ஒரு குறிப்பு அந்நூலிற் காணப்படுகின்றது. இதனால் தட்டார் என்னும் இப் பொற் கொல்லரது வளம் விளக்கமாகின்றது. பொற்கொல்லரில் 'உருக்குத் தட்டார்' எனவும் 'பணித் தட்டார்' எனவும் இரு வகையினர் கூறப்படுகின்றனர். பணித் தட்டார் நல்ல தொழில் திறம் அமைந்தவர்; இவர், மணிக்கலன்கள் செய்யுந் தட்டார். உருக்குத் தட்டாரென்பவர் பொன் செய் கொல்லர்.

"கண்ணுள் வினைஞர், கைவினை முற்றிய
நுண்வினைக் கொல்லர் நூற்றுவர் பின்வர"

என்னும் அடிகளில் இவ் வுண்மைகள் உரைக்கப்பட்டிருக்கின்றன.

அக் காலத்தில், பல நாகரிகங்கள் பரந்து விளங்கியது போலவே இவ்வணிகலத் தொழிலும் விரிந்த நிலையிலேயே இருந்திருக்கிறது. 'மேகலை' என்னும் ஒருவகை அணியைப் பற்றிக் கூறும்போது, அதில் ஏழு கோவை உள்ளது, எட்டுக் கோவை உள்ளது, பதினாறு கோவை உள்ளது, பதினெட்டுக் கோவை உள்

ளது, முப்பத்திரண்டு கோவை உள்ளது என்று இங்ஙனம் விரிந்துகொண்டே போகின்றது.

## 4. பல தொழில்கள்

இங்ஙனம், உணவும் ஆடை அணிகலன்களும் பற்றிய தொழில்களே யல்லாமல், சங்க காலத்தில் இன்னும் எத்தனையோ வகையான தொழில்களும் சிறப்புடன் நடைபெற்று விளங்கினவென்று தெரிகின்றது. ஓவியத் தொழில், சிற்பத் தொழில், கட்டிடத் தொழில், போர்த் தொழில், கப்பல் கட்டுந் தொழில், இசைக் கருவிகள் முதலிய தோற் கருவிகள் செய்யுந் தொழில் முதலியன அவற்றிற் சில. இவை ஒவ்வொன்றும் மேலே காட்டிய ஆடைத் தொழில் அணிகலத் தொழில் முதலியவற்றைப் போலவே சங்க நூல்களில் விரிவாகப் பரந்து காணப்படுகின்றன. அவற்றையெல்லாம் எடுத்து ஒவ்வொன்றையும் விளக்கிச் செல்வதானால் இக் கட்டுரை மிக விரியும்.

இனி, இத் தொழில்களே யல்லாமல், மருத்து நூல், மந்திர நூல், மணி நூல், பொறியளவை நூல், கரவட நூல், காவல் நூல், கனா நூல், குதிரை நூல், பாம்பு நூல், வான் நூல், நிமித்த நூல், துடி நூல், கைவரி நூல், சமையல் நூல், யானை நூல், மனவொருமைநூல், கிணற்று நூல் முதலியவை பற்றிய செயல் வகைகளும் ஏராளமாகும்.

பழைய நூல்களில்,

“ கஞ்ச காரரும், செம்புசெய் குநரும்,
மரங்கொல் தச்சரும், கருங்கைக் கொல்லரும்,
கண்ணுள் வினைஞரும், மண்ணீட் டாளரும்,
பொன்செய் கொல்லரும், நன்கலந் தருநரும்,

துன்ன காரரும், தோலின் துன்னரும்,
கிழியினும் கிடையினும் தொழில்பல பெருக்கிப்
பழுதில் செய்வினைப் பால்கெழு மாக்களும் ''

என்று பல வகையான தொழிலாளர்கள் சொல்லப் படுகிறார்கள்.

வணிகத் தொழிலாளரும் கூல வாணிகர், ஆன் வாணிகர் முதலாகப் பலவேறு வகையினராவர். நாழிகைக் கணக்கர் முதலியோரும் வேறே உளர்.

இனிப், பாய் மிடைதல், புட்டில் பின்னுதல், மாலை தொடுத்தல் முதலிய **பல குடிசைத் தொழில்களும்** அஞ்ஞான்று விளங்கி யிருந்தன. குடிசைத் தொழில்கள் பெரும்பாலும் பெண்களாலேயே நடைபெற்று வந்தன.

தண்ணீர்க் குழாய்கள், அதன் தொடர்பான பொறிகள், பளிக்கறைகள் முதலியவற்றைப் பற்றிய குறிப்புக்களை **மணிமேகலை**யிலிருந்து தெரிந்துகொள்ளலாம். மதில்மேலிருந்து போர் செய்வதற்குரிய பொறிகளைப் பற்றிய செய்திகள் **சிலப்பதிகாரம்** முதலிய நூல்களில் வருகின்றன.

"மிளையும் கிடங்கும், வளைவில் பொறியும்,
கருவிரல் ஊகமும், கல்உமிழ் கவணும்,
பரிவுறு வெந்நெயும், பாகடு குழிசியும்,
காய்பொன் உலையும், கல்லிடு கூடையும்,
தூண்டிலும், தொடக்கும், ஆண்டலை அடுப்பும்,
கவையும், கழுவும், புதையும், புழையும்,
ஐயவித் துலாமும், கைபெயர் ஊசியும்,
சென்றெறி சிரலும், பன்றியும், பணையும்,
எழுவும் சீப்பும், முழுவிறல் கணையமும்,

கோலும், குந்தமும், வேலும், பிறவும்,
ஞாயிலும் சிறந்து "

அஞ்ஞான்று விளங்கின. இதனுல் இவற்றைப் பற்றிய பொறித் தொழில்க ளெல்லாமும் அக் காலத்திற் சிறப்பாகச் செய்யப்பட்டு வந்திருக்கின்றன என்று தெரிந்துகொள்ளலாமல்லவா ?

பண்டைக்காலத்திற் பல வகையாற் பெருகிநின்ற இத் தொழில்களுள், தக்க தொழில்களுக் கெல்லாம் தொழில் நிலையங்களேயல்லாமல், **காட்சிச் சாலைகள் முதலியன**வும் நமது நாட்டில் அமைந்திருந்தன. உடற் பயிற்சிக்குரிய கரடிக் கூடம் முதலியனவும் அக்காலத்தில் விளங்கியிருந்தன. **திருப்பரங்குன்றத்துக்** கோயிலில் **ஓவியச் சாலை** அமைந்திருந்தமை, **பரிபாடல்** என்னுஞ் சங்க நூலிற் குறிக்கப்பட்டிருக்கின்றது.

இங்ஙனமெல்லாம் தமிழ் நாடு பல வகையான தொழில் திறங்கள் வாய்ந்து செல்வப் பெருக்குடன் முன்பு விளங்கியிருந்தது என்று அறியும்போது, நமக்கு நம்மையறியாமலே எவ்வளவு மனக்கிளர்ச்சி உண்டாகின்றது !

## ௧௨. வாணிகம்

**திருவள்ளுவர்** தமது திருக்குறளில் 'நாடு' என்று ஓர் அதிகாரம் வகுத்திருக்கிறார். அதில் ஒரு நாட்டின் நன்மைக்கு மூன்று வகையானவர் கட்டாயமானவ ரென்று அவர் அறிவுறுத்தியிருக்கின்றார். அவருள் ஒரு வகையார் **வாணிகர்**. இவர்கள் அத் திருக்குறளில் "தாழ்விலாச் செல்வர்" என்று குறிக்கப்பட்டிருக் கிறார்கள். மற்ற இரு வகையார் உழவரும், சான்றோரு மாவர். உழவரைக் குறிக்கும்போது, "தள்ளா விளை யுள்" செய்வோர் என்றும், சான்றோரைக் குறிக்கும் போது "தக்கோர்" என்றும் அவர் குறிப்பர். இம் மூவரும் இருந்து மூன்று வகையான பணிகளைச் செய்து வந்தால், நாடுகள் நிலையான செழுமைக ளுடன் விளங்கும் என்பது அவர் கருத்து; உரையா சிரியர் **பரிமேலழகர்** உரைக்கும் நுண்ணிய உரையி லிருந்து இது தெரிகின்றது. மூன்று வகையான பணி களாவன: **உழவு செய்தல், நன்மை செய்தல், வாணிகம் செய்தல்** என்பவை.

குறையாத விளையுள்கள் உண்டாகும்படி உழவர் கள் உழவு தொழில் செய்துவர வேண்டும். நாட்டில் நற்குண நற்செயல்கள் குன்றாதபடி சான்றோர்கள் சான்றாண்மையைப் பரவச் செய்துவர வேண்டும். நாட்டில் ஓரிடத்தில் உண்டாகும் விளையுள்களை அவை உண்டாகாத மற்ற இடங்களுக்கு அனுப்பி யுதவி, வணிகர்கள் நாடு முழுமையும் வளப்பங்களை உண்டாக்கி வரவேண்டும். இங்ஙனம் மூவரும் தத்தம் கடமைகளிற் கருத்தாயிருந்து பணிபுரிந்து வந்தால்,

அப்போதுதான் மக்கள் இருக்குமிடம் விரும்பத் தகுந்ததாக இருக்கும். 'விரும்பத் தகுந்த இடம்' என்னுங் கருத்தமைந்த 'நாடு' என்னும் அழகிய பெயரும் அப்போதுதான் அதற்குப் பொருந்தும். இவ்வுண்மைகளெல்லாம் அமையத் **திருவள்ளுவப் பெருமான்** திருவாய்மலர்ந்தருளிய அத் திருக்குறள்,

> " தள்ளா விளையுளும், தக்காரும், தாழ்விலாச்
> செல்வரும் சேர்வது நாடு "

என்பது.

இவ் வருமையான திருக்குறளில் வணிகர்கள் 'தாழ்விலாச் செல்வர்' என்று குறிக்கப்படுதலால், ஒரு நாட்டில் மேலுமேலும் பெருக்கமாய் விளங்கும் செல்வர்கள் வணிகர்களே என்பது விளங்குகின்றது. சிறந்த நகரங்களில் இவர்கள் அரசருக்கு அடுத்த பெருஞ் செல்வர்களாகப் பண்டைக் காலத்தில் விளங்கியிருந்தார்கள். அதனால் இவர்களுக்கு 'இளங்கோக்கள்' என்னும் பெயருண்டு. கரிகால் வளவன் காலத்தில், காவிரிப்பூம்பட்டினம் சிறந்த நகரமாகத் திகழ்ந்திருந்தது. அங்கே அரசிளைஞரும் வணிக இளைஞரும் தெருவில் யானைகள் மேலும் குதிரைகள் மேலும் ஏறி ஒருங்கு செல்வர் என்னுங் குறிப்பொன்று சிலப்பதிகாரத்திற் கூறப்படுகின்றது. வணிகர்கள் அவரவர்கள் செல்வாக்குக்குத் தக்கபடி 'எட்டி' முதலிய சில பட்டங்களாலும் பொற்பூக்களாலும் அரசர்களாற் சிறப்பிக்கப்பட் டிருந்தனர்.

பண்டைக் காலத்தில் இந்த வாணிகம் உலக உதவியாகவே நடைபெற்று வந்தது. பொருள் ஈட்டுவது என்னுங் கருத்தால்மட்டும் வணிகர்கள் இதனை நடத்தினதாகத் தெரியவில்லை. ஏனென்றால், பல

இடங்களில் விளையும் பலவகைப் பண்டங்களை ஓரிடத்திற் கொண்டுவந்து குவித்து அதை அப் பண்டங்கள் கிடைக்காத வேற்றிடங்களுக்கு அனுப்பியுதவுவதனால், நாடு முழுமையும் மக்கள் வறுமையின்றி நலமாக இருக்க வழியேற்படுகின்றதென்பதும், இது மக்கள் கூட்டத்துக்கே ஒரு பேருதவியான பணி என்பதும் தக்க வணிகர்களின் உள்ளங்களில் நன்றாகவே பதிந்திருந்தன. அதனால், இவ்வழகிய பணியைச் செய்யும்பொழுது அவர்கள் அதன் வழியாகத் தமது உழைப்புக்குச் சிறிது பொருள் ஒதுக்கிக் கொள்ளுதலை இரண்டாம் நோக்கமாகவே வைத்து நடந்து கொள்ள மனம் இடங்கொடுத்தது. காவிரிப்பூம்பட்டினத்தி லிருந்த வணிகர்கள் தமக்கு உண்டாகும் ஊதியத்தை வெளிப்படையாகக் காட்டிப் பண்டங்களை விலை கூறி விற்பார்கள் என்னும் உண்மை **பட்டினப்பாலை** என்னும் நூலிலிருந்து தெரிகின்றது. பிறர் பொருள்களை மிகுதியாகக் கொள்ளாமலும், தம்முடைய பண்டங்களைக் குறைத்துக் கொடாமலும் நடுவு நிலைமையோடும் உண்மையோடும் அவர்கள் வாணிகஞ் செய்வார்கள் என்னும் கருத்தும்,

> "நடுவுநின்ற நன்னெஞ்சினோர்
> வடுவஞ்சி வாய்மொழிந்து
> தமவும் பிறவும் ஒப்ப நாடிக்
> கொள்வதூஉம் மிகைகொளாது
> கொடுப்பதூஉம் குறைகொடாது
> பல்பண்டம் பகர்ந்து வீசும்
> தொல்கொண்டித் துவன்றிருக்கை"

என்று அந் நூலில் வருகின்றது. பொருளீட்டுதலே நாட்டமுடையவர்களாயிருந்தால் அவர்கள் அவ்வாறு

ஊதியத்தை வெளிப்படையாகச் சொல்லி விற்பனை செய்வார்களோ ?

வாணிகம் இவ்வளவு நம்பிக்கையாக நடை பெற்று வந்ததனால், ஊதியம் சிறிது சிறிதானாலும், தொடர்ந்த நிலையான வருவாய்க்கு இடமாகிப் "பல துளி பெருவெள்ளம்" என்னும் அழகிய பழமொழிப் படி வணிகர்கள் அக் காலத்தில் தாழ்விலாச் செல்வ முடையவர்களாகச் சிறந்து விளங்க நேர்ந்தது. நாட்டுக்கும் வளப்பத்தை உண்டாக்கி, அங்ஙனம் உண்டாக்குவாரும் பெருஞ்செல்வராய் விளங்குதற்குரிய இவ் வணிகத் தொழில் எவ்வளவு சிறந்ததாயிருக்கிறது! இதனாலன்றோ இத்தொழிலுக்கு **வணிகம்** என்னும் சிறந்த பெயரும் அமைவதாயிற்று! **வண்மை செய்தல்** என்பது அதன் சொற்பொருள். 'வண்மை' வளப்பமெனப்படும். பிறர்க்குந் தமக்கும் இங்ஙனம் வளப்பம் உண்டாவதற்கு ஏதுவான ஒரு நன்முயற்சியே 'வாணிகமாவது' எனின், அது நாட்டுக்கு எவ்வளவு இன்றியமையாததொன்றா யிருக்கின்றது! இத்தகைய அரிய நற்பணியைச் செய்து பொருளீட்டிய தாழ்விலாச் செல்வர்களால் நமது நாடு முன்பு விளங்கியிருந்தது. மேலெடுத்துக் காட்டிய **பட்டினப்பாலை** என்னும் நூலில், வணிகரிருக்குந் தெருவின் வளம்,

"நீரின் வந்த நிமிர்பரிப் புரவியும்,
காலின் வந்த கருங்கறி மூடையும்,
வடமலைப் பிறந்த மணியும், பொன்னும்,
குடமலைப் பிறந்த ஆரமும், அகிலும்,
தென்கடல் முத்தும், குணகடல் துகிரும்,
கங்கை வாரியும், காவிரிப் பயனும்,
ஈழத் துணவும், காழகத் தாக்கமும்,

அரியவும் பெரியவும் நெரிய ஈண்டி
வளம்தலை மயங்கிய நனந்தலை மறுகு."

என்று இந்தியா முழுமையிலுமிருந்து வந்து குவிந்து கிடந்த பலவகையான பண்டங்களையும் எடுத்துக் காட்டி விளக்கப்பட் டிருக்கின்றது. எல்லாம், சிறந்த விலையுயர்ந்த பொருள்கள். காவிரிப்பூம்பட்டினத்துத் தெருவில் இவைகள் ஒன்றோடொன்று நெரிபடும்படி ஈண்டிக் கிடக்கின்றன. பல விடங்களிலு மிருந்து ஓரிடத்தில் வந்து குவிந்த இவை, இனி, இவை கிடைக்கமாட்டாத பலவேறிடங்களுக்கும் வாணிப முறையில் வகுத்து அனுப்பப்படும். 'நீரின் வந்த நிமிர்பரிப் புரவியும்' என்று வருகின்ற அடியினால், குதிரைகள் அக்காலத்தில் கடல் வழியாகக் கப்பல் களில் வந்தமை தெரிகின்றது. ஆதலால், நிலத்தின் வழியாகவே யல்லாமற், கடல் வழியாகவும் அப்போது வாணிகம் நடந்துவந்ததென்பது தெளியப்படும்.

## 1. கடல் வாணிகம்

இனி, இவ் விருவகையான வாணிகங்களுள் மிகவும் சிறந்தது கடல் வாணிகமே யாகும். **கடல் வாணிகம்** முன்பு தமிழ் நாட்டில் நல்ல நிலைமையில் இருந்ததாகவே தெரிகின்றது. கடல் வாணிகம் என்று சொன்ன அளவிலேயே, நம் நாட்டவர் தொலைவான அயல் நாட்டவரோடும் முன்பு வாணிகஞ் செய்திருந்தனர் என்பது பெறப்படும். நமது நாட்டிலேயே கடற்கரையோரத்திலுள்ள பிற நகரங்களோடும் வாணிபஞ் செய்தமை அறியப்படும். **ஈழம், காழகம், கடாரம், சீனம், சோனகம், யவனம்** முதலிய நாடுகளோடு

நம்மவர்கள் முன்பு வாணிபஞ் செய்து வந்தார்களென்பது பழைய தமிழ் நூல்களிலிருந்து தெரிகின்றது.

இந் நாட்டிலிருந்து பல பொருள்கள் அயல் நாடுகளுக்குச் சென்றதாக வரலாற்று ஆசிரியர்களும் கட்டுரைக்கிருர்கள். நல்ல **வைடூரிய மணிகள்** இங்கிருந்து **மெசபத்தோமியாவுக்குச்** சென்றிருக்கின்றன என்றும், **தென்னுட்டின் மேற்குமலையில்** அம் மணிகள் கிடைத்து வந்தன என்றும் அவர்கள் எடுத்துக் காட்டுவர். இம் மலைப் பக்கங்களை வடமொழி நூல்கள் **வைடூரிய நிலமென்றே** கூறுவதாகவுந் தெரிகின்றது. தமிழ் நாட்டு மலைக்குடிகள், தமது உணவுக்காக மலைப்பக்கங்களில் கிழங்குகள் அகழும்போது, அவர்கள் அகழுங் குழிகளில் தூய மணிக்கற்களுங் கண்டெடுக்கப்படுமென்று **குறுந்தொகைச்** செய்யுளில் வருகின்ற குறிப்பு ஒன்று இங்கு நினைவுக்கு வருகின்றது.

"......குன்றத்துப்
பழுங்குழி யகழ்ந்த கானவன் கிழங்கினொடு
கண்ணகல் தூமணி பெறூஉம்"

என்பது அச்செய்யுள். **அகநானூறு** என்னும் நூலிலும்,

"பொருதுதொலை யானை வெண்கோடு கொண்டு
நீர்திகழ் சிலம்பின் நன்பொன் அகழ்வோன்
கண்பொரு திமைக்கும் திண்மணி கிளர்ப்ப"

என்று இவ்வியல்பு குறிக்கப்பட்டிருக்கின்றது.

**பஞ்சு, ஆடைகள்** முதலியனவெல்லாமும் இந் நாட்டிலிருந்து பிற நாடுகட்குச் சென்றிருக்கின்றன. மூங்கிலின் தோல் போன்ற மெல்லிய ஆடைகள் **ஐரோப்பாவுக்கு** முன்பு மிகுதியாக ஏற்றுமதி செய்யப்

பட்டன. கிரீசு, உரோம் முதலிய நாடுகள் இந் நாட்டு ஆடைகளையும் அணிகலன்களையும் மிகுதியாக விலை கொடுத்து விருப்பமாக வாங்கியதாகத் தெரிகின்றது. உரோம அரசர்களின் நாணயங்கள் தெற்கே வைகை யாற்றங் கரைகளிலும் மேற்கே கோயம்புத்தூர்ப் பக்கங்களிலுந் தோண்டியெடுக்கப்பட்டிருக்கின்றன. மயில்தோகை, அரிசி, தந்தம், முத்துக்கள், நீலம், தேக்கு மரம், மிளகு, பொன் முதலிய பொருள்களும் பிறவும் இந் நாட்டிலிருந்து அயல் நாடுகளுக்குப் பரவியிருக்கின்றன. பாலத்தீனம், சாலடியா, சீனம் முதலிய நாடுகளிலேயே இவற்றிற்கேற்ற அடையாளங்கள் காணப்படுகின்றனவென்று ஆசிரியர்கள் கருதுகிறார்கள். தேக்குமரம் அக்காலத்தில் தென்னாட்டிலேயே மிகுதியாகக் கிடைத்து வந்ததாம். முத்துக்களிற் பாண்டி நாட்டு முத்துக்களே உலகமெல்லாம் புகழப்பட்டது. 'பொன்' என்னும் உலோகம் முதன்முதலாகத் தமிழ் நாட்டிலேயே காணப்பட்டதென்று டாக்டர் மக்கிளீன்* முதலானவர்கள் கருதுகிறார்கள். இந்நாட்டிலிருந்து கப்பல்கள் தங்கங் கொண்டுபோனதாகச் சாலடி நாட்டின் பட்டையம் ஒன்று எடுத்துக் காட்டுகிறது.

தமிழ்மக்கள் ஏறக்குறைய ஐயாயிரம் ஆண்டுகளுக்கு முன்னமேயே இங்ஙனம் கடல் வாணிபத்திற் சிறந்திருந்தனர். தொல்காப்பியம் என்னும் பெரு நூலிலேயே, அதற்குமுன் இருந்த மக்கள் கடல்வழியாகப் பிற நாடுகட்குச் சென்று வந்த வழக்கம் "முந்நீர் வழக்கம்" என்று குறிக்கப்படுகின்றது. தமிழ் நூல்களில், பொறுக்கமுடியாத பெரிய துன்ப நிகழ்ச்சிகளுக்கு உவமம் வருகின்ற இடங்களில்,

*Dr. Mclean.

ஆரிருள் மழை நாளில் நடுக் கடலிற் கலங் கவிழ்ந்து வருந்தும் வணிக மக்களின் நிலைமையே பெரும்பாலும் எடுத்துக் காட்டப்படுகின்றன. கலங் கவிழ்ந்து தவிப்போர், **மணிமேகலையிற்** "கலங்கவிழ் மாக்கள்" என்றே கூறப்படுகின்றனர்; "உடைகல மாக்கள்" என்றும் அதிற் கூறப்படுவர். **சிலப்பதிகாரத்தில்,**

> "இடையிருள் யாமத்து எறிதிரைப் பெருங்கடல்
> உடைகலப் பட்ட எங்கோன்"

என்று இத் துன்ப நிலை அவ் வுணர்வு தோன்ற விளக்கப்பட்டிருக்கிறது.

கப்பலுக்குத் தமிழ் மொழியிற் பல பெயர்கள் இருக்கின்றன, ஒவ்வொரு பெயரும் ஒவ்வொரு வகையான கப்பலைக் குறிக்கும். பல வகையான கப்பல்கள் அக் காலத்தில் தமிழகத்திற் செய்யப்பட்டன. "கலம் செய் கம்மியர்" என்றே தொழிலாளருள் ஒரு வகையினர் தமிழகத்தில் இருந்தனர். புணை, பரிசல், கட்டு மரம், தோணி, திமில், ஓடம், படகு, அம்பி, வங்கம், கப்பல், நாவாய் முதலிய பல பிரிவான கலங்கள் அப்போது செய்யப்பட்டு விளங்கின. பெரிய கப்பல்களும் அப்போது செய்யப்பட்டன என்று தெரிகின்றது. ஒவ்வொரு பெரிய கப்பலும் ஒரு மதில் சூழ்ந்த மாளிகை போலத் தோன்றுமாம். **புறநானூற்றில்** இதைப் பற்றிய குறிப்பு ஒன்று வருகின்றது. நாலா பக்கமும் நீர் நிரம்பிய கழனிகள் சூழ்ந்திருக்க, நடுவில் தனியாக விளங்கும் மதிலோடு கூடிய ஓர் அரசனது மருதநிலக் கோட்டைக்கு, விரிந்த கடலின் நடுவில் தனியாகத் தோன்றுங் கப்பல் ஒன்று அந்நூலில் உவமமாகக் கூறப்பட்டிருக்கின்றது.

"பிணங்குகதிர்க் கழனி நாப்பண் ஏமுற்று
உணங்குகலன் ஆழியின் தோன்றும்
ஓர்எயில் மன்னன்"

என்னும் வரிகள் இவ் வுண்மையை அறிவிப்பன. கப்பலின் உயர்ந்த சுற்றுச் சுவர்கள் கோட்டையின் மதிற்சுவர்கள்போலவும், கப்பலின் உள் அறைகள் அக் கோட்டையின் உள் மாளிகைகள் போலவும் இருந் திருக்குமென்று இவ் வொப்புமையால் தெரிகின்றது.

இரண்டாயிரம் ஆண்டுகட்கு முன்னும் அயல் நாட்டுக் கப்பல்கள் இந் நாட்டுத் துறைமுகங்களுக் குப் பொன்னொடு வந்து பொருளொடு போகும் என் றும், அதற்கேற்றபடி தமிழகத்தின் மேற்குக் கட லோரத்திலும் கிழக்குக் கடலோரத்திலும் **தொண்டி, கொற்கை, காவிரிப்பூம்பட்டினம்** முதலிய பல நல்ல துறைமுகங்களும் அப்போது வளமாக விளங்கியிருந் தனவென்றும் பழைய நூல்களிலிருந்து புலப்படு கின்றது. இவ் வகைகளால், நாடு அக் காலத்திற் செல்வம் மிக்குச் செழித்திருந்தது.

வாணிகத்தில், உள் நாட்டு வாணிகத்தைவிட அயல் நாட்டு வாணிகத்திலேயே ஊதியம் மிகுதி. அயல் நாட்டு வாணிகத்திலும், நிலத்தின் வழியாகச் செய்யும் வாணிகத்தைவிட நீரின் வழியாகச் செய்யும் வாணிகம் மிக்க செழுமையைத் தரும். தமிழ் நாட் டில் இவ் வெல்லா வாணிகங்களும் முன்பு செழுமை யாகவே இருந்தன. கடல் வாணிபம் மிகவும் சிறந் திருந்தது.

உள் நாட்டு வாணிபத்தில், கூட்டங் கூட்டமாகச் செல்லும் வாணிகச் சாத்துகள், தம் வாணிபப் பண் டங்கள் பொதிந்த மூட்டைகளைச் சுமப்பதற்கு எருது,

கழுதை முதலிய விலங்குகளையும் பயன்படுத்திக் கொள்வார்கள்.

"அணர்ச்செவிக் கழுதைச் சாத்தொடு வழங்கும்"

என்று **பெரும்பாணாற்றுப் படையில்** இதைப்பற்றி ஒரு தொடர் வருகின்றது.

வாணிகம் நன்றாக நடை பெறுவதற்கு நல்ல முதலும், நாணயமும், நற்குணமும் இன்றியமையாதன; இவ்வுண்மைகளைப் பழைய தமிழ் மக்கள் செவ்வையாக அறிந்திருந்தனர்;

"முதலிலார்க்கு ஊதிய மில்லை"

"வாணிகம் செய்வார்க்கு வாணிகம் பேணிப்
பிறவும் தமபோற் செயின்"

என்னும் **திருவள்ளுவர்** திருமொழிகளால் இதனைத் தெரிந்துகொள்ளலாம்.

## 2. கடைத் தெருக்கள்

தமிழ் நாட்டு நகரங்களின் கடைத்தெருக்கள் இலக்கியங்களில் அழகாகச் சிறப்பிக்கப்பட்டிருக்கின்றன. **மதுரையின்** கடைத் தெருவைப்பற்றிக் கூறுகின்றபோது, உலோகப் பொருள்கள், தோலாலான பண்டங்கள், படங்கள், மரப்பொருள்கள், மணிகள், தந்தப் பொருள்கள், மண்பொருள்கள், வகைவகையான மலர் மாலைகள், ஆடைகள் முதலியனவெல்லாம் விலைசெய்யப்படுகின்றனவென்றும்; ஒன்பது வகை மணிகளும், நால்வகைப் பொன்னும், நூலாலும் பட்டாலும் ஆன பல வகையான ஆடைகளும், நெல் முதலிய பதினறுவகையான தானியங்களும், மிளகு

முதலியனவும் விற்றற்குத் தனித்தனியான தெருக்கள் இருந்தனவென்றும் **சிலப்பதிகாரம்** கூறும். இங்ஙனம் பல வாணிபப் பொருள்கள் விற்பனை செய்வதோடு அவ்வப்போதும் மக்களுக்குப் பயன்படக்கூடிய புதிய புதிய பொருள்களைக் கண்டுபிடித்துச் செய்து வாணிபஞ் செய்து வந்த அருமையான செய்தியும்,

"வம்பின் முடிநவும்"

என்னுந் தொடரால் எடுத்துக்காட்டப்படுகிறது. புதியவாகச் செய்து முடிக்கப்பட்ட பண்டங்களும் அங்கே விலைசெய்யப்படுகின்றன என்பது பொருள். **மதுரைக் காஞ்சி** என்னும் நூலிலும் இம் மதுரைமாநகரின் கடைத்தெரு மிக விரிவாக விளங்கக் கூறப்பட்டிருக்கின்றது. **சிலப்பதிகாரத்தில் காவிரிப்பூம்பட்டினத்தின்** நாளங்காடியைப்பற்றிக் கூறுமிடத்தில், விலை கொள்கின்றவர்கள் ஓசையும், விலை கொடுக்கின்றவர்கள் ஓசையும் என்றுங் குறைவின்றி ஒலிக்கும் என்று, ஓவென்னும் அவ் வோசைச்சிறப்புக் காட்டப்படுகின்றது. இங்ஙனமே வஞ்சிமுதலிய நகர்களிலும் ஆவணத் தெருக்கள் பற்பல வகையாகச் சிறப்பிக்கப்பட்டிருக்கின்றன.

அக் காலத்திற் கடைகள் காலைக்கடை, மாலைக் கடை என்னும் இரு பிரிவோடு விளங்கி யிருந்தன. அவை முறையே **நாளங்காடி அல்லங்காடி** என்று சொல்லப்படும். பகற்காலத்தில் இன்ன இன்ன கடையில் இன்ன இன்ன பண்டங்கள் விற்கப்படும் என்பதற்கு அடையாளக் கொடிகள் கட்டியிருந்தனர். இராக் காலத்தில் அச் செய்தியை விளக்கொளிகளாற் புலப்படுத்தினர்.

வணிகர்கள், கூலவாணிகர், அறுவைவாணிகர், பொன்வாணிகர், மணிவாணிகர் முதலிய பல பிரிவின ராக இருந்து வாணிபஞ் செய்து வந்தார்கள். இருந்து விற்பாரும், திரிந்து விற்பாரும் இருந்தனர்.

## 3. பெரும்போக்கு

இனிப் பண்டைக் கால வணிகர்கள், தம் வணி கத் தொழிலோடுமட்டும் இருந்துவிடாமல், நாட்டின் பொது நலங்களிலும் கருத்தும் முயற்சியும் உடைய வர்களாகத் திகழ்ந்தமை நினைவு கூர்தற்குரியது. பலர்க்கும் பல துறையிலும் பொருள்கள் வழங்கி அவர்கள் நல்ல கொடையாளர்களாக விளங்கினார்கள். இக் குறிப்புப் **பட்டினப்பாலையில்** வருகின்றது. அரச னுக்கு உதவியாகத் தூது செல்லுதல் முதலிய காரியங் களையும் அவர்கள் மேற்கொண்டிருந்தார்களென்று தெரிகின்றது. வாணிகஞ் செய்யும்போது, நயமும் உண்மையும் சுருக்கமும் விளக்கமும் உண்டாகும்படி உலகியலறிவோடு பேசிப் பேசிப் பழகியவர்களாத லால், இவர்களிற் பலர் பிறரை வயமாக்கத் தக்க பேச்சுத் திறம் உடையவர்களாக இருந்திருக்கக்கூடும்.

இவர்களிற் பலர் புலவர்களாகவும் விளங்கினர். **சீத்தலைச் சாத்தனார், இளவேட்டனார், பொன்வாணிகனார், இளந்தேவனார்** என்னும் சிறந்தசங்கப்புலவர்கள் வணிக முயற்சி யுள்ளவர்களேயாவர். இவர்கள், முறையே கூலவாணிகரும், அறுவைவாணிகரும், பொன்வாணி கரும், பண்டவாணிகருமாவர். இவர்கள், தாமுந் திருத் தமான உயர்ந்த தமிழ்க்கல்வி பயின்று, பிறர்க்கும் அதனைப் பரவச்செய்துவந்தபெருந்தகையோருமாவர்.

# எ. கலைகள்

வாழ்க்கைக்கு முயற்சி கட்டாயமாயிருக்கிறது. முயற்சியில் இரண்டுவகை உண்டு. ஒன்று உடம்பு முயற்சி; மற்றொன்று அறிவு முயற்சி. பொது வாக உடம்பு முயற்சியைத் 'தொழில்' என்றும், அறிவுமுயற்சியைக் 'கலை' என்றும் சொல் லலாம். சங்ககாலத்துத் தமிழ்மக்கள் மேற்கொண் டிருந்த தொழில்வகைகளைப் பற்றித் 'தொழில்' என்னுங் கட்டுரையிற் காணலாம்; இங்கே அவர்கள் அறிவு முயற்சிகளாகிய கலைகளைப்பற்றிக் கருது வோம்.

கலைகளும் தொழில்களும் ஒன்றோடொன்று தழுவியுள்ளவை; கலைகள் உயிரறிவின் செயல்களாத லால், ஒரு நாட்டில் கலைகள் சிறப்பாக விளங்கும் போதுதான் அங்கே உடம்பின் முயற்சிகளான தொழில்களும் மாட்சிமைப்படும். எல்லா நலங்களும் உண்டாகும்.

முதலிற் கலைகள் அவற்றிற்குரிய தகுதியாளர் களிடமிருந்து வெளிப்படும். அதன்பின், அவர்கள் காட்டுகின்ற குறிப்புக்கள்படி மற்றவர்கள் அக் கலை நுட்பம் பொருந்தத் தொழில் செய்வார்கள்.

கலைஞர்களும் தொழிலாளர்களும் விளங்கியிருக் கும் நாடே செல்வம் கொழிக்கும் நாடு. அந் நாடு களில் வாணிப முயற்சிகளும் நன்றாக நடக்கும். ஐரோப்பா அமெரிக்கா முதலிய மேல் நாடுகளில் இப் போது கலைஞரும் தொழிலாளரும் மிகுதியாக இருந்து

செயல் புரிந்து வருகிறார்கள். அதனால் அந் நாடுகள் செல்வத்திற் சிறந்து விளங்குகின்றன. கலைகளின் இன்றியமையாமை இதனால் அறிந்து கொள்ளப் படும்.

## 1. கலைஞர் நிலைகள்

நமது நாட்டில் ஏறக்குறைய இரண்டாயிரம் ஆண்டுகளுக்குமுன் விளங்கியிருந்த மக்கள் கலைகளின் இன்றியமையாமை தெரிந்து அவற்றைப் போற்றி மேன்மை யடைந்தார்கள். அதனால், சங்க காலத்தில் கலைஞர்களும் தொழிலாளர்களும் தத்தம் கலையருமை களையும் தொழிலருமைகளையும் நன்றாகப் பயின்று வந்திருக்கிறார்கள்.

தமிழகத்தில் இப்போது காணப்படுகின்ற சாதிப் பிரிவுகளெல்லாம் முதலில், கலைகளாலும் தொழில்க ளாலும் ஏற்பட்டவைகளேயாம். சில கலைகளுக்கும் சில தொழில்களுக்கும் நமது நாட்டில் தனித்தனியாக மக்கட் பிரிவினர் இருந்தனரென்பதே, நம் முன்னோரி டம் கலைகளும் தொழில்களும் விளங்கி யிருந்தமைக்கு நல்ல அடையாளமாகும். அந்தந்த வகையினருக்கு ஏற்றபடி நகரங்களில் தனித்தனியான தெருக்களும் உண்டு. தெருக்களேயல்லாமல், தமிழ் நாட்டில் சில சிற்றூர்களும் ஒவ்வொரு வகையான கலையறிஞர் களுக்கும் தொழிலாளர்களுக்குமே இருப்பிடமாகத் தனித்தனியாய் விளங்கி யிருந்தனவென்றுந் தெரி கின்றது. **சிலப்பதிகாரத்திற்** கூறப்படுகின்ற **புறஞ்சேரி**யும் இவ்வகையில் அடக்கும். ஆனிரைகளைப்பற்றிய செய்திகளை ஆயர்கள் நன்றாக அறிந்து தொழில் புரிந்து வந்தார்கள். அவர்கள் ஒருங்கு குடியிருந்த

இடம் 'ஆயர் சேரி' எனப்பட்டது. 'பாண்குடி' 'பாண்சேரி' என்னும் பெயர்களும், 'பாணர்' என்னும் ஓர் இனத்தார் ஒருங்கு குடியிருந்ததனுல் உண்டான பெயர்களேயாம். அவர்கள் இசைக்கலைஞர்கள். ஓர் ஊர் என்று சொல்லத் தகுந்த அளவுக்கு இசைக் கலைஞர்கள் தனித்தனி இடங்களிற் குடியிருந்தன ரென்று இதனுல் தெரிகின்றதன்ருே !

ஊர்களின் பெயர்கள் நமது நாட்டிற் பல காரணங்களால் அமைந்திருக்கின்றன. அவற்றை யெல்லாம் உன்னிப்பார்த்தால் நம் முன்னோர்கள் முன் ஆராய்ந்து வந்த கலைகள் இன்ன இன்ன என்பனவும் புலனுகும். இப்படியே மக்களின் பெயர்கள் முதலி யனவும் இவ் வாராய்ச்சிக்கு உதவக்கூடும். சுருங்கச் சொன்னுல், தமிழ்மொழியிலுள்ள ஒவ்வொரு சொல் லும் இதற்கு மிகவும் பயன்படுமென்று உறுதியாகச் சொல்லலாம். சொற்களை அவை தோன்றிய காரணங் களுடன் ஆராய்கின்றபோது, கலைத்திறமைகள் அவ் வக்காலங்களில் எவ்வெவ்வாறு வளர்ச்சியடைந்து வந்திருக்கின்றன என்பனவும் விளக்கமாகும். அறிஞர் கள் அன்பும் இரக்கமுங் கொண்டு இவ்வாராய்ச்சியை நல்லுணர்வோடு செய்துவந்தால், நமது தமிழுலகம் மழுக்கம் நீங்கி எவ்வளவோ ஒளி விரிந்து மிளிரும்.

'வள்ளுவன் பெருஞ்சாத்தனுர்,' 'ஏறுதி நெடுங் கண்ணனுர்,' 'முதுகூத்தனுர்,' 'பெருங் கொல்லனுர்' முதலியவை பண்டைக் காலத்தில் விளங்கிய புலவர் களின் பெயர்கள். இப் பெயர்களால், முறையே அர சியற் கலை, போர்க் கலை, நாடகக் கலை, சிற்பக் கலை என்பவற்றை நன்ருக அறிந்து பேர் பெற்றவர்கள் முன்பு நமது நாட்டில் இருந்தன ரென்று தெரிந்து

கொள்ளலாம். தமிழ் மொழியில் 'மணம்' என்று ஒரு சொல் வழங்கக் காண்கின்றோம். அதன் சொற் பொருளை ஆராய்ந்தால், மண்ணிலிருந்து மணம் தோன்றுகின்றது என்னும் உண்மை வெளிப்படுகின்றது. இவ் வுண்மையைத் தெரிந்த பின்பே நம் முன்னோர்கள் அதற்கு அப் பெயரை வழங்கியிருக்கவேண்டும். ஆதலால், தமிழிலுள்ள பெயர்கள் முதலியவற்றை ஆராயும்போது, நம் முன்னோர்கள் என்னென்ன கலைஞான முடையவர்கள் என்பதை அறிந்துகொள்வதற்கு வழியுண்டாகலாம். பண்டைத் தமிழ் நாடு தக்க கலை யுணர்ச்சிகளிற் சிறந்திருந்த தென்பதற்குத் தமிழ் மொழியே சிறந்த சான்றாக அமைந்திருக்கின்றது. உணர்ச்சிகளின் வெளிப்பாடே மொழியாதலின், தமிழ் மொழியை ஆராய்ந்தால், தமிழ் முன்னோர்களுடைய உணர்வின் பிரிவுகளெல்லாம் வெளிப்பட்டுவிடும் என்பதில் ஐயமொன்றுமில்லை. வெளிப்படுதற்குரிய எல்லா உணர்ச்சிகளுந்தாம், மொழியில் அடங்கிக் கிடக்கின்றனவே! தமிழர் உணர்வுகளைத் தெரிந்துகொள்வதற்குத் தமிழ் மொழியைவிடச் சிறந்த கருவி வேறொன்று இருக்குமென்று தோன்றவில்லை.

## 2. கலைகளின் வகைகள்

கலைகளைப் பொதுவாக இரண்டு வகைகளிற் பிரிக்கலாம். சில கலைகள் அறிவினாலேயே தெரிந்து பழகி இன்புறத் தக்கவை. அக் கலைகள் கொண்டு உடம்பு முயற்சியினால் தொழில் செய்ய இயலாது. **இலக்கியம், இசை** முதலியன இவ்வகையில் அடங்கும். சில கலைகள் அறிவினால் அறிந்து இன்புறுதலோடு

உடம்பு முயற்சியினாலும் தொழில்கள் செய்துகொள்ளத் தக்கவை. பெரும்பாலும் மண், நீர், தீ, காற்று, வானம் என்னும் ஐந்து முதற் பொருள்களைப்பற்றி ஆராய்கின்ற **இயற்கைப் பொருள் ஆராய்ச்சிகள்** தொழில்கள் செய்வதற்கும் உதவும். இங்ஙனம் அறிவின்பத்துக்கு மட்டும் ஏதுவான கலையைப் பொதுவாக **உணர்வுக் கலை**[1] என்றும், தொழிலுக்கும் ஏதுவான கலையைப் **பொருட் கலை**[2] என்றும் சொல்லலாம். சங்க காலத்திலிருந்த தமிழ் மக்கள் இவ் விருவகைக் கலைகளிலும் வளம்பெற்றிருந்தனர். இவற்றைப் பற்றிய கலைநூல்களும் அப்போது தனித்தனியே இயற்றப்பட்டிருந்தன. அதனால் அவர்களுக்கு அறிவுவளம் தொழில் வளம் என்னும் இருவகை வளங்களுஞ் செழித்திருந்தன. **புறநானூற்றில்,**

"......விசும்பின்
வலவன் ஏவா வான வூர்தி"

என்று வருகின்ற வரிகளில் **வானவூர்தி**யைப் பற்றிய குறிப்பு வருகின்றது. இங்கே குறிப்பிடப்படுகின்ற 'வானவூர்தி', பாகனும் உடனிருந்து அவ்வப்போதும் இயக்கிக்கொண்டிருக்க வேண்டிய கட்டாயமில்லாதது. புலவர்களாற் பாடப் பெறுகின்ற தகுதியுடையோர் இத்தகைய வலவன் ஏவா வான ஊர்தியிற் செல்லும் பெருமையை அடைவார்கள் என்று இந் நூல் கூறுகின்றது. 'வலவன் ஏவா வானவூர்தி' என்று இங்கே வருதலின், வலவன் ஏவும் வானவூர்திகளும் வேறே இருந்திருக்குமென்று தோன்றக்கூடும். இங்ஙனம் பாகன் உடன் செல்லாது ஓரிடத்தி லிருந்தே

[1] Arts. [2] Science.

இயக்கிவிடும் வான்பொறிகளும், உடன் சென்று இயக்கும் வான்பொறிகளும் அமைத்துச் செலுத்துவதற்குப் பொருட்கலை அறிவு, மிகுதியாகத் தேவையாயிருக்கும் என்பது சொல்லாமலே அமையும்.

இனி, மேலே சொன்ன உணர்வுக்கலை பொருட்கலை என்னும் இவ்விரண்டிலும் தனித்தனியே இரண்டிரண்டு பிரிவுகள் கொள்ளலாம். உணர்வுக் கலையிலும் இருவகை; பொருட் கலையிலும் இருவகை. உணர்வுக் கலை என்பது **மெய்யுணர்வுக் கலை**[1] என்றும், **இன்பவுணர்வுக் கலை**[2] என்றும் பிரிவுபடும். 'மெய்யுணர்வுக் கலை'யானது, முற்றிலும் உணர்வு நிலையிலேயே உணரப்படுவது. சமயம், மெய்ப்பொருள் என்பவை அத்தகையவை. 'இன்பவுணர்வுக் கலை' என்பது, ஓவியம் சிற்பம் போன்றவை. இவையும் உணர்வின்பந் தருவனவே. ஆனாலும், பொருள்களின் வாயிலாக அவ் வின்பத்தைப் பெறவேண்டி யிருக்கிறது.

இனிப், பொருட்கலை என்பது, மேலே சொன்ன மண் முதலான ஐம்முதற் பொருள்களின் ஆராய்ச்சிகள் என்றும், அவற்றை வாழ்க்கைக்குப் பயன்படுத்தும் முறைகள் என்றும் இரு வகையாகக் கொள்ளலாம். வான்நூல்[3] போல்வன முன்வகையிலும், கோள் நூல்[4] போல்வன பின்வகையிலும் சேர்ந்தவை. இங்ஙனங் கலைகளை நான்கு பெரும் பிரிவுகளாகப் பிரித்தறியலாம்.

இனி இக் கலைகளெல்லாம் பின்னுங் கூர்மையாகப் பாகுபடுத்தப்பட்டு அறுபத்து நான்கு கலைகளாக முன்னோராற் காணப்பட்டன. கலைமகள் அறுபத்து

---

[1]Religion & Philosophy. [2]Fine Arts. [3]Astronomy. [4]Astrology.

நான்கு கலைகட்குந் தலைவி யென்பது இக் கருத்துப் பற்றியேயாம். இந்த அறுபத்து நான்கு கலைகளிலும் சில கலைகள் தனித்தனி அறுபத்து நான்கு பிரிவுக ளாக இருந்தனவென்றுந் தெரிகின்றது. எடுத்துக் காட்டாக, **அரசியற்கலை** என்னும் பிரிவில் 'அக்கர இலக்கணம்' முதலாக **அறுபத்து நான்கு கலைகள்** கூறப் படுகின்றன. **நாடகக் கலை** என்னும் பிரிவை எடுத்தால், அதிலும் 'யாழ்' முதலாக **அறுபத்து நான்கு கலைகள்** காட்டப்படுகின்றன. இது **சிலப்பதிகாரம்** முதலிய நூல் களிற் குறிக்கப்படுகின்றது. இங்ஙனமெல்லாம் தமிழ் நாட்டிற் கலை யுணர்ச்சி பெரும் பரவலாக விரிந்து விளங்கியிருந்தது.

எந்தத் துறையை எடுத்தாலும் சங்க காலத்தில் விரிந்த நாகரிக வளர்ச்சிக்கான அடையாளங்கள் பெருகக் காணப்படுகின்றன. அதுமட்டுமன்று; இத் தகைய பலவேறு கலைகளிலும் அவர்கள் தலைமை யான பயிற்சியுடையவராயு மிருந்தனர். 'ஓவியம்' என்று எடுத்துக்கொண்டால், வெறும் சுற்றுக்கோடு கள் வரையும் அளவிலேயே உயிருள்ளது போலத் தோன்றும்படி அதனை அமைக்கும் வன்மையும் அவர் களுக்கு இருந்ததென்று தெரிகின்றது. இது **புனையா ஓவியம்** எனப்படும். 'வண்ணந் தீட்டி அழகு செய்யாத ஓவியம்' என்பது பொருள். உயிருள்ளவை போன்ற இப் புனையா ஓவியங்கள் **நெடுநல்வாடை** என்னும் சங்க நூலில் எடுத்துக்காட்டப்படுகின்றன.

பண்டைத் தமிழ் நாடு இவ் வகைகளால் நல்ல அறிவின்பக் களஞ்சியமாகக் கிளர்ச்சியும் ஆக்கமும் பெற்று மேலோங்கியது.

# அ. இசை

இசை மிகவும் இனிமை யானது; இசைக்காகத் தனியே இலக்கண நூல்களும் உண்டு; இலக்கிய நூல் களும் உண்டு. இந் நூல்களைப் பண்டைக்காலத்தில் தமிழ்மக்கள் சிறப்பாக ஆராய்ந்து பயின்று மேன்மை யடைந்து வந்திருக்கிறார்கள். இசை விருந்தில் தமிழர்கள் நன்கு திளைத்திருக்கிறார்கள்.

கலைவளர்ச்சிக்காகத் தமிழ்ச்சங்கங்களில் தனியே இடங்கள் இருந்தன. அந்த இடங்களை 'இசைச் சூழல்' என்றும் சொல்லுவதுண்டு. 'இசைபயிலும் இடம்' என்பது அதன் பொருள். சங்ககாலத்தை அடுத்துத் தோன்றியவரான **மாணிக்கவாசகப் பெரு மான்,** தாம் அருளிச் செய்த **திருச்சிற்றம்பலக் கோவை யாரில்,**

"ஏழிசைச் சூழல்புக்கோ"

என்று இவ் வழகிய பெயரை அமைத்திருக்கின்றார். நாடக ஆராய்ச்சிக்கும் தமிழ்ச் சங்கங்களில் தனியான இடங்கள் உண்டு. தமிழ்ச் சங்கங்கள் இங்ஙனம் மூன்று பிரிவுகளாக அக்காலத்தில் நடைபெற்று வந் தன. ஒன்று இயற்றமிழ்ப் பிரிவு; மற்றொன்று இசைத் தமிழ்ப் பிரிவு. இன்னொன்று நாடகத் தமிழ்ப் பிரிவு.

இசை நாடகங்களைத் தமிழின் பிரிவுகளாகவே அக் காலத்தார் கருதி வந்தார்கள். இசைநாடகங்களை ஆடல் பாடல்கள் என்றும் சொல்லலாம். இசை என்பது பாடல்; நாடகம் என்பது ஆடல்; இசை

நாடகங்களோடு கூடாத நிலையில் உள்ள தமிழ், இயல் பாக நடைபெறுகின்ற தமிழாதலால், அதனை இயற் றமிழ் என்று சொல்லுவது வழக்கம்.

பழைய தமிழ்மக்கள் இவ் விசைநாடகக் கிளர்ச் சியால் எப்போதும் ஊக்கமாகவும் இன்பமாகவும் இருந்துவந்திருக்கிறார்கள். அவர்கள் எந்த வேலையை யும் புதிய புதிய ஊக்கத்தோடு மகிழ்ச்சியாகச் செய்து வந்தார்கள். இசை அவர்கள் வாழ்க்கையில் பலமுக மாகப் பயன்பட்டு வந்தது.

குழந்தைகளாகப் பிறந்ததிலிருந்தே மக்கள் ஊசற் பாட்டுக்கள் கேட்டு வந்திருக்கிறார்கள். சங்க காலத்தில் அப் பாட்டுக்களுக்கு **ஊசல்வரி** என்பது பெயர். விளையாடுங் காலங்களிலும் பந்து விளையாடு தல் முதல் எல்லா விளையாட்டுகட்கும் பாட்டுக்கள் உண்டு. **கந்துகவரி** முதலானவை இப் பாட்டினங் களைச் சேர்ந்தவை. பெரியவர்களான பின், திரு மணம் போர் முதலிய சிறப்பான செய்கைகள் ஒவ் வொன்றுக்கும் வகை வகையான பாட்டுக்கள் அவர் களுக்கு உண்டு. **மங்கல வாழ்த்துப் பாடல், செருப் பறை** முதலியவை இவைபோல்வனவாகும். பெண் கள் உலக்கைகள் கொண்டு குற்றுந் தொழிலுக்குக் கூட **வள்ளைப் பாட்டு** என்னும் ஒரு வகைப் பாட்டு உண்டு; இங்ஙனம் பல நிகழ்ச்சிகளுக்கும் பலதொழில் களுக்கு மெல்லாம் பாட்டுக்கள் இருந்துவந்தன.

இவையல்லாமல், ஆறுகள் கடற்கரைகள் முத லிய இயற்கையிடங்களைப் பார்க்குங் காலங்களிலும் மகிழ்ச்சியால் அவற்றைப்பற்றியும் பல பாட்டுக்கள் பாடுவதுண்டு. அவையெல்லாம் **ஆற்றுவரி, கானல்வரி** என்பவை போன்ற பெயர்களில் வழங்கும். சங்க

நூல்களிற் **பரிபாடல்** என்பதும் ஒன்று. **அது முற்றும் இசைப் பாட்டினலேயே ஆனது.** 'பரிபாட்டு' என்பது ஒரு வகையான இசைப் பாட்டுக்குப் பெயர். அந் நூலில் **வையை யாற்றைப்** பற்றிய பாட்டுக்களும், அந்த ஆற்றிலுள்ள **திருமருதந்துறை** என்னும் நீர்த் துறையைப் பற்றிய பாட்டுக்களும், **திருப்பரங்குன்றம், திருமாலிருஞ்சோலை மலை** என்னும் மலைகளைப்பற்றிய பாட்டுக்களும் வந்திருக்கின்றன. புனல் விளையாட்டு மலை விளையாட்டுக்களைப் பற்றிய பாட்டுக்களையும் அதன்கண் காணலாம்.

இங்ஙனமெல்லாம் இயற்கைப் பொருள்களைப் பற்றிப் பாடுதலோடு, முடிவாக எல்லாம் வல்ல இறை வனைப் பற்றியும் மனமுருகிப் பாடித் தமிழ்மக்கள் இன்புற்றனர். பரிபாடல் என்னும் நூலிலேயே அதற் குரிய பகுதிகளையுங் காணலாம்.

இவ்வாறு பண்டைத் தமிழ்மக்கள் எந்நிலையிலும் இசைப் பாடல்களில் மனந்தோய்ந்து மகிழ்ந்திருக் கிறார்கள்.

"பாட லோர்த்தும் நாடக நயந்தும்"

என்று **பட்டினப்பாலையில்** வருகின்ற தொடர், பழைய தமிழ்மக்களின் ஆடல் பாடல் இன்பத்தை நமக்கு எடுத்துக் காட்டக்கூடியதா யிருக்கின்றது. இதனால், அக் காலத்துத் தமிழ் மக்களின் வாழ்க்கை, மகிழ்ச்சி யும் மாட்சியும் வாய்ந்து திகழ்ந்தது. அம் மகிழ்ச்சியி லிருந்து பல நலங்கள் விளைவவாயின.

பழைய தமிழ் மக்கள், இசையை இங்ஙனம் உள்ளக் கிளர்ச்சிக்காக மட்டும் பயன்படுத்தவில்லை. காரிய நிறைவேற்றங்களுக்காகவும் அவர்கள் மிகுதி

யாகப் பயன்படுத்தி வந்தனர். இதனால் அவர்கள் வாழ்க்கை வெற்றியுள்ளதாக விளங்கியிருந்தது.

'இசை' என்னுஞ் சொல்லுக்கு 'வயப்படுத்துவது' 'இசைவிப்பது' என்பது பொருள். மரஞ் செடி கொடிகள் என்னும் ஓரறிவு உயிர்கள்முதல் மக்கள் என்னும் ஆறறிவு உயிர்கள் வரையில் எல்லா உயிர்களையும் இசையானது வசப்படுத்தும் என்னும் உண்மையை அவர்கள் நன்றாகத் தெரிந்துகொண்டிருந்தார்கள். உயிரில்லாத கல், மண், காற்று, நீர் முதலான பருப்பொருள்களையும் பாடுகின்றவர்களின் எண்ணத்தோடு இசைத்து இயங்கச் செய்கின்ற ஆற்றல் அந்த இசைக்கு உண்டு என்பதையும் அவர்கள் அறிந்திருந்தார்கள். இந் நுட்பங்களாலெல்லாம் அவர்கள் பற்பல காரியங்களை உலகத்தில் வெற்றியுடன் நிறைவேற்றிக்கொண்டு வந்தார்கள். மிக நுண்ணிய இன்னொலிகளால் காரியங்களை நிறைவேற்றுதலென்பது, உயர்வான நாகரிக வாழ்க்கையிலிருக்கும் நன்மக்களுக்கே இயலும். நம் முன்னோர்கள் அத் தகுதியில் விளங்கினரென்பதற்குப் பழைய சங்க நூல்களில் நல்ல சான்றுகளெல்லாங் காணப்படுகின்றன.

**தொல்காப்பியப் பாயிரவுரையில் அகத்தியரைப்** பற்றி ஒரு குறிப்பு வருகின்றது. அதன்கண், அகத்தியர் ஒரு நேரத்தில் இசை பாடியபோது, பொதிய மலையின் கல் உருகியது என்று காட்டப்பட்டிருக்கின்றது.

**குறுந்தொகை** என்பது ஒரு சங்கநூல். அதில்,

"...புதலும்
வரிவண்டு ஊத வாய்நெகிழ்ந் தனவே"

என்னுந் தொடர் காணப்படுகின்றது. வரிவண்டுகளின் இசையினுல் புதர்களில் உள்ள மொக்குகள் கட்டுநெகிழ்ந்து மலர்ந்தன என்னுஞ் செய்தியை இதிலிருந்து தெரிந்துகொள்ளலாம்.

மலைப் புனங்களில் தினைப்பயிர் முதலானவை விளையும். அங்கே உயரமாகப் பரண் கட்டியிருக்கும். மலைநாட்டுப் பெண்கள் அப் பரணின்மே லிருந்து காவல் புரிவது வழக்கம். கிளிகள், குருவிகள் முதலான பறவைகள் அடிக்கடி வந்து தினைக்கதிர்களைக் கறித்துவிடாதபடி அவர்கள் பாதுகாக்க வேண்டும். சில வேளைகளில் அவர்கள் பரண்மேல் இருந்துகொண்டு இனிமையான பண்களைப் பாடுவார்கள். அப்போது, கதிருண்ண வந்த பறவைகள் அந்த இசைக்கு வயமாகி அப்படியே மயங்கி இருந்துவிடுமாம். இவ் வியல்பு,

"சாந்தம் எறிந்துழுத சாரற் சிறுதினைச்
சாந்தம் எறிந்த இதண்மிசைச்—சாந்தம்
கமழக் கிளிகடியும் காரிமயி லன்னாள்
இமிழக் கிளிஎழா ஆர்த்து"

என்று **திணைமாலை நூற்றைம்பது** என்னும் நூலில் அழகாக எடுத்துக் காட்டப்படுகின்றது.

சில வேளைகளில் யானை முதலான விலங்குகளும் இப்படி மயங்கி இருந்துவிடுவதுண்டு; உறங்கி விடுவதுமுண்டு. இவ் வுண்மை ஓர் **அகநானூற்றுச்** செய்யுளில் மிகவும் நன்ருக விளக்கிக் கூறப்படுகின்றது.

"ஒலியல் வார்மயிர் உளரினள் கொடிச்சி
பெருவரை மருங்கிற் குறிஞ்சி பாடக்

குரலுங் கொள்ளாது நிலையினும் பெயராது
படாஅப் பைங்கண் பாடுபெற் றொய்யென
மறம்புகல் மழகளிறு உறங்கும் ''

என்னும் அடிகளில் அவ் வருமையைக் காணலாம்.

'அசுணமா' என்று ஒரு சிற்றுயிர் உண்டு. அதனைப் பறவை என்றும், விலங்கு என்றும் சொல்லுவார்கள். 'இசையறி பறவை' என்றும் அதற்கொரு பெயருண்டு. இனிய இசைக்கு அது மிகவும் மகிழ்ந்து உருகி நிற்கும். அதனைப் பிடிக்க விரும்பும் மக்கள் மறைவாக ஓரிடத்தி லிருந்துகொண்டு இனிமையாக யாழ் இசைப்பார்கள். 'அசுணமா' அதுகேட்டு மனம் உருகி அருகில் வந்து தன்னை மறந்து நிற்கும். அப்போது அதனைப் பிடித்துக் கொள்வார்கள். இக் கருத்துக்கள் **அகநானூறு, நற்றிணை** முதலான நூல்களி லிருந்து விளங்குகின்றன.

முல்லை நிலங்களில் கோவலர்கள் தமது குழலிசையினாலேயே ஆனினங்களைத் தம்முடன் அழைத்துக்கொள்வதும் உண்டு. இது,

" ஒழுகிய கொன்றைத் தீங்குழல் முரற்சியர்
வழூஉச்சொற் கோவலர் தத்தம் இனநிரை
பொழுதொடு தோன்றிய கார்நனை வியன்புலத்தார் ''

என்று வருகின்ற **முல்லைக் கலித்** தொடர்களிலிருந்து புலப்படக்கூடும்.

சில வேளைகளில் யானை மதம் பிடித்துக் கைக்கு அடங்காமலிருப்பதும் உண்டு. அது, குத்துக்கோல் முதலிய கருவிகளுக்கும் அடங்குவதில்லை. அப்போது, பாகர்களுக்கும் ஊராருக்கும் கெடுதி நேரும். அவ்வளவு இடுக்கண்களி லிருந்து எல்லாரையும் பாது

காப்பதற்குப் பழைய தமிழ் மக்கள் இனிய யாழிசையை எழுப்பி, அந்த யானையின் மதத்தை அடக்கத் தெரிந்திருந்தார்கள். இவ் வுண்மை,

" காழ்வரை நில்லாக் கடுங்களிற் றொருத்தல்
யாழ்வரைத் தங்கி யாங்கு "

என்று **கலித்தொகையில்** வருகின்றது.

இனி, மக்களில் வழிப்பறி கள்வர், மிகவுங் கொடிய மனமுடையவர்கள். கொலைக்கும் அஞ்சாத வர்கள். அவர்கள், வழி நிலங்களில் தங்கியிருப்பது வழக்கம். அந் நிலத்துக்குப் 'பாலை நிலம்' என்று பெயர். அந் நிலத்தி லுள்ளவர்களுக்குப் பாலைப் பண்ணில் விருப்பம் மிகுதி. அது தெரிந்து, அவ் வழியே செல்லும் கூத்தர் முதலானவர்கள், பாலைப் பண்ணை மிக அழகாகப் பாடுவார்கள். அப்போது அங்கே மறைந்துகொண் டிருக்குங் கள்வர்கள் அந்த இசைக்கு மனமுருகி, உடல் குழைந்து, தம் கையி லிருக்கும் படைகளும் நழுவிக் கீழே விழத் தமது கொடுந் தொழிலை அடியோடு மறந்து, புது மனிதர்கள் போலவும் அருளொழுக்க முடையவர்கள் போலவும் கனிந்து நிற்பார்களாம். இதனால், அவ்வழியே வருகின்ற மற்ற வழிப்போக்கர்களும் ஒரு துன்பமு மில்லாமல் தாம் தாம் போக வேண்டிய ஊர்களுக்கு இன்பமாகப் போய்ச் சேர்வார்கள். இங்ஙனம், கொடு நெஞ்சக் கள்வரையும் இளகுவிப்பது இசை.

" ஆறலை கள்வர் படைவிட அருளின்
மாறுதலை பெயர்க்கும் மருவின் பாலை "

என்னும் அடிகளிலிருந்து இவ் வுண்மைகள் விளங்குகின்றன.

இங்ஙனமெல்லாம் சங்க காலத்து முன்னோர்கள் இசை கருவியாகப் பல காரியங்களை நிறைவேற்றி வந்தார்கள். கலை நுட்பங்களை வாழ்க்கையிற் பயன் படுத்தி வெற்றி பெறுவதென்பது எளிதில் இயலக் கூடியதாகுமா? அதற்கு அக் காலத்தில் இசைக்கலை எவ்வளவு விரிவாகவும் நுட்பமாகவும் ஆராய்ந்து பயி லப்பட்டு வந்திருக்க வேண்டும்! இக்காலத்தில் இசை யினால் காரியங்களை நிறைவேற்றுவ தென்பது அவ் வளவு எளிதாக இருக்கின்றதா? இதுபோன்ற திற மைகள் குறைந்த பின், இக் கால நாகரிகம், முன்னி னும் சிறந்ததாவது எப்படி? அக் கால இசைக் கலை யின் மேன்மையை நோக்கும்போது, இக் காலத்தின் குறைபாடு நன்றாக விளக்கமாகின்றது. ஊக்கமும் முறையான முற்போக்கும் உண்டாகும்பொருட்டுப் பழந்தமிழ் இசை வளத்தை இங்கே சிறிதெடுத்து ஆராயலாம்.

## 1. இசைத்தமிழ்

பண்டைக் காலத்தில் தமிழ் கற்பது என்றால், தமிழ் மொழியைக் கற்பது, தமிழ் இசையைக் கற்பது, தமிழ் நடிப்பைக் கற்பது என்பது பொருள். முத் தமிழைக் கற்ப தென்பது இதுவேயாம். இது சங்க காலத்தில் வழக்கமா யிருந்தது. இம் மூன்றையும் சேர்த்தே தமிழ் மக்கள் 'தமிழ்' என்றும், 'முத் தமிழ்' என்றும் சொல்லுவர்.

அகத்தியர் முத்தமிழ்க்கும் இலக்கணம் செய்தார் என்று கூறுதலின், அவர் இசை நாடகங்களும் அறிந் தவரென்றே தெரிகின்றது. தமிழாசிரியர்களிற் சிலர், இயல் இசை நாடகம் என்பவற்றில் ஏதாவதொன்றை

விரிவாக எடுத்து விளக்க நினைந்தால், அதனை மட்டும் நன்கு விளக்கி நூல் செய்வர். அவர் அப் பகுதியில் மற்ற இரண்டு தமிழ்களைப் பார்க்கிலும் மிகச் சிறப் பான பயிற்சி யுடையவராயு மிருப்பர். ஆயினும், மற்றத் தமிழ்கள் அவர்க்குத் தெரியாதன அல்ல. **ஆசிரியர் தொல்காப்பியருக்கு** முத்தமிழின் இயல்புந் தெரியு மென்றே தோன்றுகிறது. ஆயினும், அவர் இயற்றமிழ்க்குத் 'தொல்காப்பியம்' என்று ஓர் இலக் கண நூல் இயற்றினர். இசை நாடகங்களையும் அவர் அறிந்திருந்தா ரென்பதற்கு அவர் தொல்காப்பியத்தி லேயே அங்கங்குங் குறிப்புக்கள் சில இருக்கின்றன. இங்ஙனமே **சிகண்டியார்** என்பவர் 'இசைநுணுக்கம்' என்று இசைத் தமிழ்க்கு ஒரு நூலியற்றினர்; **செயிற் றியனர்** என்பவர் நாடகத் தமிழ்க்குச் 'செயிற்றியம்' என்றொரு நூல் செய்தார். இனி முத்தமிழுங் கலக்க நூல் செய்தாரும் பண்டைக் காலத்தில் இருந்தனர். அத்தகையோரில் **இளங்கோவடிகளும்** ஒருவர். அவர் இயற்றியருளிய 'சிலப்பதிகாரத்'தில் மூன்று தமிழ் களும் உள்ளன. அந்நூல் "பழுதற்ற முத்தமிழின் பாடல்" என்று **அடியார்க்கு நல்லா**ராற் போற்றப் பட்டிருக்கின்றது. உரையாசிரியரான அடியார்க்கு நல்லாரும் முத்தமி ழியல்புகளை நன்கறிந்தவரென்பது அவர் அவ் வியல்புகள் புலப்படுத்திச் சிலப்பதிகாரத் துக்கு விரிவாக எழுதியுள்ள அவரது உரையினல் நன்கு தெரிந்து கொள்ளலாம். இங்ஙனமெல்லாம் பண்டைக் காலத் தமிழ்ப் புலவரிற் பெரும்பாலோரும் இசை நாடகங்கள் அறிந்தவராகவே விளங்கினர். இக் காலத்தில் அங்ஙனமில்லை. இயற்றமிழ் ஒன்றைக் கூடச் செவ்வையாக அறிந்தவர் மிக அரியரா யிருக்

கின்றார். இக் கால நாகரிகம் எந்த வகையிற்றான் சிறப்புடையதாமோ தெரிந்திலது.

இனிப், பண்டைக் கால ஆசிரியர், இயற்றமிழினும் இசைத் தமிழை மேம்பாடாகவும், இயல் இசை என்னும் இரண்டினும் நாடகத் தமிழை இன்னும் மேம்பாடாகவும் மதித்துப் போற்றி வந்திருக்கின்றனர். இசையில், இயல் இசை என்னும் இரண்டும், நாடகத்தில் இயல் இசை நாடகம் என்னும் மூன்றும் பொருந்தியிருத்தலின், நாடகத் தமிழ் மிகவும் மதிக்கப்படுவதாயிற்று.

'இசை' என்பது, தன் இருமருங்கும் இருக்கும் இருவகைத் தமிழ்க்கும் பயன்படத் தக்கபடி நடுவணதாய் அமைந்திருக்கின்றது. இயற்றமிழிற் செய்யுட்கள் உண்டு. அவற்றைப் பாடும்போது இசையோடு கூட்டி இனிமையாகப் பாடுவது இயல்பு. ஆதலால் இயற்றமிழுக்கும் இசை பயன்படுகின்றது. நாடகத்துக்கு இசை வேண்டுமென்பது எல்லார்க்குந் தெரிந்ததேயாம்.

இயற்றமிழ்ச் செய்யுட்களை இசையாகப் பாடும் போது 'ஆளத்தி' முறையிற் பாடுவது வழக்கம் "இயற்பாக்களுடனே நிறத்தை இசைத்தலால் இசை" என்பர் **அடியார்க்கு நல்லார்**. பண்முறையிற் பாடுவதற்குத் தாள வொழுங்கும் வேண்டுமாதலால், அதற்கு இயற்றமிழ்ச் செய்யுட்கள் இசைந்து வருவது அருமை. தாளவொழுங்குக்கு ஏற்றபடி எழுத்தொழுங்கு, சீரொழுங்கு, அடியொழுங்கு, பொருளொழுங்கு முதலியன அமைந்திருந்தால், அப்போது அவற்றைப் பண்முறையிற் பாடுவது எளிது. அவ்வொழுங்குகள் அமைந்த தமிழே **இசைத் தமிழ்**

என்பது. இசைத் தமிழை ஆளத்தி முறையிலும் பாடலாம். இங்ஙனமே நாடகத் தமிழ்க்கும் 'ஆளத்தி', 'பண்' என்னும் இருவகை முறைகளும் உண்டு.

ஆளத்தி முறைக்கு 'இசை' என்றும், பண் முறைக்குப் 'பண்' என்றும் முன்பு பெயர்கள் இருந்தன.

"இசையுந் தோன்றும் இவற்றுள்ளே பண்பிறக்கும்"

என்றும்,

"பாவோ டணைதல் இசையென்றூர் ; பண்ணென்றூர்"

என்றும் வருகின்ற சிலப்பதிகார உரை மேற்கோட் பகுதிகள் இங்கே நினைவுகூர்தற்குரியன.

"ஓசை ஒலியெலாம் ஆனாய் நீயே"

என்று **அப்பரடிகள்** அருளிச் செய்த தேவாரத்தில், இசை, பண் என்னும் இவ் வொலி வகைகள் இரண்டும் முறையே ஓசையிலும் ஒலியிலும் அடங்கும். **ஒலி நுட்பம், ஒலியுருவம்** என்னும் ஒலி வகைகளே அவை. காரிய இயக்கத்துக்கு இவ் விரண்டின் நுட்பதிட்பங்களை அறிந்து இணைத்துப் பயன்படுத்துதல் இன்றியமையாததாகும். இசைக் கலையில் இவ் விரண்டும் பொதுப் பிரிவுகள். இவை ஒவ்வொன்றிலும், வகைகளும் அவற்றின் இயக்கங்களும் பலவாயிருக்கின்றன. இங்கே இரண்டொன்று குறித்துச் செல்லலாம்.

## 2. ஆளத்தி

இசை, பாவோடு அணையாத நிலையில் தென்னு தென என்று ஆளத்தி செய்யப்படுகின்றது; பாவோடு அணைந்த நிலையில் அப் பாவின் எழுத்தோசைகளோடு

இசைந்து ஆளத்தி செய்யப்படுகின்றது. பண்கள் பாடுகின்றபோதும், அப் பண்களின் இயல்புக்கேற்பத் தாள வொழுங்குகளோடு இடையிடையே ஆளத்தி நிகழும். அந் நிலையில் அதனைப் 'பண் ஆளத்தி' என்றே தனியாகப் பெயர் கூறுவர். இத்தகைய ஆளத்தியிசைகளுக்கு இடையிடையே பற்றுக்கோடாக நின்று உதவக்கூடிய எழுத்துக்கள், குற்றெழுத்துக்களில் அ, இ, உ, எ, ஒ, என்னும் ஐந்தும், நெட்டெழுத்துக்களில் ஆ, ஈ, ஊ, ஏ, ஓ என்னும் ஐந்தும், மெய்யெழுத்துக்களில் ம, ந, த என்னும் மூன்றுமாகும். முதலில் ஓசை எடுப்புக்கு மகரம் நன்றாக உதவும்; அதிலிருந்து எழும் இசை தூய்மையாகவும் ஆற்றலாகவும் முழுநலத்துடன் விளங்கும். இங்ஙனம் மகர ஒலியிலிருந்து இசைகூட்டி, மேற்கூறிய குற்றெழுத்து நெட்டெழுத்துக்களால் அதனை விரித்து நீட்டி, எழுவகை இசை நிலைகளில் அமைந்து இயங்கச் செய்வது ஆளத்தி யிசையின் இயல்பாகும். இவை,

"மகரத்தின் ஒற்றால் சுருதி விரவும்
பகருங் குறில்நெடில் பாரித்து - நிகரிலாத்
தென்னா தெனாவென்று பாடுவரேல் ஆளத்தி
மன்னுஇச் சொல்லின் வகை"

"குன்றாக் குறிலைந்தும் கோடா நெடிலைந்தும்
நின்றார்ந்த மந்நகரந் தவ்வொடு - நன்றாக
நீளத்தால் ஏழு நிதானத்தால் நின்றியங்க
ஆளத்தி யாமென் றறி"

என்று சிலப்பதிகார உரையில் வருகின்ற அடியார்க்கு நல்லார் உரை மேற்கோள்களி லிருந்தும், அவர் உரைக்கும் விளக்கங்களி லிருந்துந் தெரிகின்றன. குற்றெழுத்துக்களின் அடிப்படையி லிருந்து எழு

கின்ற இசையியக்கம் 'காட்டு ஆளத்தி' எனவும், அது தாளத்துக்கு ஏற்றபடி நிகழும் எனவும், நெட்டெழுத்துக்களின் அடிப்படையி லிருந்து எழுகின்ற இசையியக்கம் 'நிற ஆளத்தி' எனவும் இது கூத்துக்கு ஏற்றபடி நிகழும் எனவும் அவ் விளக்கங்களில் அடியார்க்கு நல்லார் எடுத்துக் காட்டுகிறார். கருத்துக்களை இசையினுற் புலப்படச் செய்யும் போக்குக் 'காட்டு ஆளத்தி' எனவும், பின்பு அக்கருத்துக்களின் படி வயமாக்கும் போக்கு 'நிற ஆளத்தி' எனவுங் கொள்ளப்படும்.

## 3. பண்

இனி, இசையானது பண் உருவங் கொள்ளும் போது, 'பண்கள்' எனவும் 'திறங்கள்' எனவும் பாகுபாடு கொள்ளப்படும். அவற்றுள் ஏழு நரம்புகளும் நிறைந்தது பண்; அதற்குக் குறைந்த நரம்புகள் அமைந்தது திறம். திறங்கள் பண்களுக்கு இனமானவை. ஒளியில் ஏழுவகையான நிறங்கள் இருந்து இயங்குதல் போல, ஒலிகளும் ஏழு வகைகளாக இயங்கி வெளியிற் காரியங்களை நிறைவேற்றுகின்றன. அவ் வெழுவகை ஒலிப் பிரிவுகளே இங்கு, ஏழு நரம்புகள் எனப்பட்டன. இவ் வொலிவகைகளுக்குப் பண்டைக் காலத்திலேயே தமிழ் முன்னோர் முறையே குரல், துத்தம், கைக்கிளை, உழை, இளி, விளரி, தாரம் என்று பெயர்களிட்டு வழங்கினர். இவ் வெழுவகை ஒலிகளையுங் குறிப்பதற்குத் தமிழ் மொழியிலுள்ள உயிரெழுத்துக்களில் ஆ, ஈ, ஊ, ஏ, ஐ, ஓ, ஔ என்னும் ஏழு நெட்டெழுத்துக்களையும் முன்னோர் பயன்படுத்தி வந்தார்கள். இப்போது

அவை 'ச ரி க ம ப த நி ச' எனப்படுகின்றன. இவ் வெழுவகை யொலிகளையும் பண்களுந் திறமுமென்று பல கிளைகளாக இயக்கும் வகைகளில் தமிழ் மக்கள் 11, 991 இசைவகைகளைக் கண்டுணர்ந்து பயின்று இன்புற்றிருக்கின்றன ரென்று தெரிகின்றது. அப் பெருமக்களின் இசைஞான விரிவுக்கும் நுட்ப திட் பத்துக்கும் இவ்வெண்ணிக்கை ஒன்றேகூடப் போது மான சான்றாகு மன்றோ!

மொழி என்பது கருத்தைப் பிறருக்கு விளக்கு வது மட்டுமன்று; அக் கருத்தோடு கூடிய உணர்ச் சியையும் அது நன்கு விளக்கக்கூடிய ஆற்றலுடைய தாக இருக்கவேண்டும். அப்போதுதான் மொழி அழகு பெறுகின்றது. இயற்றமி ழிலக்கணமான தொல்காப்பியத்தில் இந்நிலை 'சுவை' எனப்படும்; இசைத் தமிழில் 'குரல்' எனப்படும்; நாடகத் தமிழில் 'விறல்' எனப்படும். இவ் வுணர்ச்சியோடு கூடிய கருத்தைச் **சொல் வாயிலாக** வெளியில் இயக்கு வது **இயற்றமிழா**கும்; அதனை **இசைவாயிலாக** இயக்கு வது **இசைத்தமிழ்**; **நடிப்பு வாயிலாக** இயக்குவது **நாட கத்தமிழா**கும். இங்ஙனம் சொல்லும் இசையும் நடிப் பும் கலந்ததே 'தமிழ்' என்பது. தமிழ் என்னுங் கரு வியை வாழ்க்கையிற் பயன்படுத்தும்போது இம் முந்நிலைகளோடும் கருத்துக்களை இயக்கிப் பயன் படுத்தினால் காரியம் நன்கு நிறைவேறும். இசை வாயிலாகக் கருத்துக்களை இயக்குகிறோம் என்னும் எண்ணமே பாடகர் பெரும்பாலார்க்கு இக் காலத்தில் இல்லையே. 'மிடற்றுப் பாடல்' என்பதுபற்றி உரைக்குமிடத்தில், **சிலப்பதிகார அரும்பத உரையா சிரியர்,**

"மூலாதாரந் தொடங்கிய மூச்சைக் காலாற் கிளப்பிக் கருத்தால் இயக்கி ஒன்றெனத் தாக்கி இரண்டெனப் பகுத்துப் பண்ணீர்மைகளைப் பிறப்பிக்கப்பட்ட பாடலிய லுக்கு அமைந்த மிடற்றுப் பாடல்"

என்று விளக்குகின்றார். ஓசையோடு இசைந்து செல் லுங் **கருத்தின் இயக்கம்** இதில் நினைவாய் எடுத்துக் காட்டப்படுகின்றது. முதலிலெழுந்த ஓசை பின், இசையும் பண்ணு மென்று இரண்டு வகையாக இசைக்கப்படுவதனால், இவ்வுரையில் 'இரண்டெனப் பகுத்து' என்று வருகின்றது.

கருத்துக்கள் பொருத்தமாக இயங்குதற்கு இசை யைக் காலத்துக்கேற்றபடி கூட்டுதலும் முதன்மை யானது. இன்னின்ன காலத்துக்கு இன்னின்ன இசை பொருத்தமான தென்றும் முன்னோர் தெரிந்திருந்த னர். காலை நேரத்துக்கு **மருதப்பண்** உரியது. மாலை நேரத்துக்குச் **செவ்வழிப் பண்** உரியதாம். **மதுரைக் காஞ்சி** முதலிய நூல்களிலும் இது விளங்கும்.

## 4. இசைக் கருவிகள்

இனி, நம் முன்னோர், இசைகளைக் குரலால் இசைப்பதோடு, கருவிகளாலும் மீட்டினர். குரலாற் பாடுவதும் இசைக் கருவிகளால் இசைப்பதும் எல் லாம் ஒருங்கேயும் நிகழும்; குரலின் வழியே கருவிகள் நிகழும்; கருவிகளிலோ பல வகைகள் உண்டு. ஆயி னும், அவை ஒன்றின்வழியே ஒன்று மிக இசைவாக ஒத்து நிகழும். **சிலப்பதிகாரத்தில்** இந்த அழகு,

"குழல்வழி நின்றது யாழே; யாழ்வழித்
தண்ணுமை நின்றது தகவே; தண்ணுமைப்

பின்வழி நின்றது முழவே ; முழவொடு
கூடிநின் றிசைத்த தாமந் திரிகை ''

என்று **ஆசிரியர் இளங்கோவடிகளால்** நன்முக எடுத்துக் காட்டப்படுகின்றது.

இசைக்கருவிகளில் இசைபாடும்போது மட்டும் பயன்படக் கூடிய கருவிகள் ஒருவகை. இவை நாடகத்துக்கு உதவா. இனி, நாடகத்துக்கு மட்டும் பயன் படக் கூடிய கருவிகளும் ஒருவகையாகும். இவை இசைக்குத் தனியாகப் பயன்படுவதில்லை. இனி இசை, நாடகம் என்னும் இரண்டுக்கும் பயன்படக்கூடிய கருவிகள் ஒருவகை. இங்ஙனம் முன்னோர் இவ் விசைக் கருவிகளை மூன்று பிரிவில், வகை வகையாகப் பயன்படுத்தி வந்திருக்கிறார்கள். இதனால் அவர்கள் இவற்றை விரிவாகக் கையாண்டு மகிழ்ந்த உண்மை விளக்கமாகின்றது.

இனி, இக் கருவிகள், தோற் கருவிகள் துளைக் கருவிகள் நரப்புக் கருவிகள் முதலாகப் பல தொகுப் புக்களாகவும் பிரிக்கப்படும். மத்தளம் போன்றவை தோற் கருவிகள் ; புல்லாங்குழல் போன்றவை துளைக் கருவிகள். யாழ் போன்றவை நரப்புக் கருவிகளாகும். ஒவ்வொரு வகையிலும் எத்தனையோ பிரிவான வாத்தியங்கள் உண்டு.

தோற் கருவிகளில் மட்டும், பேரிகை, படகம், இடக்கை, உடுக்கை, மத்தளம், சல்லிகை, கரடிகை முதலாக முப்பதுக்கு மேற்பட்ட கருவிகளை முன் னோர் பயன்படுத்தி வந்திருக்கிறார்களென்று தெரி கிறது. இவை ஒவ்வொன்றும் ஒவ்வொரு வகையான ஒலியோடு கூடி யிருக்கும். மத்தளம் மத்தென்னும் ஓசை யுடையது. இத்தகைய ஒலி பழைய நூல்களில்

'தாழ்குரல்' எனப்படுகின்றது. கரடியின் ஓசைபோல இசைப்பது 'கரடிகை' எனப்பட்டது. இனி, இக் கருவிகளில் முதல்தரமான கருவிகள், இடைத்தர மான கருவிகள், கடைத் தரமான கருவிகள் என்னும் பாகுபாடுகளும் உண்டு.

இவைபோல்வனவெல்லாம் சிலப்பதிகாரம் முதலிய பழந்தமிழ் நூலுரைகளில் விரிவாக விளக்கப் பட்டிருக்கின்றன. ஆனால், முற்காலத்திலிருந்த எல்லா இசை நாடக நூல்களும் இப்போது இல்லை. பெரும் பாலன அடியார்க்குநல்லார் காலத்துக்கு முன்பே இறந்து போயின என்று தெரிகின்றது. அவையெல் லாம் முழுமையும் இருந்தால் அக் காலத்திய இசை வளம் எவ்வளவோ விரிவாகவும் விளக்கமாகவும் தெரியும். இப்போது கிடைக்கவில்லையே; என்ன செய்ய லாம்!

இனி, நரப்புக் கருவிகளிலும் யாழ்கள் முதலிய வற்றிற் பல பிரிவுகள் உண்டு. ஆதியாழ் என்று ஓர் யாழ் இருந்தது. அதற்கு ஆயிரத்துக்கு மேற்பட்ட நரம்புகள் இருந்தனவாம்.

துளைக் கருவிகளிலும் இங்ஙனமே பல வகைகள் கூறப்படுகின்றன. அவற்றிற் புல்லாங்குழல் என்பதே முதன்மையானது.

தோற்கருவிகள் துளைக்கருவிகள் நரப்புக் கருவிகள் என்று இங்கே சொல்லப்பட்ட எல்லா வகையான இசைக் கருவிகளிலும் அக் காலத்திற் புல்லாங்குழலே சிறந்தவொன்றாகப் போற்றப்பட்டு வந்தது.

> " குழல்வழி நின்றது யாழே ; யாழ்வழித்
> தண்ணுமை நின்றது தகவே "

என்றும்,

"குழலினிது யாழினிது என்ப"

என்றும் ஆசிரியர்கள் குழலையே முன்வைத்து ஓதியிருப்பதிலிருந்தும் மேல் உண்மை தெளியப்படுகின்றது.

பண்டைக் காலத்தில், பல இசைக் கருவிகளை ஒரே காலத்தில் ஒருவரே வாசிப்பதும் உண்டு. வாத்தியங்களுக்கு 'இயம்' என்பதும் பெயர். பல வாத்தியங்கள் 'பல் லியம்' எனப்படும். மிகப் பல வாத்தியங்களை வாசிக்கத் தெரிந்தமைபற்றி, **நெடும் பல்லியத்தனு** ரென்று ஒரு புலவர் பெயர் பெற்றிருக்கிறார்.

## 5. இசைவாணர்

குரலாற் பாடுவோரும் கருவிகளாற் பாடுவோருமாகத் தமிழ் நாட்டில் இங்ஙனம் பலர் இருந்தனர். இசைக்கென்றே தமிழ் நாட்டில் ஒரு வகைச் சாதியார் இருந்திருக்கின்றனர். அவர்களைப் **பாணர்** என்று சொல்லுவார்கள். அவர்கள், வழிவழியாக இசைக் குடியினர். அவர்களிற் சிறிய கருவிகளை இசைப்பவர்கள் 'சிறுபாணர்' என்றும், பெரிய கருவிகளை இசைப்பவர்கள் 'பெரும்பாணர்' என்றுங் கூறப்படுவார்கள். **பத்துப்பாட்டை**ச் சேர்ந்த **சிறுபாணாற்றுப்படை, பெரும்பாணாற்றுப்படை** என்னும் நூல்கள், அவர்கள் மேல் இயற்றப்பட்ட **ஆற்றுப்படை நூல்க**ளேயாம்.

இப் பாணர் முதலியோர் தம்முடைய இசைக் கருவிகளை எடுத்துக்கொண்டு ஊர்களையும் நாடுகளையுங் கடந்துபோய் அங்கங்கும் விளங்கியிருந்த பெருமக்களையும் அரசர்களையும் மற்றத் தகுதியாளர்களையும் மிகுதியாக மகிழ்வித்து வந்தார்கள். இசைக் கலையை இவர்கள், நாடு முழுமையும் பரப்ப நல்ல

தொண்டுகள செய்திருக்கிறார்கள். செல்வர்களிட மிருந்து இவர்களுக்குச் சிறந்த பொற்பூக்கள் பொன் னுடைகள் முதலியன பரிசு கிடைக்கும். ஓர் ஊரி லிருந்து மற்றோர் ஊருக்குப் போகும்போது, இவர்கள், பெரியவும் சிறியவுமான பல வகை இசைக்கருவி களைக் கொத்தாகத் தம் தோள்களில் தூக்கிக்கொண்டு, பலர் ஒன்று சேர்ந்து கூட்டங் கூட்டமாகப் போவார் கள். பலா மரங்களில் சிறியவும் பெரியவுமான பலாக் காய்கள் இப்புறமும் அப்புறமும் கொத்துக் கொத்தா கத் தொங்குவதுபோல இசைக்கருவிகள் இவர்கள் தோள்களில் தொங்கிக்கொண்டிருக்கும் என்று **மலைபடுகடாம்** என்னும் நூலில் இதைப்பற்றி ஓர் இன்பமான உவமை வருகின்றது.

> "கார்கோட் பலவின் காய்த்துணர் கடுப்ப
> நேர்சீர் சுருக்கிக் காய கலப்பையிர்"

என்பன அவ் வுவமை வரும் வரிகள். பாணர்களோடு பெண்களும் உடன் செல்வதுண்டு. அவர்களும் ஆடல் பாடல்களில் வல்லவர்கள். அவர்களைப் 'பாடி னிகள்' என்றும், 'விறலியர்' என்றுங் கூறுவார்கள்.

இங்ஙன மெல்லாம் இசைநலம் பண்டைக் காலத் தில் மிகவுஞ் சிறந்திருந்த தென்றே தெரிகின்றது. கண்ணகனார், கண்ணனாகனார், கேசவனார், நந்நா கனார், நல்லச்சுதனார், நன்னாகனார், நாகனார், பித்தா மத்தர், பெட்டகனார், மருத்துவ னல்லச்சுதனார் முத லிய பெருமக்கள் பலரும் சங்க காலத்தில் இசை யையே சிறப்பாகப் பயின்று விளங்கியவர்கள். **பரிபாடல்** என்னும் நூலுக்கு இவர்கள் இசை வகுத்த வர்களென்று அந் நூலிலிருந்து தெரிகின்றது.

## ௬௰. நாடகம்

நாடகத்தைப் பற்றிய சில கருத்துக்களை 'இசை' என்னுங் கட்டுரையிலுங் காணலாம்.

'நாடகம்' என்னும் சொல்லுக்கு 'விளையாட்டு' என்பது பொருள். அதாவது **ஒழுங்கான விளையாட்டு**. இதனை 'ஆட்டம்' என்றும் உலகம் வழங்குகின்றது. தமிழ்ச்சுவை செறிந்த **திருவாசகம்** என்னும் அருள் நூலில்,

"நாடகத்தால் உன்னடியார்போல் நடித்து"

என்று **மணிவாசகப் பெருமான்** ஒரு தொடர் அருளிச் செய்திருக்கிறார். இதில் 'நாடகம்' என்னும் சொல் 'விளையாட்டு' என்னும் பொருளில் வந்திருக்கின்றது. 'நடித்தல்' என்பதே அதன் செயல் என்பதும் அத் தொடரி லிருந்தே தெரிகின்றது.

நடிப்பில் இரண்டு வகைகள் உண்டு. ஒன்று கருத்துக்களை நடித்தல். இன்னொன்று கதைகளை நடித்தல். கருத்துக்களை நடித்துக் காட்டுவதற்கு 'நாட்டியம்' என்றும், கதைகளை நடித்துக் காட்டுவதற்கு 'நாடகம்' என்றும் பெயர் சொல்லுவதுண்டு. சங்க காலத்தில் இவ் விரண்டுமே 'கூத்து' என்னும் பெயராலும் வழங்கி வந்தது.

நாடகத்தில் நடிப்புச் சுவையோடு கதைச் சுவையும் அடங்கியிருப்பதனால், எல்லார்க்கும் அது மிக்க இன்பத்தைத் தரும். ஆயினும் அந் நாடகத்திலும் நடிப்புத்தான் உயிர். நடிப்பை நாடகத்திலிருந்து பிரித்துவிட்டால், அப்போது அதற்கு 'நாடகம்'

என்னும் பெயரே பொருந்தாமற் போய்விடும். ஆத லால் நாடகத்தைப் பற்றிப் பேசுகின்ற பழைய தமிழ் நூல்கள் முதன்மையாக நடிப்பைப்பற்றியே மிகு தியாகப் பேசியிருக்கின்றன.

மேலும், பண்டைக் காலந் தொட்டே பழந்தமிழ் நூலுரைகளில் வழங்கி வருகின்ற 'நடம்' 'நட்டம்' 'நடனம்' 'நடிப்பு' 'ஆடல்' 'ஆட்டம்' 'ஆட்டு' 'கூத்து' 'தாண்டவம்' 'சொக்கம்' 'கரணம்' 'குறிப்பு' 'விறல்' 'அவிநயம்' முதலிய பல சொற் கள் கதை தழுவி வராத கூத்தின் பகுதிகளையே பெரி தும் உணர்த்துவனவா யிருக்கின்றன. 'நாடகம்' என்னுஞ் சொல்கூட ஒரோஒருகால் முதன்மை பற்றி நாட்டியத்தை உணர்த்தி நிற்றலும் உண்டு.

"நாடக மடந்தையர் ஆடு அரங்கு"

என்னுஞ் சிலப்பதிகாரத் தொடரில், 'நாடகமடந்தை யர்' என்பது நாட்டிய மடந்தையரே யாகும். 'அரங்கு' 'ஆடுதல்' என்று வருவனவெல்லாமும் நாட்டியக் கருத்தின்மேல் வருவனவேயாம். மூன்று தமிழ்களுள் ஒன்ருகக் கூறப்படும் 'நாடகத் தமிழ்' என்பதும் நாட்டியத் தமிழே. **சிலப்பதிகாரத்தின்** அரங் கேற்று காதையில் மாதவி அரங்கேறி ஆடினளென்று கூறப்பட்டது நாட்டியக் கலை பற்றியதே என்பது, அக் காதையின் இறுதியில் **ஆசிரியர் இளங்கோ வடிகளே,**

"நாட்டிய நன்னூல் நன்கு கடைப்பிடித்துக்
காட்டின ளாதலின்"

என்று எடுத்துக் காட்டுதலால் விளங்குகின்றது. மேலும், அவ் வரங்கேற்று காதை முழுவதும், அதன்

உரை முழுவதும், கருத்துப் பற்றி நடிக்கும் நடிப்பின் விளக்கங்களே பெரிதும் விளக்கப்பட்டிருக்கின்றன. ஆதலால், நாடகம் என்பதில் முதன்மையானது, நடிப்பு நிகழ்ச்சியேயாம் என்பது இவற்ருலெல்லாம் நன்கு விளங்குகின்றது.

## 1. நடிப்பின் பயன்

உலகத்தில் இந் நடிப்புக் கல்வியே முதலில் தோன்றியது என்று சொல்லலாம். எந்தக் காரியத்தையும் ஒருவரைப் பார்த்து ஒருவர் செய்யும்போது, அங்கே நடிப்புத் தோன்றுகின்றது. மனத்தில் தோன்றுகின்ற கருத்துக்களை மொழியினுல் தெரிவிக்க முடியாமலிருந்த காலம் மிகவும் ப்ழமையானது ; அந்தக் காலத்தில் மனிதர்களுக்குப் பேசத் தெரியாமலிருந்தது. முகக் குறிப்புக்கள், கை அசைவுகள் முதலிய சைகைகளினுலேயே ஒருவருக்கொருவர் தம் கருத்துக்களை அப்போது தெரிவித்துக்கொண்டார்கள். அவையெல்லாம் நடிப்பு என்பதில் அடங்கும்.

பின்பு, மொழி பேசத் தெரிந்துகொண்ட காலத்திலும் அக் கை அசைவுகள் முகக் குறிப்புக்கள் முதலிய நடிப்புக்கள் நிகழாமலில்லை. நிகழ்ந்துகொண்டுதானிருக்கின்றன. ஒரு பயனுமில்லாமல் நடிப்புக்கள் இப்படி எப்போதும் நிகழுமா? நினைத்துப்பார்த்தால் நடிப்பினுலேதான் நிறையப் பயனிருக்கின்றதென்று தெரிகின்றது.

நம் அன்பார்ந்த நண்பரொருவர் தமது கருத்தைத் தெரிவித்து நமக்கு ஒரு கடிதம் எழுதினுரென்று வைத்துக்கொள்வோம். கடிதத்தின் வாயிலாக நாம் அவர் கருத்தைத் தெரிந்துகொண்டோம். ஆனுல்

நமக்கு அப்போது உண்டான இன்பத்தைவிட, அந் நண்பரே நேரில் வந்து அக் கருத்தை அதற்கேற்ற முகக் குறிப்புக்கள் முதலியவற்றுடன் தெரிவிக்கும் போது எவ்வளவு மிகுதியான இன்பம் உண்டாகின் றது! காரணம் என்ன? அவர் உள்ளக் கருத்துக் கேற்றபடி அவர் கண்களிலும் இதழ்களிலும் புருவங் களிலும் நெற்றியிலு மெல்லாம் தோன்றுகின்ற பல வகையான முகக் குறிப்புக்களும் பிற கை யசைவுகள் முதலியவைகளுமே யல்லவா?

இனி, இன்னொரு நிகழ்ச்சியையும் நாம் நினைவு கூரலாம். நல்ல கதை நூல் ஒன்றை எடுத்து அதி லுள்ள கதையைப் படிப்பதாக வைத்துக் கொள் வோம். அப்போது நமக்குக் கதை இன்னதென்று தெரிந்துவிடும். கதையின் சுவையை அறிந்தும் நமது மனம் இன்புறக்கூடும். ஆயினும், அக் கதை யைப் போலவே நல்ல முறையில் ஒரு நாடகம் நடப் பதை நாம் பார்க்க நேர்ந்தால் நமக்கு இன்னும் எவ் வளவு மிகுதியான மகிழ்ச்சி உண்டாகும். நேரிற் காணும் நடிப்பன்றோ நமக்கு அத்தனை மிகுதியான மகிழ்ச்சியைத் தருவதாயிற்று.

**சிலப்பதிகாரம்** தமிழ் மொழியில் இப்பொழுது முத் தமிழ்க் காப்பியமாக விளங்குகின்றது. அதன் ஆசிரிய ரான இளங்கோவடிகள், ஓரிடத்தில் சிவபிரான் நடிப்பைப்பற்றிக் கூறுகின்றார். அதனை அவர்,

"திருநிலைச் சேவடிச் சிலம்புவாய் புலம்பவும்,
பரிதரு செங்கையிற் படுபறை ஆர்ப்பவும்
செங்கண் ஆயிரம் திருக்குறிப் பருளவும்
செஞ்சடை சென்று திசைமுகம் அலம்பவும்......"

அப் பெருமான் நடமாடினுன் என்று இந் நடிப்புத் திறத்தைப்பற்றி மிக ஆற்றலாகவும் அழகாகவும் விளக்கிச்செல்கின்ருர். 'கருத்துக்கேற்றபடி ஒழுங்காக அடிபெயர்ப்பதனுல் திருவடிச் சிலம்பு கல், கல்என்று ஒலிக்கிறது. கையில் உள்ள தமருகம் என்னும் மேளம் தக்க ஒலி ஒழுங்குகளை உண்டாக்குகின்றது. அவர் கண்கள் நொடிக்கு நொடி ஆயிரம் ஆயிரம் திருக்குறிப்புக்களை அள்ளி அள்ளி வீசுகின்றன. செஞ்சடை அவிழ்ந்து திசை முழுமையுந் தடவி வருகின்றது.' ஆ! பெருமான் திருநடனம் என்ன தாராளமாக, பரவலாக, கண்ணியமாக, காரிய ஒழுங்காக நடைபெறுகின்றது! அதன் மாட்சிமையைக் காணுங் கண்களல்லவோ கண்கள்! உள்ளக் கருத்துக்கேற்ற முகக் குறிப்புக்களும் பிறவுமான நடிப்புக்கள் இதன் கண் எவ்வளவு நன்ருகக் காட்டப்படுகின்றன! இந் நடிப்புக்களைக் காணும்போது உள்ளக் கிளர்ச்சியும் இன்பமும் ஒருங்கு எழாமலிருக்குமோ!

சிவபெருமானது இந் நடனத்தைக் **கூத்தச் சாக்கையன்** என்னும் ஒரு கூத்தன் அப் பெருமானைப் போலவே கோலம் புனைந்துகொண்டு இயல்பு வழுவாமல் நடித்துக் காட்டச், சேரன் செங்குட்டுவன் என்னும் மன்னர்மன்னன் தன் தேவியுடன் அந் நடிப்பின் திறத்தைக் கண்டு மிகவும் மகிழ்ந்தனன் என்று சிலப்பதிகாரத்தில் இச் செய்தி தொடர்ந்து செல்கின்றது. இதனுல் நடிப்புத் திறத்தில் தக்க இன்பப்பயன் இருக்கின்றதென்று நன்ருகத் தெரிகின்றதன்ருே!

இந்த எடுத்துக் காட்டுக்களையெல்லாம் வைத்து நோக்கும்போது, மொழிகொண்டு பேசத் தெரிந்து கொண்ட காலத்திலும் நடிப்பு இருக்கவேண்

டியதன் கட்டாயம் நன்கு வெளியாகின்றது. மிகப் பழைய காலத்தி லிருந்தே இங்ஙனம் நடிப்புத், தொடர்ந்து வர நேரிட்டது. அறிவும் பழக்கமும் ஆராய்ச்சியும் முதிர முதிர இந் நடிப்புக்கலை சிறந்த முறையில் வளர்ந்து மேலோங்கலாயிற்று. வாழ்க்கை யில் இயல்பாகவே பிணிப்புற்று நின்று இவ்வளவு இன்பந் தருகின்ற கலையை இழந்துவிட யாருக்குத் தான் மனம் வரும்! தமிழின் ஒரு பிரிவாகவே வைத்து அறிஞர்கள் இதனை ஆராயலாயினர். அத னால், சிறந்த இலக்கண இலக்கியங்களெல்லாம் தோன் றின ; ஏராளமாகத் தோன்றின.

ஆனால், எல்லாக் கலைகட்கும் தமிழில் நூல்கள் மறைந்துபோனதுபோல, இந் நாடகக் கலைநூல்க ளும் நெடுநாட்களுக்கு முன்னேயே இறந்துபோயின; உரையாசிரியர் **அடியார்க்கு நல்லாரும்** தங் காலத்துக்கு முன்னேயே இந் நூல்கள் இறந்துபோனமையை நினைந்து உள்ளம் உருகியிருக்கின்றார். நாடகத் தமி ழைப் பற்றிய குறிப்புக்கள் சிலப்பதிகாரத்திலும் அத னுரையிலும் இப்போது சிலவே நமக்குக் கிடைக்கின் றன. அவற்றைக் கொண்டு பார்த்தாலும், சங்ககாலத் தில் இந் நாடகக் கலை எவ்வளவோ விரிவாக ஆராயப் பட்டு வந்ததென்பது நன்றாகப் புலனாகின்றது.

தமிழ் மக்கள் இயற்கையைக் கூர்ந்து அறியும் இயல்புள்ளவர்கள். அதனால் அவர்கள், கலையுணர்வில் மிக்கவ ரானார்கள். தமிழ் மக்களின் இத் தனித் திறத் தினாலேயே நாடகக் கலை வரவர இவ்வளவு விரிவுக்கு உயர்ந்தோங்க லாயிற்று. நாடகக் கலையைத் தமிழ் மக்கள் மற்றவர்களிட மிருந்து கற்றுக் கொண்டவ ரல்லர். இவர்கள் தம் அறிவு உணர்வின் பழக்கங்களி

ளுலேயே இதனைக் கண்டுணர்ந்து, பெருக்கி, இன்ப மார்ந்தனர். இறைவனே இவர்களுக்குக் கூத்தப்பெரு மாளுய் விளங்குகின்ருர். பேசத் தெரியாத முதற் காலத்திலேயே இந் நடிப்புக் கல்வி துவங்கினமை யால், இதுவே முதலில் தோன்றிய கல்வியா யிருக்கின் றது.

நாடகக் கல்வி மிகவும் நுட்பமானது. கருத்துக் களை நடிப்புக்களால் இயக்கிப் புலப்படுத்துவது. அச் செயல் எவ்வளவு அருமையானது! அதற்கு எவ்வ ளவோ நுண்ணறிவும் மிக்க பழக்கமும் வேண்டும். மனத் தூய்மையும் வேண்டும். சிலப்பதிகாரம் என் னும் அரிய நூலிஞல், மாதவி என்னும் நாடக மாது, அறுபத்து நான்கு கலைகளிலும் வல்லவள் என்றும், அவள் ஐந்தாண்டிலிருந்தே பழகிவந்திருக்கிருள் என் றும், தூய மனமுடையவள் என்றுந் தெரிகின்றது. அவ்வளவு அறிவும் பிறவும் அக் கலைக்குக் கட்டாய மாகும். ஆதலால், நடிப்புக் கலை மிகவும் பெருமையா கப் பாராட்டுதற்குரியது. நடிப்புக்கு அமையும் நாடக அரங்கும் மிகவும் தூய்மையான இடத்தில் அமைய வேண்டு மென்பது இலக்கணம். இங்ஙனமெல்லாம் பெருமைப்படுவதாயின், அத்தகைய நாட்டியத் திறங்களைக் காண்பது ஒரு நற்பேறேயாம்.

"பண்கனியப் பருகிப் பயன்நாடகம்,
கண்கனியக் கவர்ந்துண்டு"

என்னுஞ் **சிந்தாமணிச்** செய்யுளில், 'பயன் நாடகம்' எனவும், 'கண்கனியக் கவர்ந்துண்டு' எனவும் வரு வது எவ்வளவு மதிக்கத்தக்கதாயிருக்கின்றது!

பண்டைக்காலத்தில் இக் கலை எவ்வளவு விரிவாகப் பயிலப்பட்டு வந்ததென்பதற்கு இங்கே சில எடுத்துக்காட்டுகள் காட்டலாம்.

## 2. நாடகக் கலை

வீரம், அச்சம், இழிவு, வியப்பு, இன்பம், துன்பம், நகை, நடுவு நிலை, வெகுளி என்னும் **ஒன்பது சுவைகள்** நடிப்புக் குரியவை. நாடக மாந்தர் இவற்றை நன்கு புலப்படுத்தி நடிக்க வேண்டும். நடிப்புக்களை இன்னும் விரிவாகப் பாகுபடுத்தும் போது, அவை **இருபத்து நான்கு வகை**யாகப் பகுத்துக் காட்டப்படுகின்றன. அவற்றில், சோம்பலுக் குரிய நடிப்பு, பெருமைக் குரிய நடிப்பு, வெட்கத்துக் குரிய நடிப்பு, மழையில் நனைவதற்குரிய நடிப்பு, பனியில் தலைப்படுவதற்குரிய நடிப்பு, வெயிலிற் செல்வதற்குரிய நடிப்பு முதலியனவெல்லாம் கொள்ளப்படும். இவைகளுக்கு இலக்கணம் இன்னின்னவென்பதும், அவை கூறும் நூற்பாக்கள் இன்னின்னவென்பதும் சிலப்பதிகார உரையில் வந்திருக்கின்றன. வெட்கமுற்றது போல நடிக்க வேண்டுமானல் தலை குனிதலும், மறைவான செய்கைக் குறியும், முகவாட்டமும், உடம்பு கோணலும், மழுங்கிய ஒளியும், கீழ்க் கண் பார்வையுங் கொண்டு நடிக்கவேண்டுமென்பது இலக்கணம். இதற்கு நூற்பா,

> "நாண முற்ருேன் அவிநயம் நாடின்
> இறைஞ்சிய தலையும் மறைந்த செய்கையும்
> வாடிய முகமும் கோடிய உடம்பும்

கெட்ட ஒளியும் கீழ்க்கண் நோக்கமும்
ஒட்டின ரென்ப உணர்ந்திசி னோரே"

என்பது. இங்ஙனமே ஒவ்வொன்றுக்கும் இலக்கணங்களும் நூற்பாக்களும் உண்டு. **இக்காலத்தில் படக்காட்சிகளில் நடிப்பவர்கள்** இத்தகைய தமிழ் நூற்குறிப்புக்களிலும் கருத்திருத்துவது நல்லது.

இனி, நடிப்புக்களை நடித்துக் காட்டும்போது, அவற்றிற்கு ஏற்பத் தழுவக்கூடிய சொற்கள், பாட்டுக்கள், வாத்தியங்கள், குறிப்புக்கள், அசைவுகள் முதலியனவும் இன்னின்ன வகையாக இருக்கவேண்டும் என்னும் முறைமைகள் உண்டு. ஒன்று காட்டலாம்.

கை அசைவுகளைப் பற்றிக் கூறும்போது, மிகவும் வியத்தற்குரிய பல பாகுபாடுகள் காட்டப்படுகின்றன. கை நடிப்புக்களில், ஒரு கையினுல் அசைத்துக் காட்டுதல், இரண்டு கைகளால் அசைத்துக் காட்டுதல் என்னும் பிரிவுகள் உண்டு.

ஒரு கையினுல் நடித்துக் காட்டும் நடிப்புக்கள் **முப்பத்துமூன்று வகை**யாகக் காட்டப்படுகின்றன. அவைகளுக்கெல்லாம் தனித் தனியாகப் பெயர்கள் உண்டு. பதாகை, இளம்பிறை, விற்பிடி, குடங்கை, மகரமுகம், வலம்புரி என்பன அவற்றிற் சிலபெயர்கள். இவை ஒவ்வொன்றுக்கும் ஆசிரியர்கள் விளக்கமான இலக்கணங்கள் வரையறுத்திருக்கிறூர்கள். இந் நடிப்புக்களில், கைவிரல்கள் முடங்கியும், நிமிர்ந்தும், குவிந்தும், விரிந்தும், தொட்டும், விட்டும் பற்பல வகையாக இயக்கிக் காட்டப்படுகின்றன. எடுத்துக் காட்டாகப், 'பதாகை' என்னுங் கை நடிப்புக்கு, நான்கு

விரலுந் தம்முள் ஒட்டி நிமிர்ந்து நிற்கப் பெரு விரல் மட்டும் உட்பக்கமாக வளைந்திருக்க வேண்டும்.

> "பதாகை என்பது பகருங் காலைப்
> பெருவிரல் குஞ்சித்து அலாவிரல் நான்கும்
> மருவி நிமிரும் மரபிற் றென்ப"

என்று அதற்கு ஒரு நூற்பாவும் உண்டு. இப்படியே ஒவ்வொரு பகுதிக்கும் இலக்கணங்களும் நூற்பாக் களும் முன்னோர் அமைத்திருக்கின்றனர்.

இனி இரண்டு கைகளாலும் அசைத்துக் காட்டும் நடிப்புக்கள், அஞ்சலி, புட்பாஞ்சலி முதலாக அபய அத்தம் வருத்தமானம் ஈருகப் பதினைந்து வகைகள் குறிப்பிடப்படுகின்றன. முன், ஒற்றைக் கை நடிப்பில் பதாகைக் கைக்குச் சொன்ன படி இரண்டு கைகளையும் நிறுத்தி, அவ்விரண்டின் உட் பக்கங்கள் ஒன்ருகப் பொருந்தும்படி இணைத் துக் காட்டினுல் அப்போது அந் நடிப்பு 'அஞ்சலி' எனப்படும்.

> "அஞ்சலி என்பது அறிவுறக் கிளப்பின்
> எஞ்ச லின்றி இருகையும் பதாகையாய்
> வந்துஅகம் பொருந்தும் மாட்சித் தென்றனர்
> அந்தமில் காட்சி அறிந்திசி னேரே"

என்பது அதன் இலக்கணத்துக்குரிய நூற்பா.

இனி, இங்ஙனங் கை முதலியவற்ருல் கருத்துக் களை நடித்துக் காட்டுதலில், ஆசிரியன்மார், நடிப்பவர் நோக்கத்தை மூவகைப்படுத்திக் கூறுகின்றனர். ஒன்று அழகுக்காக நடிப்பது; மற்ருென்று கருத்துக் கள் தெரிவதற்காக மட்டும் நடிப்பது; இன்னென்று அக் கருத்துக்கள் உலகத்திற் செயற்படுவதற்காக

நடிப்பது. இவை முறையே எழிற்கை, பொருட்கை, தொழிற்கை என்னும் பகுதிகளில் வரும்.

"அவைதாம்,
எழிற்கை அழகே; தொழிற்கை தொழிலே;
பொருட்கை கவியிற் பொருளா கும்மே"

என்பது இலக்கணம்.

இதனால் நாடகத்தின் நோக்கத்தை நாம் மூவகையாகக் கொள்ளலாம். பார்ப்பவர்களின் மகிழ்ச்சிக்காக மட்டும் நடிப்பது ஒரு வகை. கருத்தறிந்து கொள்ளும்படி நடிப்பது ஒரு வகை. கருத்துக்கள் உலகத்திற் செயற்பட்டு உருவாகும்படி நடிப்பது ஒரு வகை. நடிப்பின் வாயிலாகவே உலகத்திற் பல காரியங்களை நிகழச் செய்வது ஓர் அரும் பெருஞ் செயலாகும். அம்பலவாணர் என்னுங் கூத்தப்பிரான், வாய் பேசாமல் நடிப்பின் வாயிலாகவே காரியஞ் செய்பவராவர். சங்கநூல்களுள் ஒன்றான **கலித்தொகை** என்பது இவ் வுண்மையை அழகாக வெளியிடுகின்றது.

"கூறுமற் குறித்ததன்மேற் செல்லுங் கடுங்கூளி
மாறுப்போர் மணிமிடற் றெண்கையாய் கேளினி
படுமுறை பலவியம்பப் பல்லுருவம் பெயர்த்துநீ
கொடுகொட்டி யாடுங்கால்"

என்னும் அடிகள் அக் கருத்துக்களை அறிவிப்பனவாம். **சிலப்பதிகாரத்தில்** கூத்தச் சாக்கையன் ஆடியதாகக் கூறப்படுகின்ற கொடுகொட்டிக் கூத்தும் இத்தகையதொன்றேயாம்.

## 3. நாடக மாந்தர்

நாடகங்கள் நடிப்பதற்கென்றே தமிழ் நாட்டில் தனித்த சாதியாரும் இருந்தனர். கூத்தர், பொருநர்

என்பவர் அவ் வகையைச் சேர்ந்தவர். 'கூத்தர்' என்பதற்கு நடிப்பவர் என்பது பொருள். 'பொருநர்' என்பதற்கு, 'ஒப்பக் கோலம் புனைவோர்' என்பது பொருள். சிவபெருமானைப் போலவே கோலம் புனைந்துகொண்டால் மட்டுமே அவனைப் போலக் கொடுகொட்டிக் கூத்து ஆடுவது சிறக்கும். பத்துப் பாட்டு என்னும் சங்கநூல் தொகுதியைச் சேர்ந்த **கூத்தராற்றுப்படை** (மலைபடுகடாம்) என்பதும், **பொருநராற்றுப்படை** என்பதும் இக் கூத்தர் பொருநரைப் பற்றியனவாகும்.

மகளிரில் நாடகம் நடிப்பவர் 'விறலியர்' எனப் படுவர். 'விறல்' என்பது உள்ளக் கருத்தைப் புறத்தே புலப்படுத்தும் திறம். இவ் விறலியர் தம் கணவரோடு கூடியும் தனித்தும் சென்று நாட்டில் அங்கங்கும் உள்ள கலையன்பர்களுக்குத் தம் திறமையைப் புலப்படுத்தி மகிழ்வித்துப் பரிசில் பெறுவதுண்டு. **புறநானூற்றில்** **விறலியாற்றுப்படை**யைப் பற்றிய பாட்டுக்கள் வந்திருக்கின்றன.

இவற்றையெல்லாங் கருதும்போது, நாடகம் என்பது பண்டைக்காலத்தில் மிகவும் விரிவாகவும் நுட்பமாகவும் ஆராயப்பட்டு வந்ததென்பதும் பிறவும் நன்கு விளங்குகின்றன. இவ் வரிய கலையை உயர்வான முறையில் இயக்கிக்கொண்டு நாடு நலம் பெறுவது இன்றியமையாதது.

# கO. கடவுள் கொள்கை

சற்று உற்றுநோக்கும்போது உலக வாழ்க்கை இரண்டு வகையாக நடைபெறுவது நன்ருகத் தெரிகின்றது. **ஆசிரியர் தெய்வத் திருவள்ளுவர்** தமது அரிய தமிழ் மறையாகிய **திருக்குறளில்** இவ் வுண்மையைக் குறித்திருக்கின்ருர்.

> " இருவேறு உலகத் தியற்கை ; திருவேறு
> தெள்ளிய ராதலும் வேறு."

என்பது அவர் அருளிச்செய்த திருக்குறள். சிலர் செல்வமே நோக்கமாக வாழ்க்கை நடத்துகின்றன ரென்றும், சிலர் தெளிவே நோக்கமாக வாழ்க்கை நடத்துகின்றன ரென்றும் அவர் பிரித்துக் காட்டுகின்ருர். தெளிவு என்பது உணர்வின் தெளிவு. ஆழ்ந்த நல்ல நினைவு உள்ளவர்களுக்கே இந்த உணர்வுத் தெளிவு உண்டாகும்.

பழைய சங்க காலத்தில் தமிழ் மக்களிற் பெரும்பாலார் தெளிவுபெறும் முறையிலேயே வாழ்க்கை நடத்தி யிருக்கின்றனர். அவர்களுக்குப் பொருள் முதன்மையில்லை. 'பாரி' என்று ஒரு வள்ளல் முன்பு மிக்க புகழுடன் விளங்கி யிருந்தான். அவனுக்கு முந்நூறு ஊர்கள் உரிமையா யிருந்தன. 'பறம்புமலை' என்னும் ஒரு வளமான மலையும் அவனுக்கு உண்டு. இவ்வளவையும் அவன் தன்னிடம் வருகின்ற ஏழை எளியவர்களுக்கும், அறிஞர்கள் முதலியவர்களுக்கும் பரிசிலாக வழங்கிவிட்டான். பொருளே நோக்கமாக வாழ்பவனுனல் பாரி இவ்வளவு மிகுதியாகப் பொருள்களை வழங்கியிருக்கமாட்டான். இப்படியே அந்தக்

காலத்தில் உள்ளம் தெளிவு பெறுவதிலேயே கருத்தாகப் பலரும் வாழ்ந்திருந்தனர்.

அந்தத் தெளிவு முதல்முதல் மக்களுக்கு எப்படி வந்தது என்பதை எண்ணிப் பார்ப்பது நல்லது.

## 1. கடவுள் இருப்பு

பழைய தமிழ் மக்கள் எதையும் உற்றுப் பார்ப்பதில் மிகவுங் கருத்துடையவர்கள். நம் முன்னோர்களிற் சிலர் மலைகளின்மேல் வாழ்ந்துவந்தார்கள். சிலர் கடலோரங்களில் வாழ்ந்துவந்தார்கள். சிலர் காடுகளில் வாழ்ந்துவந்தார்கள். சிலர் உள்நாட்டில் ஆற்றோரங்கள், சதுப்பு நிலங்கள் முதலிய நீர்ப்பாங்கான இடங்களில் வாழ்ந்துவந்தார்கள். சிலர் மேற்குறிப்பிட்ட இடங்களுக்கெல்லாம் பொதுவானதான வழிநிலங்களில் வாழ்ந்துவந்தார்கள். இந் நிலங்கள் பழைய தமிழ் நூல்களில் முறையே மலைநிலம் அல்லது குறிஞ்சிநிலம் என்றும், கடல் நிலம் அல்லது நெய்தல் நிலம் என்றும், கான்நிலம் அல்லது முல்லை நிலம் என்றும், வயல்நிலம் அல்லது மருதநிலம் என்றும், வழிநிலம் அல்லது பாலைநிலம் என்றும் சொல்லப்படுகின்றன.

இரவெல்லாம் இருளில் மயங்கி உறங்கிக் கிடந்த மக்கள், பொழுது விடிந்தவுடன் ஒரு பெரிய விளக்கம் பெற்று அடங்கா மகிழ்ச்சி யடைகின்றனர். மலையிலுள்ளவர்கள் மலையைச் சுற்றிச் சுற்றிப் பார்த்து வியப்படைகிறார்கள். கடற்கரையி லுள்ளவர்கள் கடற்கரையையும், காட்டிலுள்ளவர்கள் காட்டையும், வயலிலுள்ளவர்கள் வயலிடங்களையும், வழி நிலத்திலுள்ளவர்கள் வழிநிலத்தின் இயல்புகளையும் இங்ஙு

னமே ஒரு பெரிய விம்மிதத்தோடு சுற்றிச் சுற்றிப் பார்த்து வியப்படைகிறார்கள். இரவெல்லாம் தெரியா திருந்த செடி கொடிகள், மலர்கள், காய்கள், பழங் கள் முதலியனவும்; மான்கள், ஆன்கள், மயில்கள், குயில்கள் முதலிய சிற்றுயிர்களும் பிறவும் தெரிகின் றன. மக்களைப்போலவே அவைகளும் இரவெல்லாம் உறங்கிக் கிடந்து பொழுது விடிந்தபின் கிளர்ச்சியாக விளங்கி மகிழ்ச்சியாக ஆரவாரிக்கின்றன. இவற்றை யெல்லாம் அம் மக்கள் கண்டு மேன்மேலும் ஊக்கங் கொள்கின்றனர். அதனால், இரவெல்லாம் ஒரே இருளா யிருந்த இவ் வுலகம் பொழுது விடிந்ததும் இவ்வளவு பேரொளியோடு விளங்குவதற்குக் காரணம் என்ன என்று அவர்கள் எண்ணிப்பார்க்கவும் நேர்ந்தது. முடிவில், சூரியனே இவ்வளவுக்குங் காரணம் என்று ஒரு முடிவுக்கு வந்தார்கள். மக்களுக்கும் மற்றச் சிற் றுயிர்களுக்கும் வந்த வாழ்வெல்லாம் இந்தச் சூரிய னாலேதான் என்று தெரிந்ததும், இப்போது அவர்கள் எண்ணமெல்லாம் பல முகமாகப் பரவாமல் ஒரு முக மாகச் சூரியனைப்பற்றியதே யாயிற்று. மலைமே லிருந்து பார்க்கும்போது, சூரியன் புறப்படுங் காட்சி யும் மறையுங் காட்சியுமெல்லாம் உற்று நோக்கினர். கடற்கரையி லிருந்து பார்க்கும்போது, காலையில் ஞாயிறு தளதள வென்று நீலக் கடலில் எழுந்து செங் கதிர் சொரிவதிலுங் கருத்திருத்தினர். இந்தக் காட்சி களும் இவற்றாலான நிகழ்ச்சிகளும் பழந்தமிழ் மக்க ளின் உள்ளத்தை அப்படியே அள்ளிக்கொண்டன. எண்ணம் அவர்களுக்குப் பின்னும் ஆழ்ந்தது.

சூரியன் காலையில் எழுந்தவுடன் உறங்கிக்கிடந்த உயிர்களெல்லாம் எழுந்து நடமாடுகின்றன. குவிந்து

ஒன்றொடொன்று நெருக்கமா யிருக்கும் தாமரை இதழ்கள் முதலியன விரிந்து மலர்கின்றன. நினைத்துப் பார்த்தால், சூரியனது அசைவினாலும் ஒளியினாலும் உலகத்தில் உண்டாகும் மாறுபாடுகள் அளவில்லாதனவாகும். சூரியனது வெப்பத்தினாலும் அசைவினாலும் மலைகளிற் சில பகுதிகள் பிளந்துபோகின்றன. ஒன்றின்மேல் ஒன்று விழுகின்றன. சிறு சிறு கற்களாகின்றன. பின் மணலாகின்றன; பின் மண்ணாகின்றன. இப்படி எல்லாப் பொருள்களும் எல்லா உயிர்களும் சூரியனது இயக்கத்தினாற் பல வகையான அசைவுகளைப் பெறுகின்றன. தோன்றுதல், நிகழ்தல், ஒடுங்குதல், மறைதல், மீண்டுந் தோன்றும் ஆற்றல் பெறுதல் என்னும் ஐந்து வகையான தொழில்களிலும் அவை உட்படுகின்றன. ஒரு சூரியன் இப்படி உலக மெல்லாம் அசைக்கின்றதன்றோ! ஆ, என்ன வியப்பு! என்று இங்ஙனமெல்லாம் நம் முன்னோர்கள் உற்றுக் கருதினார்கள்.

கல், மண், இரும்பு முதலிய உயிரில்லாத பொருள்கள், கிடந்த இடத்திலேயே கிடக்கின்றன. அசைவதே இல்லை. மக்களோ சிற்றுயிர்களோ அசைத்தால் அசைகின்றன. ஆதலால், உயிரில்லாத பொருள்களை அசைப்பதற்கு உயிருள்ள பொருள்கள் தேவையாயிருக்கின்றன என்று தெரிகின்றது. சூரியனும் ஓர் உயிரில்லாத பொருளாதலால், அதனை அசைத்து அதன்முகமாக உலகத்தை யெல்லாம் இயக்குதற்கு ஒரு பேராற்றல் வாய்ந்த உயிர்ப்பொருள் உண்மையில் இருக்கத்தான் வேண்டும். உலகத்தை யெல்லாம் இயக்குவதனால், அந்தப் பெரிய உயிர்ப்பொருளை 'இயவுள்' அல்லது 'கடவுள்' என்று சொல்லலாம். இய

வுள் என்பது இயக்கும் பொருள்; கடவுள் என்பது கடவும் பொருள்; அதாவது செலுத்தும் பொருள்; எல்லா எழுத்துக்களுக்கும் 'அ' என்னும் எழுத்துத் தலைமையாயிருப்பதுபோல, எல்லா உலகுயிர்களுக்கும் அந்தப் பெரிய உயிர்ப்பொருள் தலைமையாயிருக்கவேண்டும் என்று இங்ஙனமெல்லாங் கூர்மையாக எண்ணி எண்ணிப் பார்த்துப் பண்டைக் கால நன்மக்கள் ஓர் உறுதியான முடிபுக்கு வந்தனர்.

> "அகர முதல எழுத்தெல்லாம் ஆதி
> பகவன் முதற்றே உலகு"

என்னுந் **திருக்குறளில்** அம்முடிபு தெளிவாக விளக்கப்பட்டிருக்கின்றது. பழந்தமிழ் மக்களின் கூரிய உணர்வுகளை நன்றாக ஆராய்ந்து பார்த்த இஞ்ஞான்றைத் தமிழ்ப் பெருமகனாரான **ஆசிரியர் மறைமலையடிகள்** தாம் அரிதின் நுணுகி நுகர்ந்தெழுதிய **முல்லைப் பாட்டு ஆராய்ச்சியுரையில்,**

> "உலக இயற்கையிலுள்ள அழகினைக் கண்டு வியந்து அவ்வளவில் அமைந்துவிடாமல், அவ்வியற்கையின் உள்ளே நுழைந்து அங்கெல்லாம் பிறழாத ஓர் ஒருமைப்பாடும் அதனை அங்கே நிலைபெறுத்தி மறைந்துகிடக்கும் ஓர் உயிர்ப்பொருளின் இருப்புங் கண்டறிந்து களிப்படைந்தனர். அங்ஙனம் இவ் வுலக இயற்கையில் மறைந்து ஊடுருவிக் கிடக்கும் அவ் வுயிர்ப் பொருளினையே கடவுள் என்று துணிந்து, அதனை மனத்தால் நினைந்து வாயால் வாழ்த்தி மெய்யால் வணங்கி வழிபட்டு வாழ்ந்தனர்"

என்று இவ் வுண்மையை மிகவும் அழகாகவும் தெளிவாகவும் எடுத்துக் காட்டி விளக்கியிருக்கிறார்கள். இக் கடவுட் கொள்கை பின்பு நம் முன்னோர்களால் மேலுமேலுங் கூர்மையாக ஆராயப்பட்டுத் திருத்தமான உண்மைகளோடு பழைய சங்கத் தமிழ் நூல்களில் இனிது விளங்கிக்கொண்டிருக்கின்றன.

## 2. மூன்று பொருள்கள்

மலை, கடல், காடு, வயல், வழிநிலம் என்பவற்றாலான இவ்வுலகம் என்பதற்கு வேறாக, உயிர்கள் என்பவை உண்டு என்று தெரிந்தபின், ‘உலகம்’ ‘உயிர்’ என்னும் இவ் விரண்டுக்கும் வேறாகக் ‘கடவுள்’ என்பதும் ஒன்று உண்டு என்று தெரிந்துகொண்டார்களென்னும் உண்மை, இது வரையிலும் விளக்கிச் சொன்னதிலிருந்து நன்கு விளங்கக்கூடும். இங்ஙனம், உயிர்கள் உலகம் கடவுள் என்னும் மூன்று பொருள்கள் பண்டைத் தமிழரின் ஆராய்ச்சிக்கு உரியனவா யிருந்தன. மிகப் பழைய இலக்கண நூலாகிய **தொல்காப்பியத்**திலும் இம் முப்பொருள் உண்மையைப் பற்றிய குறிப்புக்கள் வந்திருக்கின்றன.

“மக்கள் தாமே ஆறறி **வுயிரே**”

“மாயோன் மேய காடுறை **உலகமும்**”

“**கடவுள்** வாழ்த்தொடு கண்ணிய வருமே”

என்பவை அந்நூலின் நூற்பாக்கள்.

மேலே காட்டிய இம் மூன்று பொருள்களில், உயிர்களே எதனையும் துய்ப்பதற்கு உரியவை. உயிர்களுக்கு வேறாக இருப்பவை இப் பரந்த உலகமும் கடவுளும் என்னும் இரு பொருள்களேயாம். உயிர்கள் துய்ப்பதானால் இவ் வுலகத்தைத் துய்க்கலாம்;

கடவுளைத் துய்க்கலாம். சிலர் உலகப் பொருள்களையே முதன்மையாக அடைய விரும்புகிறார்கள். சிலர் கடவுட் குணங்களையே முதன்மையாக அடைய எண்ணுகிறார்கள். இவ்வியல்பினையே ஆசிரியர் திருவள்ளுவனார்,

"......திருவேறு ;
தெள்ளிய ராதலும் வேறு"

என்று தமது திருக்குறளில் தெளிவுபடுத்தியிருக்கின்றார். உலகப் பொருள்களை அடைவதென்பது திரு அடைதல்; கடவுட் குணங்களை அடைவதென்பது தெளிவு அடைதல். இப்படி இரு வேறு வகையாக மக்கள் வாழ்க்கையானது நடைபெற்றுச் செல்கின்றது.

## 3. கடவுள் இயல்பு

திருவள்ளுவர் திருக்குறளில் கடவுள் இயல்புகள் மிகவும் நுட்பதிட்பமாக ஆராயப்பட்டிருக்கின்றன. திருக்குறளின் முதலில் **கடவுள் வாழ்த்து** என்று ஓர் அதிகாரம் காணப்படுகின்றது. அதன்கண், இவ் விளக்கங்கள் வருகின்றன.

'கடவுள் உலகத்துக்குத் தலைவன்; அவன் குணங்களை அடைவதே படிப்பதனாலான பயன்; உயிர்களின் உள்ளங்களிலெல்லாம் அப்பெரியோன் அவரவர் நினைவின் வடிவமாகத் தங்கியிருக்கின்றான். அவன், பற்றில்லாமல் காரியங்கள் செய்பவன்; அதனால் அவனுக்கு நல்வினை தீவினைகள் உண்டாவதில்லை. அவனுக்குப் புலன் அவா என்பதும் இல்லை. அவனுக்குமேல் இன்

ஞொருவர் இல்லையாதலால் அவனுக்கு அவனையே தான் உவமையாகக் கூறவேண்டும். அவன் அறமும் அருளும் உடையவன்; மதிக்கத்தக்க ஆற்றல்கள் உடையவன்; அவன் பிறப்பதுமில்லை; இறப்பது மில்லை.'

என்னுங் கருத்துக்களெல்லாம் அவ் விளக்கங்களில் அமைகின்றன. இதனால், கடவுள் தூயவன்; வினையில்லாதவன்; தலைவன்; அருளுருவானவன்; பிறப் பிறப்பில்லாதவன் என்பனவெல்லாந் தெரிகின்றன. கடவுளை நம் முன்னோர் இப்படி உணர்ந்திருந்தார்கள். ஆதலால், 'தெளிந்த உணர்வுடையதே கடவுள்' என்பது அவர்கள் கருத்தாகின்றது.

கடவுளை நோக்கி வழிபடுகின்ற அடியார்கள் அவனது அவ் வுணர்வுத் தெளிவை அடைதலே நோக்கமாக முன்பு வாழ்ந்திருக்கிறார்கள். **பரிபாடல்** என்று ஒரு சங்க நூல் உண்டு. அதில், 'ஆண்டவனிடத்தில் உயிர்கள் விரும்பத் தக்கவை எவை?' என்பதைப் பற்றி விளக்குமிடத்தில்,

> "......யாம் இரப்பவை
> பொருளும் பொன்னும் போகமும்அல்ல; நின்பால்
> அருளும் அன்பும் அறனும் மூன்றும்
> உருளிணர்க் கடம்பின் ஒலிதா ரோயே"

என்று சில அருமையான அடிகள் அருளிச் செய்யப் படுகின்றன. 'பெருமானே, யாங்கள் உன்னிடத்தில் எதிர்பார்ப்பவை பொருளும் பொன்னும் போகமுமல்ல; அருளும் அன்பும் அறனும் என்னுந் தெளிந்த உணர்வுகளேயாம்' என்பது அவ் வரிகளின் கருத்து. இங்ஙனம், உணர்வுத் தெளிவைப் பெறுவதற்காகவே

அக் காலத்தில் கடவுள் வழிபாடு நடைபெற்று வந்திருக்கின்றதென்று தெரிகின்றது.

இனி, இக் கடவுளுண்மைகளை முன்னைத் தமிழர் பின்னும் நுணுகி ஆராய்ந்து இன்னும் பல கருத்துக்களைப் புலப்படுத்தி யிருக்கிறார்கள். அவையெல்லாம் ஆராய ஆராய மிக்க இன்பந் தருவனவாயிருக்கின்றன.

இந்த உலகமானது முதலில் ஒரு கல் வடிவமாக இருந்ததென்று அறிஞர்கள் கருதுகின்றனர். சூரியனிடத்தி லிருந்து இவ் வுலகம் ஒரு தீப் பிழம்பாகப் பிரிந்து வந்தது. அப் பிழம்பு ஆறியபோது, அது முதலில் மேடும் பள்ளமுமான ஒரு பெருங் கல்லாக இருந்ததென்பது அவர்கள் கருத்து. பின்பு சூரியனது வெப்பம் முதலியவற்றால் அது பல விடங்களிலும் பிளந்து ஒன்றின்மேல் ஒன்று விழுந்து சிறு கற்களாய் மணலாய் மண்ணாய் இப்போதிருக்கின்ற முறையில் தோன்றுவதாயிற்று.

முதலில் கல்லாகத் தோன்றியிருந்த மலை பின்பு மண்ணாக மாறுவதற்குள் இடையில் எவ்வளவோ காலங்கள் கழிந்திருக்க வேண்டும். இங்ஙனம் கல் தோன்றி மண் தோன்றாத காலத்திலேயே தமிழ் முன்னோர் முதன் முதலில் தோன்றிய மூத்த குடியினராவர் என்பது ஒரு பெரியார் வாய்மொழி. ஆதலால், மக்கள் முதன் முதலில் தோன்றிய இடம் மலையிடமே என்று ஏற்படுகின்றது. அப்புறம் மலையின் கீழ் உள்ள காட்டு நிலத்துக்கு அவர்கள் வந்தார்கள். இதனால், மக்கள் வாழ்ந்திருந்த மிகப் பழைய நிலங்கள் மலை நிலமும் காட்டு நிலமுமே என்று கொள்ளலாம். இவ் விரு நிலங்களிலும் மக்கட்கு இயற்கை வாழ்வு மிகுதியாக

அமைந்திருந்தது. மற்ற நிலங்களில் செயற்கை முயற்சிகள் மிகுதி. மலைகளிலுங் காடுகளிலும் இறைவனது இன்ப அருள் விளக்கம் நன்றாக விளங்கித் தோன்றும்.

மலைப் பக்கங்களில் தோன்றிய இறைவனது தோற்றம் சிவந்த இளைய வடிவமாய்த் தோன்றினமை கண்டு தமிழ் மக்கள் அத் தெய்வத்தைச் 'சேயோன்' என்னும் பெயரால் அழைத்து மகிழ்ந்தனர். சேயோன் செந்நிறமானவன்; அவனை 'முருகன்' என்று கூறுவதும் உண்டு. முருகு என்னுஞ் சொல்லுக்கு இளமை அழகு, கடவுள் தன்மை முதலிய பல பொருள்கள் சொல்லப்படுகின்றன. எல்லாம் அம் மலைப் பக்கத்துக் காட்சிகளுக்கும் உணர்வுகளுக்கும் ஒக்கும்; பின்பு இச் 'சேயோன்' என்பதைச் 'சிவன்' என்றும் சான்றோர் வழங்கினர்.

காட்டிடங்களில் தோன்றிய இறைவனது விளக்கம் பசுமையான அழகிய வடிவமாகக் காணப்பட்டமையால் முன்னோர் அதனை 'மாயோள்' என்னும் பெயரால் அழைத்து இன்புற்றனர். 'மாயோள்' என்பதற்குப் பசுமையானவள் என்பது பொருள். பின்பு அது 'மாயோன்' என்றும், 'மால்' என்றும் வழங்கப்பட்டது. 'திருமால்' என்பதும் இது.

மலைக் காட்சிகளில் வீரத் தோற்றமும், கான் வளங்களில் மென்மை யெழிலும் மிக்கு விளங்குதலை நம் முன்னோர் கூர்மையாக அறிந்து உணர்ந்து, அத் தெய்வ விளக்கத்தில் முறையே ஆண்மை நினைவும் பெண்மை நினைவும் வரப்பெற்றனர்.

இவ் விரு பெருந் தெய்வ விளக்கங்களையும் அவை விளங்கும் இடங்களையுங் குறித்து **ஆசிரியர் தொல்காப்பியனர்,**

"மாயோன் மேய காடுஉறை உலகமும்
சேயோன் மேய மைவரை உலகமும்"

என்று நூற்பா இயற்றியிருக்கின்றார். இப்படி இரு தெய்வ வடிவுகளையும் அன்பர்கள் பாராட்டி வழிபட்டு வந்தனர். முதலில் மக்கள் மலையில் தோன்றினார்கள் என்னுங் குறிப்பினால், மலை விளக்கமான சேயோனின் இயல்பே மக்களுக்கு முதன்முதலில் விளங்கியதென்று தெரிந்துகொள்ளலாம். தொல்காப்பியர் இந் நூற்பாவில், முல்லை குறிஞ்சி மருதம் நெய்தல் என்று சொல்லிய முறையால், காடுறை யுலகத்தையும் அதில் விளங்கும் மாயோனையும் முதலில் சொல்லியிருக்கிறார்.

இவ் வகைகளையெல்லாம் உற்று நோக்கும்போது, தெளிவு உணர்வான ஒரே கடவுளைப் பண்டைத் தமிழ் மக்கள், இங்ஙனம் சேயோனாகவும் மாயோனாகவும் அழைத்து வழிபட்டு வாழ்ந்தனரென்று தெரிகின்றது.

உலகத்தில் உயிர்களெல்லாம் ஆணும் பெண்ணுமா யிருக்கின்றன ; உயிர்கள் என்றாலே அதற்கு இப் பாகுபாடு ஓர் அடையாளமாயிருக்கிறது. ஆதலால் பெரிய உயிர்ப்பொருளாகிய கடவுளும் இங்ஙனம் ஆணியல்பும் பெண்ணியல்பும் வாய்ந்தே விளங்க வேண்டுமென்று சங்க காலத் தமிழ்ச் சான்றோர் அறிந்திருந்தனர். அதனாலேயே மேலே காட்டியபடி 'மாயோன்' எனவும், 'சேயோன்' எனவும் இறைவனைப் பெண் வடிவமாகவும் ஆண் வடிவமாகவும் நினைந்து அவர்கள் நெஞ்சுருகி நெகிழ்வாராயினர். இறைவன் ஆண் வடிவு ஒரு பக்கமும் பெண் வடிவு ஒரு பக்கமுமாக விளங்குகின்றான் என்னும் இவ்

அரும்பேருண்மையைப் பண்டைக் காலத்திலேயே தமிழ் மக்கள் எப்படியோ அறிந்திருந்தன ரென்பது,

> " நீல மேனி வாலிழை பாகத்து
> ஒருவன் இருதாள் நிழற்கீழ்
> மூவகை யுலகு முகிழ்த்தன முறையே "

என்று **ஐங்குறுநூறு** என்னுஞ் சங்க நூலில், அதன் முகப்பில் வந்திருக்கின்ற அழகிய கடவுள் வாழ்த்தி லிருந்து நன்றுகத் தெரிகின்றது. ஆணும் பெண்ணு மாய் அமைந்த—அத்தகைய ஒரு முழுமுதற் கடவுளின் தலைமையில் இவ்வுலகம் இயங்குகின்றது என்னும் உண்மையும் இவ்வடிகளில் மிகக் கண்ணியமாகத் தோன்றுகின்றது.

## 4. திருக்கோயில்கள்

காலம் செல்லச் செல்ல இம் முழுமுதற் கடவு ளுக்குக் குறிகளும் அடையாளமும் கோயிலும் வகுக் கப்பட்டன. விழாக்களும் நிகழ்த்தப்பட்டன. அடை யாளங்களிருந்தால் மனத்துக்கு எதுவும் எளிதாகப் புலப்படும். பொதுவான அறிவு உடையவர்களுக்கு இறைவன் இருப்பும் இயல்புகளும் தெரிவது அருமை யாக இருக்கும். நுணுகி அறிபவர்களுக்கு மட்டும் அவன் உணர்வு நிலைகள் நன்கு விளங்கக்கூடும். ஆதலால், இறைவனுக்கென்று அடையாளமுங் கோயிலும் வகுக்க முன்னோர் முற்பட்டனர்.

பழைய காலத்திலேயே தமிழ் நாட்டில், பெரிய கோயில்கள் அமைக்கப்பட்டன. பார்வைக்கு அவை ஒரு நகர் போலத் தோன்றும். கடலுள் மறைந்து போன தென்குமரி நாட்டிலேயே இத்தகைய பெருங்

கோயில்கள் இருந்தனவென்று தெரிகின்றது. பாண்டியன் பல்யாகசாலை முதுகுடுமிப் பெருவழுதி என்னும் மன்னர்மன்னனை நோக்கி ஒரு புலவர் பாடுகின்ற போது, 'சிவபிரானது பெரிய திருக்கோயிலை வலஞ் செய்வதற்குமட்டும் நினது வெண்கொற்றக் குடை தாழும்' என்னுங் குறிப்பில்,

"பணியிய ரத்தைநின் குடையே ; முனிவர்
முக்கட் செல்வர் நகர்வலம் செயற்கே"

என்று கூறியிருக்கின்ற செய்தி புறநானூற்றில் வருகின்றது. சிலப்பதிகாரம், மணிமேகலை முதலிய நூல்களாலும் அங்கங்குந் திருக்கோயில்களும், வழிபாடுகளும், விழாக்களும் இருந்துவந்தமை விளக்கமாகப் புலனுகின்றது.

"பிறவா யாக்கைப் பெரியோன் கோயிலும்"

என்பது போன்ற தொடர்கள் சிலப்பதிகாரத்தில் வருகின்றன.

---

# குறிப்புரை

[எண்—பக்கவெண்]

உ. ஒண் தீந்தமிழ் - விளக்கமான இனிய தமிழ்.

ரு. யருவியதில்லை - பொருந்திய

,, தில்லை.பாகு-வெல்லக் குழம்பு.

ச. பருப்பு - முந்திரிப்பருப்பு.

,, (பாட்டு) கோலம் - அழகு,

,, ஒப்பனை.தங்க-மேலான; கரி-யானை ; தூ - தூய.

,, (பாட்டு) பெரியோன் - சிவபிரான். செவ்வேள் - காமனைப் போன்ற அழகுடையவன் ; ஆனால், செம்மையும் செந்நிறமும் உடையவன் ; அவன் முருகன். அணிதிகழ்-அழகு விளங்குகின்ற. வால் வளை - வெள்ளிய சங்கு. வாலியோன் - வெண்ணிறமானவன் ; அவன் பலதேவன். நெடியோன் - திருமால்.

ரு. கொங்கிளங்கோசர் - கொங்கு நாட்டைச் சேர்ந்த பழைய வீரக்குடியில் தோன்றிய அரச மரபினர்.

,, (பாட்டு) யவனர் - கிரேக்கர் ; வன் பெருங்கல் - இமயமலை ; கல் - மலை. தென் குமரி - தெற்கே யிருந்த குமரியாறு பாய்ந்த குமரி நாடு. செரு-போர்த்திறம். மன்பதை - மக்களுலகம். நுடங்க - வளைய. விறல் - வெற்றி. வில் பொறி - வில்லின் விளக்கம்.

ரு. கானல் வரி - கடற்கரையைப் பற்றிய இசைப்பாட்டு. பாணி - பாட்டு ; பாடற் பாணி - இசைப்பாட்டு; 'கானல் வரி' என்னும் இசைப்பாட்டு. கலம்-இசைக் கருவி.

,, (பாட்டு) குணிலா - குறுந்தடியாக.

,, எரு மன்றம் - குப்பை கொட்டும் பரந்த இடம். தம்முன் - தமையன்; தமக்கு முன் பிறந்தவன் ; பல தேவன். வால சரிதை - பிள்ளைப்பருவத்து வரலாறு. குரவை - குரவைக் கூத்து ; மகளிர் வட்டமாக நின்று கை கோத்து ஆடும் கூத்து.

கூ. திளைத்திருந்த - தோய்ந்திருந்த.

ம. கடல் கடந்த நாடு - கிரேக்க நாடு முதலியன.

,, பண்டசாலை - களஞ்சிய அறை.

,, கொழித்திருந்தன - செழித்திருந்தன.

,, திறை - வரி.

ய. ஏறு - ஆண்.
,, நிகர் - சமானம்.
கக. கொடை - ஈகை.
,, சால்பு - பெருந்தன்மை.
,, (பாட்டு) குஞ்சி- ஆண்பிள்ளைகளின் மயிர் முடி. கொடுந் தானைக் கோடு-மடிப்புடைய ஆடையின் கரை.
,, செழும் பாட்டுக்கள் - வளமான பாட்டுக்கள்.
கங. நா - நாக்கு.
,, அளவளாவி - கலந்து பழகி.
,, பொலிகின்றது - விளங்குகின்றது.
கச. கணக்கு - அளவு.
,, (பாட்டு) கூறும் - வழங்கும்.
,, ,, தேஎத்தர் - தேயத்தர் ; தே - தேயம்.
கரு. கிளைவாங்கி - கிளை எற்று; கிளை பிரிந்து என்பது கருத்து.
கஎ. தழீஇய - தழுவிய ; பொருந்திய ; சாயலவர்-மென்மையை யுடையவர்.
கஅ. நீர்மலிவால்-நீர்நிறைவால்.
,, கடல்கோள் - கடல் கொள்ளுதல் ; ஊழி என்பதும் இது.
கக. கவியரங்கேறினர் - புலவரவையிற் சென்று புலவரென்று ஏற்றுக்கொள்ளப் பட்டு விளங்கினவர்.
,, புலப்படுத்து - ஒரு நூலாகக் காணும்படி செய்து ; இரீஇயினன் - இருத்தினன்.
,, தென்பாலி - தெற்குப் பக்கத்திலிருந்த ஒரு தமிழ் நாடு.

உய. சிதர்ந்து போன - சிதறிப் பரவிய.
,, ஒழுகுவதற்கு - செல்லுவதற்கு.
உஉ. (பாட்டு) பன்மலை யடுக்கத் துக் குமரிக் கோடும் - பல மலை யடுக்குகளை யுடைய குமரி மலையும்.
,, தென் குமரி - தெற்கே இருந்த குமரி யாறு. வட பெருங்கல் - இமயமலை. குணகுட கடல் - கிழக்கு மேற்குக் கடல்.
உங. (பாட்டு) ஆயிடை - அந்த இடங்களுக்குள்.
உச. தொடியோள் - வளையலணிந்த குமரி; பௌவம்-கடல்.
உரு. குடகம் - குடக நாடு. இரு- பெரிய.
உஎ. அகழ்ந்து - தோண்டி.
உஅ. நெடுஞ்செழியன் - ஆரியப் படை கடந்த நெடுஞ்செழியன் ; இப் பெயரினலேயே அவன் வடநாட்டைத் தன் அடிப்படுத்திய உண்மை விளங்கும்.
உக. (பாட்டு) இமையவர் - தேவர் ; சிமையம் - கொடுமுடி. பிடர்த்தலை - பிடரிடத்தே. பிடர்-கழுத்தின் பின்பக்கம். கொடுவரி - வளைந்த வரிகளையுடைய புலி ; இங்கே புலி யடையாளம். ஒற்றி-பொருந்தச் செய்து. கொள்கை - கோட்பாடு. பெயர்வோற்கு - மீள்வோனுக்கு; அவன் கரிகா

லன். மாநீர் - கடல். இறை கொடுத்த - திறையாகக் கொடுத்த. கொற்றப் பந்தர்- தனக்கு வெற்றியால் வந்த பந்தர். வாள் வாய் - வாள் தவறுதல் இல்லாத. பகைப் புறத்து-பகையிடத்து. பட்டி மண்டபம் - திருவோலக்க மண்டபம். உவந்தனன் கொடுத்த - மனமகிழ்ந்து கொடுத்த. நிவந்து-உயர்ந்து; மரபின் - தன்மையினை யுடைய; தொழில்திறம் என்னுந் தன்மையினை யுடைய. தோரணவாயில் - வாயில் தோரணம். புனைந்தனவாயினும் - செய்யப்பட்டனவாயினும். கம்மியர் - தொழில் செய்வோர். தொல்லோர் - முன்னோரது; விதித்து - அமைத்து.

௬௰. (பாட்டு) மிசை - மேலே, பொறி - புள்ளி. தனு - வில். உடுத்து - சூழ்ந்து. எறி-வீசுகின்ற. பொறிகள் - இயந்திரங்கள். கடி - காவல். இடைநிலை வரைப்பில் - இடையில் நிலைபெற்றுத் தோன்றும் இடம். வரைப்பு - வரம்புடைய இடம். மிளை - காவலாகப் பயன்படும் காடு. நெடுநிலை - மாளிகையின் மேலடுக்குகள். நிலாச்சுதை - வெண்ணிறமான சுண்ணம்பு. மலரும்-விளங்கித் தோன்றுகின்ற. மிடை - செறிந்த.

௬௰. மிளிர வேண்டும் - ஒளிர வேண்டும்; விளங்க வேண்டும்;

௬௧. தட்பம் - குளிர்ச்சி.

,, வளத்தோட்டம் - வளமுள்ள பொழில் சூழ்ந்த நாடு.

௬௨. (பாட்டு) உயிர்த்து - உயிராக உடையது. மலர் தலை - அகன்ற இடத்தை யுடைய.

,, நலனோம்பல் - (சுகாதாரம்)

,, அலைவு - ஒரு நிலைப்புக் கொள்ளாமையாகிய துன்பம்.

,, கவிகை - குடை.

,, செரு - போர்.

,, அலமருக-அலைந்து வருந்துக. வஞ்சினம் - (சபதம்)

,, (பாட்டு) இறை - அரசன்; கோலேன் - ஆட்சியையுடையேன்.

௬௪. திறன் இல் - திறமையில்லாத; மெலிகோல்-மெலிந்த ஆட்சி.

,, சூள் - (சபதம்.)

,, பாசனம் - பாய்ச்சல்.

௬௫. விளையுள் - விளைச்சல்.

,, (பாட்டு) நெளிமருங்கு - குழிந்த இடத்து. தட்டோர்- தளைசெய்தோர். அம்ம-வியப்புக்குறி. இவண்-இவ்வுலகில். தட்டோர் - தம் பெயரைத் தளை செய்தோர். தள்ளாதோர் - நீரைத் தளைசெய்யாதவர். தள்ளாதோரே - தம் பெயரையுந் தளைசெய்யாதவரே. (தளை செய்தல் - பொருத்தி நிறுத்துதல்.)

ரு௬. (வரி உரு-ரு௰) இமய வரம்பன் நெடுஞ்சேரலாதன், குமட்டூர்க் கண்ணனார் என்னும் புலவர்க்குக் கொடுத்த நன்கொடை இங்கே கூறப் பட்டன.

ருஎ. (வரி ரு-ச) களங்காய்க் கண்ணி நார்முடிச் சேரல் என்பவன், காப்பியாற்றுக் காப்பியனார் என்னும் புலவர்க்குக் கொடுத்தது.

,, (வரி ரு-அ) இவ் வரும்படியையும் புதல்வனையும் பரிசாகப் பெற்ற பெரியார் பரணர்; கொடுத்தவன், கடல் பிறக்கோட்டிய செங்குட்டுவன். புதல்வன் பெயர் குட்டுவன் சேரல்.

,, (வரி கக) ஓர் அரசன் என்பவன், செல்வக் கடுங்கோ வாழியாதன் என்பவன்.

ருஅ. (பாட்டு) ஒன்னா - பிறர்க்குச் செய்ய இயலாத; பூட்கை-கொள்கை; மேற்கோள். சென்னியர் பெருமான் - சோழர் தலைவன்; வீரத்தோடு பொருது இரத்தந் தோயாமையின், 'வெள்வேல்' எனப்பட்டது. வீரமின்மையைக் காட்டியபடி.

,, (வரி கஉ-ரு) தகடூ ரெறிந்த பெருஞ்சேரலிரும்பொறை என்பவன் அரிசில் கிழார் என்னும் அறிஞர்க்கு அளித்தது.

,, செம்மல்-பெருமகனார். திரு-பேறு.

ருஅ. (வரி உச-ரு) பொன்கட்டி அளித்தவன் ஆடுகோட்பாட்டுச் சேரலாதன் என்னும் அரசன்; பெற்றவர் காக்கைபாடினியார் நச்செள்ளையார் என்னும் பெண் புலவர்.

ருக. பட்டினப்பாலை ஆசிரியர்: உருத்திரங் கண்ணனார்.

,, சிதர் - துளி.

ச௰. ஆறு - வழி; அரசு - அரசன்.

சக. திட்பம் - உறுதி.

,, வினைஞர், கம்மர், கொல்லர், என்பன தொழிற் பிரிவினரை உணர்த்தும்.

,, பாசறை - பசிய தழைகளால் அறை அறையாக வகுக்கப் படும் பாடி வீடு.

,, புலிச் சங்கிலி - ஒன்றோடொன்று புல்லு தலையுடைய (பொருந்துதலையுடைய) சங்கிலி. நிறப்படாம் - வண்ணத் திரை.

,, படாம் வீடு - திரைகளாலான கூடாரம்.

சஉ. கரந்துபடை - உட்பக்கம் மறைந்து தோன்றும் கல் படுப்பு; கற்களை மேலே மூடாகக் கிடத்தி மறைத்த நீர்க்காலின் பெயர்.

,, பூங்கா - பூஞ்சோலை; எந்திர வாவி-நீரை அகற்றவும் ஏற்கவும் பொறிகள் அமைந்த குளம்.

சரு. அரணம் - காப்பு.

,, பெருமிதம் - மனக்களிப்பு.

௪௪. (பாட்டு) கதழ் பரிய கலி மா - விரைந்த நடையினை யுடைய மனஞ் செருக்கின குதிரை. நிமிர்-உயர்ந்த. நெஞ்சுடைய புகல் மறவர்-வலிய நெஞ்சை யுடைய போர் விரும்பும் வீரர். மாண்டதாயினும் - மாட்சிமைப்பட்டதானாலும். முதற்று - முதன்மையாக உடையது. கொற்றம்-வெற்றி.

,, பிறழாமல் - தவறாமல்.

,, பகைப்புலம் - பகையிடம்.

௪௬. (பாட்டு) இறைவன் - அரசன். தொல் இசை - பழைமையான புகழையுடைய. காய் சினத்த-எரிக்கும் வெப்பத்தை யுடைய. மா-குதிரை. வைகல் - நாள். அசைவு இன்றி - ஓய்வு இல்லாமல்.

௪எ. குறிஞ்சி நிலம் - மலை நிலம்.

௪அ. (பாட்டு) தெவ்வர் - பகைவர்; கோடு - கொம்பு. குப்பை - குவியல். சந்தனக் குறை - சந்தனக் கட்டை; குறை - குறைக்கப்பட்ட துண்டு; வெட்டப்பட்ட கட்டை.

,, வாரி - யானைக் கூடம்; வரை மருள் - மலையைப் போன்ற.

,, பொறித்து - எழுதி.

௪௯. (பாட்டு) குழீஇய - கூடிய; நா நவில் அவையம் - வாக்கு வல்லமையில் அடிப்பட்ட அரசவை. வல்லாராயினும் - மாட்டாராயினும். புறம் மறைத்து - அவர் மாட்டாமையை வெளியே தெரியாதபடி தாம் மறைத்து. சொல்லிக் காட்டி - அரசனுக்கு அறிமுகப்படுத்தி. சோர்வின்றி - எழுச்சியுண்டாக; நல்லிதின் - நன்றாக; சுற்றத்து ஒழுக்கமும் - அரசனைச் சேர்ந்தவர்களின் நடத்தையும்.

௫0. வேட்கை - மிக்க ஆவல்.

,, (பாட்டு) தலை - தலையானவர்; சிறந்தவர்.

௫க. உன்னிப் பார்த்து - ஊன்றிக் கருதி.

,, கிழங்கு அகழ்வது - கிழங்கு தோண்டுவது.

,, நிரை - ஆன் மந்தை.

,, குளிப்பது - மூழ்கி யெடுப்பது.

௫௩. (பாட்டு) முந்தை-எதிரில். நட்டோர் - நேசித்தோர். நனி - மிக்க; நாகரிகர் - கண்ணோட்டமுடையவர்.

,, (பாட்டு) கற்றனைத்து - கற்ற அளவு; ஊறும் - உள்ளிருந்து பெருகும்.

௫௪. (பாட்டு) ஓர் அன்ன - ஒரு தன்மையான. பாலால் - பக்கத்தில். நாற்பாலுள்ளும் - நால்வகுப்பினுள்ளும். படுமே-வந்து வயமாவான்.

,, வாய்மொழி - மெய்ம்மொழி.

௫௬. (பாட்டு) கடை - கடைவாயில். செலாஅத - செல்லாத; செல்வம் - பேறு.

ருசு. (பாட்டு) உள்ளது - முன்னோர் தேடி வைத்துள்ள சொத்து. சிதைப்போர் - அழிப்போர்; உளர் எனப் படார் - உயிரோடு இருப்பவரென்று சொல்லப்படார். இருந்தும் இறந்தவரைப் போலவே கருதப்படுவரென்பது கருத்து.

,, கறித்து - கடித்து.

ருஎ. உறுப்பறைகள் - உறுப்புக் குறைந்தவர்கள்.

,, (பாட்டு) சிதடு - குருடு, உறுப்பு இல் பிண்டம்-வடிவு இல்லாத தசைத்திரள். குறள்-குறுகிய வடிவு; ஊமம் - ஊமை. மா - மக்களில் விலங்குத் தோற்றம் அமைந்த பிறவி. மருள் - அறிவின்றி மயங்கிக் கிடப்பவர்.

(பாட்டு) பேணு மாக்கள்-பாது காக்கப்படாத மக்கள்; ஆதர வில்லாதவர்கள். படிவ நோன்பியர்-தவ வடிவினரான நோன்பினர். மடி நல்கூர்ந்த மாக்கள் - எழுச்சி யின்றி வறுமைப்படுகின்ற மாக்கள்.

ருஅ. குறிக்கோள் - நோக்கம்.

,, (பாட்டு) இன்னாதது - துன்பந் தருவது. அதூஉம் - அதுவும். ஈதல் இயையாக் கடை - கொடுப்பது நேராதபோது.

ருகூ. தண்மையாக - இனிமையாக.

,, (பாட்டு) இல் - வீடு; இறை - இறப்பு; ஞெலிகோல் - தீக்கடை கோல். கான்றுபடு - கனன்று வெளிப்படுகின்ற. கனை எரி - மிக்க தீ.

சுய. (பாட்டு) நாடாக ஒன்று - ஒன்று நாடாக இருக்கட்டும். அவல் - பள்ளம். மிசை - மேல்நிலம்; மேடு. எவ்வழி - எந்த இடத்தில்.

சுக. (பாட்டு) பகடு-கடா. கூழ் - உணவு. பகடு நடந்த கூழ் - கடாக்கள் நடந்து உழுததனால் உண்டான உணவு.

சுஉ. சுழன்றும் - பிற துறைகளில் அலைந்தும்; ஏர்ப் பின்னது - உழவின் பயனையே நோக்கிக் கிடப்பது.

,, (பாட்டு) புரப்போர் - அரசர் உழவிடை விளைப்போர்-உழவுப் பொருளிலிருந்து உண்டு பண்ணுவோர். உழவர்கள் இல்லாவிட்டால், இரப்போர் கூட்டமும் அரசரது வெற்றியும் உண்டாவதற்கு வழியில்லை என்பது கருத்து.

சுரு. இலம் - இல்லாதேம்; அசைஇ - தளர்ந்து. நகும் - நகைக்கும்.

சுச. (பாட்டு) நுழைநூல்-மெல்லிய இழை. பால்வகை தெரியா - பிரிவின் வேறுபாடு எளிதில் தெரிந்து கொள்ளக்கூடாத; பல்நூறு அடுக்கத்து - பல நூற்றுக் கணக்கான அடுக்குகளையுடைய. நறு மடி-மணங் கமழும் மடிப்புடைய ஆடைகள்,

செறிந்த - நெருங்கிக் கிடக்கின்ற.

கூச. (பாட்டு) பூ ஆர் - பூத்தொழில் பொருந்திய.

கூரு. கரைய - கரையையுடைய.

,, கொட்டைக் கரைகள் - திரட்சியாக அமைந்த கரைகள்.

,, (பாட்டு) அவிர் துகில் - விளங்குகின்ற ஆடை; புரையும் - ஒக்கும்.

கூகூ. பனுவல் - நூல். அன்ன - போல.

,, (பாட்டு) ஆள் இல் - கணவன் இல்லாத. தாளின் - முயற்சியினால். நுணங்கு - மெல்லியதான.

,, நோக்கு - பார்வை. நுழைகல்லா - நுழையாத. பூ - பூத்தொழில்; கனிந்து - முற்றுப் பெற்ற.

கூஎ. வண்ணம் - நிறம். மறுகு - தெரு.

,, கழல் - காலிற் கட்டும் வீரவளை. தொடி - தோள் வளை.

கூஅ. பொற்கொல்லர் - தட்டார்.

கூகூ. (பாட்டு) உருவின் - வடிவின். முரண் மிகு திருமணி - ஒன்றற்கொன்று மாறுபாடு மிக்க அழகிய மணிகள். மின் உறழ் - மின்னலோடு மாறுபடுகின்ற (மின்னலைப் போன்ற); இமைப்பு - விளக்கம். சென்னி - தலையில்; பொற்ப - விளங்க.

எ0. வல்லையோ - வல்லமையுடையையோ; கூடுமோ என்பது கருத்து.

,, (பாட்டு) சமைப்பேன் - செய்வேன்.

,, (பாட்டு) கண்ணுள் வினைஞர் - பொன்னில் அரும்பு வேலை செய்வோர்; கண்ணுள் - அரும்பு வேலை.

எக. மருத்து நூல் - மருத்துவ நூல்.

பொறியளவை - இயந்திரக் கணக்கு (Engineering)

கரவட நூல் - களவு நூல்.

துடி நூல் - உடலின் துடிப்புக்களிலிருந்து பயன் கூறும் நூல்.

கைவரி - (கை இரேகை) மனவொருமை நூல் - (யோக நூல்).

(பாட்டு) கஞ்சகாரர் - வெண்கலத் தொழிலாளர். கருங்கைக் கொல்லர் - வலிய கையினை யுடைய இரும்புத் தொழிலாளர். கண்ணுள் வினைஞர் - இங்கே, ஓவியத்தில் அரும்பு வேலை (Design) செய்வோர்; அடியார்க்கு நல்லார் இவ் வேலை செய்வோர் பெண்கள் என்று குறிப்பிடுகிறார். மண்ணீட்டாளர், சிற்பிகள். கலம் - மணிக்கலம்.

எஉ. துன்னகாரர் - தையல் தொழில் செய்வோர். தோலின் துன்னர் - தோல் தைப்பவர். கிழி - படாம்;

இராட்டுத் துணி. கிடை - தக்கை. பால்கெழு மாக்கள் - தொழிலால் பல பிரிவுகள் அமைந்த மக்கள். பால் - பிரிவு.

எஉ. கூலவாணிகர் - நெல், துவரை, முதலிய பண்டங்கள் விலைசெய்யும் வாணிகர். ஆன் வாணிகர் - மாட்டு வாணிகர்.

,, நாழிகைக் கணக்கர் - காலம் அறிந்து சொல்லுவோர்.

,, பொறிகள் - இயந்திரங்கள்; பளிக்கறைகள் - கண்ணாடி மாளிகைகள்.

,, (பாட்டு) மிளை - காவற்காடு. கிடங்கு - அகழி. வளைவில் பொறி - வளைந்து தானே எய்யும் எந்திர வில்; கருவிரல் ஊகம் - கரிய விரலையுடைய குரங்கு போன்ற பொறி. பரிவுறு - வருத்துகின்ற; வெந்நெய் - கொதித்த நெய். பாகு - உலோகக் குழம்பு. அடு - உருக்குகின்ற. குழிசி - குண்டான். தொடக்கு - சங்கிலி. ஆண்டலை - ஆண்டலை என்னும் பறவை வடிவமாகச் செய்த; கவை - பிளப்புள்ள இரும்புக் கருவி. கழு - கழுக்கோல். புதை - அம்புக்கட்டு. புழை - அம்பு விடும் மதிற் சந்துகள். ஐயவித்துலாம் - பகைவர் தலைகளைப் பிடித்து நெருக்கி முறுக்கும் ஒருவகைப் பொறி. கை பெயர் - கையிற் பாயும். சிரல் - சிச்சிலிப் பறவை வடிவமாக அமைந்த பொறி. பன்றி - பன்றி வடிவாகச் செய்த பொறி. பணை - மூங்கில் மரத்தைப் போன்ற வடிவமைந்த பொறி. எழுவும் சீப்பு - கதவுகளைத் தானே மேல் எழச் செய்யும் பொறி; சீப்பு - பற்களமைந்த பொறி. விறல் - வலிமை; கணையம் - திரட்சியாக அமைந்து நுழைவுகளிற் பொருந்துந் தண்டுகள்.

எங. பிறவும் என்றது, நூற்றுவரைக் கொல்லி என்னும் பொறி, களிற்றுப் பொறி, புலிப் பொறி முதலிய பல பொறிகள். ஞாயில் - குருவித்தலை போன்ற மதிலுறுப்பு.

எச. தாழ்விலா - அழிவில்லாத; தள்ளா - குறையாத.

எரு. இளங்கோக்கள் - இளைய அரசர்கள்.

எசு. (பாட்டு) வடு - பழி. வாய் - உண்மை. தம - தம்முடையன; பிற - பிறருடையன. நாடி - கருதி. மிகை - மிகுதியாக. பகர்ந்து - வெளிப்படையாகச் சொல்லி. தொல் - பழைமையான. கொண்டி - செல்வத்திரள். துவன்று இருக்கை - நெருங்கின குடியிருப்பு.

,, பொருளீட்டுதல் - பொருள் திரட்டுதல்.

எஎ. நீரின் - கடல் வழியாக; நிமிர் - நிமிர்ந்த; பரி-நடையினையுடைய; புரவி-குதிரை. காலின் - (நிலத்தில்) வண்டிகள் வழியாக. கறி - மிளகு. மூடை - மூட்டை. வடமலை-இமயமலை. குடமலை - மேற்கு மலை; பொதிய மலை. ஆரம் - சந்தனம். குணகடல் - கிழக்குக் கடல். துகிர் - பவளம். வாரி - வருவாய். ஈழம் - இலங்கை. காழகம் - பர்மா. ஆக்கம் - ஊதியந்தரும். பொருள்கள்.

எஅ. (பாட்டு) நெரிய - நிலம் நெளிய என்றுங் கூறலாம். ஈண்டி - திரண்டு. தலை மயங்கிய - கூடிய. நனதலை - அகன்ற இடத்தையுடைய.

,, கடாரம் - சுமத்திரா முதலிய தீவுகள். சோனகம் - அரபு. யவனம் - கிரேக்கம்.

எகூ. (பாட்டு) கண் அகல் தூ மணி - வடிவம் பெரியதான தூய மணிக்கற்கள். பொருதுதொலை - போரிட்டு அழிந்த; கோடு - கொம்பு. நீர் - அருவி. சிலம்பின் - மலையில். கண் பொருது இமைக்கும் - பார்க்கும்வேட்கையால் கண்கள் தம்முள் போரிட்டு நோக்குதற்குக் காரணமான. இமைத்தல் - இங்கே நோக்குதல். திண் - வலிய. கிளர்ப்ப- ஒளிவிட.

அ௦. முந்நீர் - கடல்.

அக. ஆரிருள் - மிக்க இருள் நள்ளிருள். கலம் - கப்பல். கம்மியர் - தொழிலோர். மருத நிலம் - வயல் நிலம்.

அஉ. (பாட்டு) பிணங்கு-நெருங்கிய. நாப்பண் - நடுவில். எம் - காவல். உணங்கு - மேற்பக்கம் உலர்ந்த. ஓர் எயில் - ஒரே கோட்டை. வாணிகச் சாத்து - வாணிகத் திரள்.

அ௩. (பாட்டு) அணர் - நிமிர்ந்த. முதல் - முதற் பொருள். நாணயம் - நேர்மை.

அச. (பாட்டு) வம்பு - புதுமை.

அஎ. கலையருமை - கலை நுட்பம்; அருங் கலைகள். ஆயர்கள் - இடையர்கள்.

அஅ. பாணர் - பாட்டுப் பாடுவோர். உன்னிப் பார்த்தால்- கூர்ந்து நோக்கினுல். வள்ளுவன் - அரசியலில் அமைச்சுத் தொழில் பூண்பவன்; ஏனாதி - படைத் தலைவன். கொல்லன் - சிற்பி.

கூ௦. (பாட்டு) விசும்பில் - விண்ணில்; வலவன் - ஓட்டுவோன்; ஏவா - செலுத்தாத.

கூஉ. அக்கர இலக்கணம் - எழுத்திலக்கணம். வண்ணம் - நிறங்கள்.

கூ௩. சூழல்-பலர் சூழ்ந்து ஆராய்தல் செய்யும் இடம்.

(பாட்டு) புக்கோ - புகுந்தோ.

கூச. வரி - இசைப்பாட்டு; கந்துகம்-பந்து. வள்ளை-உரல்; வட்டமானது; வள்ளைப்

பாட்டு - உரல் பாட்டு ; உலக்கைப் பாட்டு என்பதும் இது.

கரு. மனம் தோய்ந்து - மனம் படிந்து ; மனம் ஈடுபட்டு.

,, (பாட்டு) ஓர்த்தும் - கேட்டும் ; நயந்தும் - விரும்பிப் பார்த்தும்.

கசு. (பாட்டு) புதல் - புதர். நெகிழ்ந்தன - மலர்ந்தன.

கஎ. (பாட்டு) சாந்தம் - சந்தன மரங்கள். எறிந்து - வெட்டி. சாரல் - மலைப் பக்க நிலம். சாந்தம் எறிந்த இதண் - சந்தன மரங்களை வெட்டி அமைத்த பரண். இதண் மிசை - பரண்மேல். சாந்தம் கமழ - உடம்பிலே பூசியிருக்கிற சந்தனக் குழம்பு மணக்க. காரி மயில்-நீலமயில். இமிழ - இசைபாட. எழா ஆர்த்து - ஆரவாரித்து எழமாட்டா. இசையினால் தம் இனமென்று கருதி அவ்விசையில் மயங்கியிருக்கும் என்பது கருத்து.

,, ஒலியல் - தழைத்த தலையுடைய. வார் - நீண்ட. மயிர் உளரினள் - தலை மயிர் ஆற்றினவளாய். கொடிச்சி - குறிஞ்சி நிலத்துப் பெண். வரை மருங்கில் - மலைப்பக்கத்தில். குறிஞ்சி - குறிஞ்சிப் பண்.

கஅ. (பா) குரல் - கதிர். கொள்ளாது - கொள்ளாமல் ; நிலையினும் பெயராது - நின்ற இடத்திலிருந்தும் அசையாமல். படாஅ - இசை கேட்டு வயமானமையால் இமைத்தலில்லாத, பைங்கண்-பசுமையான கண் ; மெல்லிய கண் - சிறிய கண். பாடு பெற்று - இமைத்தலைப் பெற்று. ஒய்யென - விரைவில். மறம் புகல் மழ களிறு - வலிமை விரும்பிய இளைய ஆண்யானை.

கஅ. (பாட்டு) ஒழுகிய - நீள வளர்ந்த. முரசியர் - ஒலித்தலை யுடையராய். வழூஉச்சொல் - திருத்தமில்லாத சொல். கார்நனை வியன் புலத்தார் - மழையால் நனைந்த அகன்ற நிலத்தார்.

கக. (பாட்டு) காழ் - குத்துக்கோல். வரை - அக் கோலினளவில். ஒருத்தல் - யானையின் ஆண். யாழ்வரை - யாழிசையினளவில். தங்கியாங்கு - தங்கினாற் போல.

,, ஆறு - வழியில் ; அலை - வருத்துகின்ற. பெயர்க்கும் - உண்டாக்கும். மரு - பாலைநிலம் ; பசலை - பாலைப் பண்.

க0உ. இரு மருங்கும் - இரண்டு பக்கத்திலும்.

,, நிறத்தை - உயிர்ப் பண்பை.

க0௩. (பாட்டு) பாவோடு-பாட்டோடு.

க0௪. (பாட்டு) ஒற்றால் - மெய்யெழுத்தினால். சுருதி-இசை. விரவும் - நிரவும்.

க0ரு. காட்டு - கருத்துக்களைக் காட்டுகின்ற.

க0சு. மிடற்றுப் பாடல் - வாய்ப் பாட்டு.

கOஎ. பண் நீர்மைகள் - பண்ணியல்புகள்.

,, (பாட்டு) தண்ணுமை - மத்தளம். தகவே - தகுதியாக. முழவு - குடமுழா. தாமந்திரிகை - ஓர் இசைக் கருவி.

கசுக. (பாட்டு) கார் - மழைகாலத்தால். கோள் - பழுத்தலைக் கொள்கின்ற, பலவு - பலாமரத்தின். காய்த்துணர் - காய்களையுடைய கொத்துக்களை. கடுப்ப - ஒப்ப. நேர்சீர் - ஒத்த அளவாக, சுருக்கி - கயிறு இறுக்கிக் கட்டி, காய - காவடிக் கொம்பின் இருமுனைகளிலும் தூக்கிய. கலப் பையிர் - கலங்களையுடைய பைகளையுடையீராய். கலம் - இசைக் கலங்கள். இசைக் கருவிகள்.

கசுரு. (பாட்டு) அரங்கு - நாடகமாடும் இடம்.

கசுடு. (பாட்டு) திரு நிலை - அழகு நிலைத்தலையுடைய. வாய் புலம்பவும் - ஒலிக்கவும். பரிதரு - விருப்பந் தருகின்ற. படுபறை - ஒலிக்கும் மேளம். ஆர்ப்பவும் - ஒலிக்கவும். திருக் குறிப்பு - அருட்கருத்துக்கள். அருளவும் - வழங்கவும். திசை முகம் - திசையிடங்கள். அலம்பவும் - தடவிவரவும்.

கசுஅ. (பாட்டு) பண் கனிய - பண் உருகிச்சொட்ட; பருகி - வாயாற் பருகுவதுபோல நுகர்ந்து. பயன் நாடகம் - பயனுடைய நாடகம். கண் கனிய - கண் உருக ; கவர்ந்து உண்டு - அள்ளி நுகர்ந்து.

கசுகூ. தலைப்படுவது - எதிர்ப்படுவது.

,, (பாட்டு) அவிநயம் - நடிப்பு. இறைஞ்சிய - குனிந்த. கோடிய - கோணிய. ஒட்டினர் - பொருந்தினர். உணர்ந்திசினோர் - உணர்ந்தோர்.

கஉக. (பாட்டு) பகருங்காலை - சொல்லும்போது. குஞ்சித்து - வளைந்து. ஆலா விரல் - அல்லாத மற்ற நான்கு விரல்களும். மருவி - (ஒன்றோடொன்று) பொருந்தி. மாபிற்று - தன்மையினை யுடையது.

,, (பாட்டு) அறிவுற - தெரியும்படி. கிளப்பின் - எடுத்துச் சொன்னால். அகம் - உட்பக்கம்; உள்ளங்கைப் பக்கம். மாட்சித்து - பெருமையை யுடையது. அந்தம் இல் காட்சி - கெடுதலில்லாத அறிவினை. அறிந்திசினோர் - அறிந்தோர்.

கஉஉ. (பாட்டு) எழில் - அழகு. கவியிற் பொருள் - பாட்டின் கருத்து.

,, (பாட்டு) கூறுமல் - பேசாமல். குறித்ததன் மேல் - கருத்துக் கொண்டதன் மேல். கூளி - பேய். மாறு - பயன் மாறுத. மணி - நீலமணி போன்ற ; திருநீலகண்டம்.

மிடற்று - கழுத்தையுடைய. எண் கையாய் - எட்டுக் கையினையுடையாய்.

(பாட்டு) படுமுறை-பொருள்கள் உருவாகும் முறையாக. பல இயம்ப - பல ஒலிகள் ஒலிக்க. பல் உருவம்-பல வடிவங்களை. பெயர்த்து - நிலை மாற்றி. நீ என்றது சிவபிரானை. கொடு கொட்டி-கை கொட்டியாடுங் கூத்து.

கஉரு. இயக்கிக் கொண்டு - நடத்திக் கொண்டு.

கஉசு. (பாட்டு) திரு - செல்வமடைதல். தெள்ளியராதல் - தெளிவுடையராதல்.

கஉசு. விம்மிதத்தோடு - கிளர்ச்சியோடு. ஆரவாரிக்கின்றன - ஒலிக்கின்றன. ஞாயிறு - சூரியன்.

கஉஎ. ஒடுங்குதல் - ஆற்றல் அடங்குதல்.

கஉஅ. (பாட்டு) அகரம் - அகர எழுத்தை, முதல - முதலாக உடைய. முதற்று - முதலாக உடையது.

பிறழாத - மாறுபடாத. ஒருமைப்பாடு - ஒற்றுமை. அதனை-அவ்வொற்றுமையை. நிலை பெறுத்தி - நிலைபெறச் செய்து.

கஉகூ. (பாட்டு) மேய - விரும்பியுறைகின்ற, காடு உறை - காட்டின் தன்மை தங்குகின்ற; உலகமும் - நிலமும். கண்ணிய - கருதப்பட்டனவாய். துய்ப்பதற்கு - நுகர்வதற்கு.

கஙக. (பாட்டு) உருள் - உருட்சியான. இணர் - கொத்தாகவுள்ள. கடம்பின் - கடப்பமலரின்; ஒலி - தழைத்தலையுடைய. தாரோயே - மாலையையுடையோனே; முருகனே. தார்-மார்பில் அணியும் மலர்மாலை.

கஙஉ. பிழம்பு - குழைந்த பிண்டம். மூத்த குடியினர் - பழங்குடியினர்.

கஙச. (பாட்டு) மை - மேகங்கள் சூழ்ந்த; வரை உலகம் - மலை நிலங்கள். பாகுபாடு - பிரிவு.

கஙரு. (பாட்டு) வால் இழை - ஒளிமிக்க அணிகலன்களையுடைய உமையம்மை - முகிழ்த்தன - தோன்றின. கண்ணியமாய் - பெருந்தோற்றமாய்.

,, குறிகள் - திருவுருவங்கள்; அடையாளம் - உறுப்புக்கள், கருவிகள் முதலியன.

கஙகூ. (பாட்டு) பணியியர் - பணிக. (அத்தை - இதற்குப் பொருளில்லை.) முனிவர் முக்கட் செல்வர் - முனிவரால் தொழப்படுகின்ற சிவபிரான். நகர் - கோயில். பிறவா யாக்கைப் பெரியோன் - சிவபிரான்.